543

திருமாளிகைத் தூண்கள்

# Pillars of the Church

## Part II

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT 1926
MADRAS

A. LAGERQUIST

Published by arrangement with
THE CHURCH OF SWEDEN MISSION

---

CHRI[illegible] [illegible]RATURE SOCIETY FOR INDIA
[illegible]bad Rangoon Colombo
[illegible]1926

Q6
N26

விலை, 8 அணா.

# திருமாளிகைத் தூண்கள்

# Pillars of the Church

## PART II

OFFICE OF THE REGISTRAR
26 OCT 1926
MADRAS

A. LAGERQUIST

*Published by arrangement with*

THE CHURCH OF SWEDEN MISSION

---

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1926

# அட்டவணை

## VI. சுவிசேஷப் பிரபல்லியக் காலம்

### (மிசியோன்)

### 1700—தற்காலம்


| எண். | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | இந்தியா ... ... ... ... ... ... | 1 |
| 2. | பர்மா—அதோனிராம் ஜட்ஸன் ... ... ... | 47 |
| 3. | சீன தேசம் ... ... ... ... ... | 57 |
| 4. | ஜப்பான்—ஜோசெப் ஹார்டி நீஸிமா ... ... | 80 |
| 5. | அமெரிக்கா ... ... ... ... ... | 85 |
| 6. | பஸிபிக் சமுத்திரத் தீவுகள் ... ... ... | 86 |
| 7. | ஆப்பிரிக்கா ... ... ... ... ... | 93 |
| 8. | கிரீன்லாந்து ... ... ... ... | 104 |

# திருமாளிகைத் தூண்கள்

# இரண்டாம் பகுதி

## VI. சுவிசேஷப் பிரபல்லியக் காலம்

(மிஷன்)

1700—தற்காலம்

## 1. இந்தியா

### பர்த்தலோமேயு சீகன்பால்கு

**ஜெ**ர்மானியா தேசத்தின் வடபாகத்திலே ஏற்றமும் தாழ்வுமான ஒரு பூமியுண்டு. மேடும் பள்ளமுமான இந்த இடத்திலே அழகிய விருக்ஷங்கள் அடர்ந்திருக்கும். இப்பூமியின்ஊடே ஒரு நதி பாயும். இந்த நதிக்குப் புல்ஸ்நித்ஸ் என்று பெயர். இவ்வாற்றின் பெயரால் தோன்றிய ஊர் புல்ஸ்நித்ஸ் பட்டணம் எனச் சொல்லப் பெற்றது. இவ்வூரில் சீகன்பால்கு என்ற ஒரு சிறு குடும்பம் இருந்தது. நமது சரித்திரக்காலத்தின் துவக்கத்தில் அக்குடும்பத் தலைவராகிய சீகன்பால்கு தமது மனையாட்டியாகிய கத்தரீனளுடன் வாழ்ந்து சில்லரைக்கடை வியாபாரத்தாலும் பயிர்த்தொழிலைக்கொண்டும் ஜீவனம் நடத்திவந்தார். இவருக்கு 1683-ம் ஞூ ஜூன்மீ 24-ம் வ ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இச்சிசுவுக்கு அப்போஸ்தலருள் ஒருவரான பர்த்தலோமேயுவின் பெயர் கொடுக்கப்பட்டது. இந்தப் பர்த்தலோமேயு அப்போஸ்தலர் இந்தியாவுக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என ஒரு பாரம்பரை யுண்டு. பர்த்தலோமேயு என்ற அப்போஸ்தலர் இத்தேசத்துக்கு வந்த வெகு நூற்றாண்டுகளுக்குப்பின், புல்ஸ்நித்ஸ் ஊரார் பர்த்தலோமேயு இந்தியாவுக்கு, விசேஷமாய்த் தென்



சீகன்பால்கு.

இந்தியாவுக்கு அப்போஸ்தலனாக வருவார் என யார்தான் கண்டிருந்தார்? இவர் ஆறு வயதிலே தமது பெற்றோரை யிழந்து திக்கற்றவரானார். இவர் முந்தி தாயை யிழந்தார். இந்த அம்மாள், தான் சாகுமுன் தனது பிள்ளைகளைத் தன் படுக்கையண்டை அழைத்து: பிள்ளைகளே! உங்களுக்கு ஒரு பெரும் பொக்கிஷத்தைச் சேர்த்து வைத்திருக்கிறேன் என்கையில், மூத்தமகள்: அதெங்கே யிருக்கிறது என்று கேட்டாள். அது என் வேதபுஸ்தகத்தில் இருக்கிறது. அதின் ஏடுகளை என் கண்ணீரால் நனைத்திருக்கிறேன் எனத் தாய் பதில் சொன்னாள். இவர் தகப்பனார் தமது மரணத்திற்குத் தம்மைச் சித்தப்படுத்திக்கொள்ளும்படி, தமக்கு ஒரு சவப்பெட்டி செய்து அதைத் தமது அறையில் வைத்திருந்தார். இம்மட்டும் தான் காணாத இப்பண்டத்தைக் கவனித்த சிறு பிள்ளையாகிய பார்த்தலோமேயு தகப்பனாரைப் பார்த்து: அப்பா! இந்தக் கட்டில் என்னத்துக்கு என்று கேட்டார். தகப்பனார் சொன்ன பதிலைக் கேட்டதிலிருந்து, இவர் மரணத்தைக்குறித்துச் சிந்திக்கத் துவக்கினார். இதற்குக் கொஞ்சக்காலத்திற்குப்பின் அவ்வூரிலே தீ பிடித்துக்கொண்டது. அச்சமயம் இவர் தகப்பனார் அதிக வியாதியாயிருந்ததால் அவரை அந்தப் பிரேதப் பெட்டியில் வைத்து, அக்கினிக்குத் தப்பும்படியாக வெளியே தூக்கிக்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சேர்த்ததும் அவர் அப்பெட்டியிலேயே செத்துப்போனார். இதற்குப்பின் சீகன் பால்கு அவ்வூரிலேயே கலியாணக்காரியான தமது அக்காளிடம் தங்கி, பாக்கியமான வீடும் தாயின் அன்பும் உள்ளவராய் வசித்துவந்தார். இந்த அக்காள் இவருக்குத் தேவவசனத்தையும் பள்ளிக்கூட படிப்பையும் முக்கியப்படுத்திவந்தாள். இதைக்குறித்து அவர் பிற்காலத்தில்: நான் அக்காலம் மோக்ஷம் நரகம் என்பவைகளைக்குறித்துச் சிந்தித்துவந்தேன். தப்பிதம் செய்தபோதெல்லாம் என் உள்ளம் என்னை வாதித்தது. ஊரில் யாராவது செத்துப்போனால் அவர்கள் ஆத்துமா எங்கே போயிருக்கும் என்று சிந்திப்பேன். அதிகமாய்ப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்னும் ஆசை எனக்குண்டாயிற்று. தோப்புகளுக்கும் மலைச்சரிவுகளுக்கும் அடிக்கடி போய், தேவன் எனக்கு ஞானம் தரவேண்டுமென்று ஜெபம் பண்ணுவேன் என்று எழுதினார். பிறகு வேறோர் ஊருக்கு உயர்ந்த படிப்பினிமித்தம் போயிருந்தபோது, அவர் உலக உல்லாசத்தால் இழுப்புண்கையில் சிறு பிராயத்தின் பக்தி கொஞ்சம் தளர்ந்தது. தேவனோ தமது பிள்ளையைக் கைவிடவில்லை. ஒருநாள் இராத்திரி தமது தோழர்களோடுகூடி வாத்தியம் வாசித்துப் பாட்டு பாடிக்கொண்டிருந்தார். நினையாத நேரத்தில் ஒரு

வாலிபன் அங்கு வந்துசேர்ந்தான். இவன் கிறீஸ்தவித்தையைக்குறித்துக் கொஞ்சம் பேசி, தேவனுக்கும் நமக்கும் இருந்த ஞான இசைவு அற்றுப்போனதைப்பற்றி வெகுவாய் எடுத்துச் சொன்னான். இவனது வார்த்தைகள் சீகன்பால்கின் இருதயத்தில் நெருப்புப் பொறிகள்போல் விழுந்து பற்றிக்கொண்டபோது, இவர் அவனைப் பார்த்து: நான் உமக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறேன் என்று சொன்னபோது, அவன்: நீ உலக நேசத்தை விட்டுவிட்டால் நாம் சிநேகிதராயிருக்கலாம் என்றான். அந்நாள் துவக்கி இவ்விருவரும் வேதவாசிப்பிலும் ஜெபத்திலும் ஒருமித்திருந்தார்கள். இந்த ஜீவிய மாறுதலை முன்னிட்டு அவருடைய பழைய சிநேகிதர் அவரைக் கேலிபண்ணவும் துன்பப்படுத்தவும் தொடங்கினார்கள். இதைக்குறித்து அவர் பிற்காலத்திலே: தேவ ஐக்கியத்தினால்வரும் ஆறுதலையும் ஆனந்தத்தையும் என் ஆத்துமா ருசித்துக்கொண்டேயிருந்ததால், இவ்வுலகத்தின் சிற்றின்பங்களை வெறுக்கவும் துன்பங்களைச் சகிக்கவும் எனக்குத் தேவனால் பெலன் கிடைத்தது என்று எழுதினார். தமது மனமாறுதலுக்குப்பின் அவர் தமது சகோதரிகளுக்குப் புத்திமதியான கடிதங்களை எழுதவும் தமது பள்ளித்தோழரில் பக்தியற்றோரைக் கடிந்துகொள்ளவும் தொடங்கினார். இவர் 16 வயதாயிருந்து தமது உத்தம நண்பன் தம்மைவிட்டு வேறூர் போன ஒரு வருஷத்துக்குப்பின் ஒரு பலத்த சோதனைக்குள்ளாயினார். பொன்னை நெருப்பில் புடமிடுவதுபோல, தேவன் தமது முகத்தை மறைத்துத் தமது பிள்ளையைச் சோதனை என்ற அக்கினியில் புடமிடப்படக் கொடுத்தார். இந்தக் காலத்திலே சீகன்பால்கென்ற வாலிபர் சில பாடங்களைப் படித்துக்கொண்டார். மனுஷ இருதயத்தின் பயங்கரமான பொல்லாப்பையும், தேவனின் அதிசயமான பொறுமையையும், உலகத்தாரின் குணப்படாத துணிகர நிலைமையையும் கூர்ந்து பார்த்துத் தம்மையும் முழு உலகத்தையும் வாந்தியெடுக்கத்தக்கனையான வெறுப்படைந்தார். இதினால் அவர் ஒன்பது மாதகாலம் மனம் கசந்து, உடல் மெலிந்து, முகம் வாடினவராயிருந்தார். அவருடைய உபாத்திமார் அவருக்கு அதிகப் பக்ஷம் காண்பித்தாலும் அவரது சமயத்துக்குத் தேவையான உதவி அவர்களால் கிடைக்கவில்லை. வேதவசன வெளிச்சத்தினாலும், தேவச்சமுகப் பிரகாசத்தாலும் ஆறுதலடைந்து தேவனுக்கே ஊழியம் செய்ய தம்மை முழுமனதோடு ஒப்புக்கொடுத்தார். இரண்டு வருஷமாகப் புது ஊக்கத்தோடு தமது கல்வியை அபிவிர்த்தி செய்து வந்தார். பிற்காலத்தில், ஹல்லே பட்டணத்துச் சர்வகலாசாலைப் பண்டிதராயிருந்த பிராங்கே ஐயர் எழுதின பிரசங்கப் புத்தகத்

தை வாசித்து, அவரிடம் ஒரு விசேஷப் பற்றுக்கொண்டு காகிதப் போக்கு வரவால் ஞான உயிர்ப்படைந்து தமது மாணபரியந்தம் அவரைத் தமது ஞானதகப்பனுக அெண்ணி வந்தார். இவர் தமது 19-ம் பிராயத்தில் பெர்லீனுக்குக் கலைபயில வந்தபோது, அங்கே அவருக்குப் பண்டிதரான உண்மையுள்ள சிநேகிதர் பல பேரும் கிடைத்தார்கள். இங்கே இரண்டு மாதம் படிக்கையில் வியாதிப்பட்டு, இவருக்கும் இவர் சிநேகிதருக்கும் துயரமாகத் தமது பிறந்தகத்துக்குச் சுகத்தைப் பார்த்துக்கொள்ள அனுப்பி விடப்பட்டார். இதைக்குறித்து அவர்:—நீண்ட ஆயுளுடன் நான் வீணே ஜீவித்திருப்பதைவிடக் குறுகிய ஜீவியத்துடன் பிரயோஜனமாய் வாழ்வதையே விரும்பினேன் என்றெழுதியிருக்கிறார். இவ்விருப்பத்தின்படி, வேதசாஸ்திரம் படிக்க ஹல்லே பட்டணத்துக்குப் புறப்பட்டுப்போனார். இவர் அங்கு போகு முன்னடியே, இவர் உள்ளம் அவ்விடம் போய்ச சேர்ந்திருந்தது. ஏனெனில் அக்காலத்திலுள்ள மற்ற கலாசாலைகளைவிட இக் கல்லூரியில் பக்திபயிற்சியும், ஒழுங்கும், அன்புள்ள மேல்விசாரணை யும் பொருந்தியிருந்தன. ஒவ்வொரு உபந்நியாசமும் ஜெபத்துடன் துவக்கும். ஒவ்வுநாள்தோறும் பிராங்கே முதலிய பக்திமான்களான குருக்களின் பிரசங்கங்களைக் கேட்கக்கூடும். பின்னும் பிராங்கே ஐயரின் ஆதரவுச்சாலையிலுள்ள பிள்ளைகளிடம் வித்தியாசாலை மாணவர் சமயத்துக்குச் சமயம் வந்து, தங்களின் பிற்கால ஜீவனத்துக்கு உதவக்கூடியவற்றில் உபாத்திமாருடன்கூடி வேலைசெய்து வந்தார்கள். இப்படிச் செய்ததால் ஏழைகளான சாஸ்திர மாணுக்கருக்கு ஒரு அளவான பண உதவி கிடைத்தது. இத்துடன் அங்கே ஞாயிறுதோறும் ஒரு போதகாசிரியரின் வீட்டிலே பக்தரான மாணுக்கர் கூடி வேதம் வாசித்து அதைப் பற்றிச் சம்பாஷிப்பார்கள். ஹல்லேயில் கல்வி கற்றுவருங் காலத்தில், பக்தியுள்ள சிநேகிதர் அவருக்குப் பலர். இப்பலருள் ஒருவர், பிற்காலத்தில் இவருடன் இந்தியாவில் உழைக்கவந்தவரான பிளிட்செள என்பவராம். நான் எங்கே போனலும் அருமைச் சிலுவை என்னுடன் கூடவருகிறது என்று அவர் சொல்லிய படி, அவருடைய பழைய வியாதி இங்கும் அவருக்கு வந்தது. இது தீரா வியாதி என்று வைத்தியர் கூறினபோது, சீகன்பால்கு, ஆண்டவர் தமது ஊழியத்துக்குத் தம்மை உபயோகிக்கமாட்டார் என்று மனம் முறிந்துபோனர். ஏனெனில், இவ்வியாதியினிமித்தம் தமது கல்வியை நிறுத்தவும், சொந்த ஊருக்குப் போய்த் தமது தகப்பனரின் பயிர்த்தொழிலைச் செய்து காலங்கழிக்கவும்

வேண்டியதைக் கண்டுகொண்டார். இதை ஒரு தீர்மானம் ஆக்கிக்கொள்ளுமுன் தமது விசாரணைக்குருவின் ஆலோசனையைக் கேட்கப் போய்: நான் இந்தத் தேசத்திலாவது, தூரத்திலாவது கர்த்தருக்கு ஊழியம் செய்வது என் வாஞ்சை என்று சொன்னபோது, விசாரணைக்குரு இவரை வெகு பட்சமாய் ஆற்றித் தேற்றி, இவருடைய பிற்கால வேலையைப்பற்றி முன்னேக்காய்ச் சில வார்த்தைகளைச் சொல்லி இவரைத் தைரியப்படுத்தினர். அவருடைய சுகவீனத்தினிமித்தம் அவரை ஹல்லேயில் நிறுத்தி வைக்க முடியாதபோதிலும், பிராங்கே சாஸ்திரியார் இவரை மெர்சேபர்க் ஏர்புர்ட் முதலிய இடங்களுக்குக் குடும்ப உபாத்தியாயராக அனுப்பினர். அவர் தமக்குக் குறிக்கப்பட்ட இடங்களுக்குப் போய் உபாத்திமைத்தொழில் நடத்திவரும்போது, அவ்விடங்களிலுள்ள வாலிபர் பக்திக்கூட்டங்கள் வைக்கக் கேட்டுக்கொண்டபடியே கூட்டம் நடத்தினர். பெரியோர் அவரைக் கோவிலில் பிரசங்கிக்க வேண்டினதற்கேற்க, தேவவசனத்தைச் சபையாருக்கு விளக்கிவந்தார். 1705-ம் ௵ பெர்லீனுக்குச் சமீபமான ஒரு ஊரின் குரு தமது சபையைவிட்டுப் பிரிந்திருக்க நேரிட்டபோது 22 வயதுள்ள சீகன்பால்கு அச்சபையில் இரண்டரை மாதம்போல் குருவேலை பார்த்துவந்தார்.

---

## சுவிசேஷ வேலைக்கான அழைப்பும் பிரயாணமும்

சீர்திருத்தலின் காலம் துவக்கி சீகன்பால்கின் நாள் பரியந்தம் லுத்தரன் சபைகளிலே சுவிசேஷத்தைத் தூரதேசங்களிலே பரவச்செய்யவேண்டும் எனும் முயற்சி நடந்ததில்லை. ரிபார்மீர்த்தர் சபையிலேயோ இம்முயற்சி ஒருவாறு நடந்தது. இங்கிலாந்து தேசத்தவரும், ஜெபவீரருமான எல்லியட் போதகர் 1631-ல் வடஅமெரிக்கா தேசச் செவ்விந்தியருக்குள் 60 வருஷமாக ஆசீர்வாதம் உள்ள வேலை செய்தார். ஹொல்லாந்து தேசத்தார் தங்கள் குடியேற்ற நாடுகளில் ஓரளவாய்ச் சுவிசேஷவேலை செய்துவந்தார்கள். டென்மார்க்கு தேசமன்னரான 4-ம் பிரெதெரிக் என்பவர் டேனிஷ்கொடி பறந்த வெளித்தேசங்களுக்குச் சுவிசேஷகரை அனுப்ப மனங்கொண்டார். அவ்வேலைக்குத் தக்கவர்களைத் தமது தேசத்தில் கண்டுபிடியாததினல், தமது அரண்மனைக் குருவான லிட்கென்ஸ் என்பவரைக்கொண்டு 1705-ல் ஜெர்மானிய தேசத்திலிருந்து பயிற்சிபெற்றவர்களான சீகன்பால்கு, பிளிட்செள எனும் இருவரை அழைத்தார். 1705-ம் ௵ அக்

டோபர்மீ 1-ம் உ பெர்லீன் நகரில் குருக்களின் ஒரு கூட்டம் நடந்தது. இக்கூட்டத்திற்கு மேற்சொல்லிய வாலிபர் இருவரும் வந்திருந்தார்கள். டென்மார்க்கரசனின் அழைப்பை இக்கூட்டத்தார் இவ்விருவருக்கும் தெரிவித்தனர். தெரிவிக்கக் கேட்டதற்குப் பதிலாக இவர்கள்: தேவநாமத்தை முன்னிட்டு அஞ்ஞானிகளிடம் புறப்பட்டுப் போவோம்; கர்த்தர் அவர்களுக்குள் எங்களுக்கு ஒரு ஆத்துமாவையாகிலும் தந்தால், அதையே எங்கள் யாத்திரைக்குப் போதுமான பலனாக எண்ணுவோம் என்றார்கள். துரிதமாய்ப் புறப்படவேண்டுமென்ற ராஜகட்டளைக்கமைந்து, உற்றார் உறவினரைக் கண்டு பயணம் சொல்லிக்கொள்ளச் சமயமின்றி டென்மார்க்கு தேசம் புறப்பட்டனர். இவர்களை இங்கே ஒரு அத்தியக்ஷர் பரீக்ஷித்து குருப்பட்டம் தரித்தபின் இவர்கள் நவம்பர்மீ 29-ம் உ இந்தியாவுக்குக் கப்பலேறினார்கள். யாத்திரையில் அவர்களுக்குப் பல துன்பங்கள் நேரிட்டன. பயணத் துவக்கத்தில் கடுங்காற்றும் குளிரும், கடல் கொள்ளைக்காரரின் ஆபத்தும், நடுவில் காற்றில்லாமையும், கடும் உஷ்ணமும் இவர்களை உபாதிக்க, இந்திய சமுத்திரம் வந்தபோது எதிர்காற்றுகளால் இவர்களுடைய மரக்கலத்தின் பாய்மரங்கள் முறிந்துபோயின. 7 மாதங்கள் கொண்ட தங்கள் பிரயாணத்தைக் கடலோடிகளுக்குப் பிரசங்கிப்பதிலும், ஞானப்பாட்டுகளைப் பாடி வாத்தியங்களை வாசிப்பதிலும், ஞான நூல்களை எழுதுவதிலும் கழித்துவந்தார்கள். இதைப் பற்றிச் சீகன்பால்கு எழுதினார்: வியாதியாலும் சோதனையினாலும் எங்கள் யாத்திரையின் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால் காற்றின் மும்முரத்தையும் அலைகளின் முழக்கத்தையும் கவனித்து, எத்தனை வல்லமையான ஆண்டவருக்கு நாங்கள் ஊழியக்காரரும் பிள்ளைகளுமாயிருக்கிறோமென நினைத்துக் களிகூர்ந்தோம். எங்களுக்குள்ளே எப்போதும் ஒரே மனமும் ஒரே சித்தமும் இருந்து வந்தன என்பதாம்.

---

## 1706—1712 மட்டும் தரங்கையில் நடத்திய வேலையும் பட்ட துன்பங்களும்

இப்படிப்பட்ட யாத்திரையின் முடிவாக இவர்கள் 1706-ம் ஞூ ஜூலைமீ துவக்கத்தில் தரங்கைத் துறைமுகம் வந்தார்கள். வந்த பிறகு சுவிசேஷ தானுபதிகளுக்குக் கரையிறங்க எத்தனையான ஆசையிருந்தும் மாலுமியானவன் இவர்களைக் கடலிலே வைத்துவிட்டுத் தான்மாத்திரம் ஊருக்குட் சென்றான். சிலநாட் கழிந்து

அம்மாதம் 9-ம் உ ஒரு படவு அவர்களுக்குக் கிடைத்ததால் அதைப் பிடித்துக்கொண்டு கரை வந்து சேர்ந்தார்கள். இவர்கள் தங்களை ஏற்றுக்கொள்ளுவாரின்றி மைதானத்தில் நாள்முழுவதும் காத்திருக்க நேரிட்டது. பொழுதுபோனபிறகு அத்துருப்பு என்ற ஒரு டேனிஷ் உத்தியோகஸ்தன் தன் மாமன் வீட்டிற்கு இவர்களை அழைத்துப்போனான். இவர்கள் பிரயாசையால் சுவிசேஷ தூதுவருக்குக் கோட்டைவாசலின் பக்கமாய் ஒரு விடுதி கிடைத்தது. இவர்கள் தரங்கையில் வேலை செய்யும்படியாகத் தமிழ், போர்த்துக்கீசு என்ற இரண்டு பாஷைகளைப் படிக்கத் தேவையாயிருந்தது. தமிழ் படிக்க அச்சிட்ட ஒரு புஸ்தகமாவது, இலக்கணமாவது இருந்ததில்லை. ஆதலால் இவர்கள் ஒரு தமிழ் உபாத்தியாயரை அவர் பள்ளிக்கூடப் பிள்ளைகளோடு தங்கள் வீட்டுக்கு வரவழைத்துக்கொண்டார்கள். சுவிசேஷகரும் பிள்ளைகளோடு தரையில் உட்கார்ந்து மணலைப்பரப்பித் தங்கள் விரலால் தமிழ் அக்ஷரங்களை எழுதிப் படித்தார்கள். இந்த உபாத்தியாயர் ஐரோப்பிய பாஷை எதையும் அறியாதவரானபடியால், இவரால் ஐயர்மாருக்கு அதிகப் பிரயோஜனம் வந்ததில்லை. ஐந்து ஐரோப்பிய பாஷைகளை அறிந்த ஒரு துவிபாஷி இவர்களுக்குக் கிடைத்தபின், சீகன்பால்கு எட்டு மாதத்துக்குள் தமிழை நன்றாய்க் கற்றுக்கொண்டார். கற்றுக்கொண்டு, புறமதஸ்தருடன் மார்க்க சம்பாஷணைசெய்து அவர்களுடைய தப்பான கொள்கைகளை எடுத்துக் காண்பிக்க அவர்களுடைய மதநூல்களை ஆராய்ச்சி செய்து வந்தார். 1707-ம் ஸ்ரீ ஜூன் மாதத்தில் லூத்தருடைய சின்ன ஞானோபதேசக் குறிப்பிடத்தைத் தமிழில் மொழிபெயர்த்து முடித்தார். இதை வைத்துக்கொண்டு தங்கள் வீட்டிலே அஞ்ஞானிகளுக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் போதிக்கத் துவக்கினார்கள். போதனை கேட்பவர்களில் ஐந்துபேர் குணப்பட்டு 1707-ம் ஸ்ரீ மே மாதத்தில் இந்நாள்வரைக்கும் இருக்கும் சீயோன் தேவாலயத்தில் முதற்பலனாக ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்படி ஒரு சிறு சபை தோன்றியதால் இதற்கென்று கடல் ஓரத்தில் புது எருசலேம் என்ற பெயருள்ள ஒரு சிறு கோவிலைக்கட்டி அதில் ஆராதனை செய்துவந்தார். பிறகு செப்டெம்பர் மாதத்தில் இப்புதுக் கோவிலில் இன்னொரு கூட்டம் ஞானஸ்நானம் பெற்றது.

சுவிசேஷத்தைத் தஞ்சைச்சீமையின் உள்நாட்டுக்குக் கொண்டு போக விரும்பித் தரங்கைக்கு மேற்கே சிறிதுதூரம் போனபின், கிராமாதிகாரிகள் அவரைத் தடுத்துவிட்டதால் மறுபடியும் தமது இருப்பிடம் வந்து சேர்ந்தார். ஆகிலும் டச்சுக்காரருக்குச் சொந்த

மான நாகப்பட்டணத்துக்கும் இங்கிலிஷ்காரருக்கு ஆதீனமான சென்னபட்டணத்துக்கும் போய்வந்தார். சீகன்பால்கு வாய்மொழியாய் மாத்திரமல்ல, நிருபங்களாலும் தமிழருக்குப் பிரசங்கித்தார். இந்நிருபங்களுக்கு ஐம்பத்தைந்து பதில் நிருபங்கள் அவருக்கு வந்தன. அவர் முந்த முந்த மத்தேயு சுவிசேஷத்தைத் தமிழ்ப்படுத்தி அதை அநேகப் பிரதிகளாக எழுதுவித்தார். 1711-ல் புதியேற்பாட்டாகமங்கள் யாவும் தமிழ்ப்பாஷையில் எழுதப்பட்டு முடிந்தன. இங்கிலாந்திலிருந்தும் ஹல்லேயினின்றும் தர்மமாகக் கிடைத்த அச்சியந்திரங்களைக்கொண்டு முறையே போர்த்துக்கீசிலும் தமிழிலும் வேதபுஸ்தகங்கள் அச்சடிக்கப்பட்டன. தமிழில் பிரசுரமான நூல்கள்: லுத்தரின் சின்ன ஞானோபதேசம், அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம், சீகன்பால்கின் சில சிறு புத்தகங்கள் 1715-ல் ஆன முழுப்புதியேற்பாடு, பிரார்த்தனை என்றவை. அச்சு மூலமாய்ப் புஸ்தகங்கள் பிரசுரமானதால் சுவிசேஷ வேலையானது துரிதமாய்ப் பரம்பக்கூடியதாயிற்று. அஞ்ஞானிகளுக்குள் வேலை செய்த சீகன்பால்குக்கு இவர்களால் வந்த துன்பத்தைச் சகிப்பது அத்தனை பெரிதாயிருந்ததில்லை. பேர்க்கிறிஸ்தவர்களான ஐரோப்பியரால் வந்த துன்பம் திருச்சபைக்கே சேதமாயிருந்தது. அஞ்ஞானிகளும் கிறிஸ்தவர்களுமான பெற்றாரின் பிள்ளைகளுக்கு ஐயர்மார் ஞானஸ்நானம் கொடுத்ததினால் ரோமான் குருக்களின் பகை மூண்டது. அதிகாரிகளில் சிலரின் இடறலான நடக்கையைப்பற்றி மிஷனெரிகள் டென்மார்க்கரசனுக்குத் தெரிவிப்பார்கள் என்கிற பயத்தாலும், ஏழைச்சபையாருக்கு அநீதி நடந்தபோது ஐயர்மார் அவர்களுக்காகப் பரிந்து பேசினதினாலும் துன்பம் அதிகரித்து வந்தது. ஒரு சமயம் இராயப்பன் என்ற ஒருவனுடைய விதவைக்கு ஒரு உத்தியோகஸ்தனால் அநியாயம் நடந்தபோது, ஐயர் நீதிதுரையிடம் அவளுக்காகச் செய்த சிபாரிசு பலிக்காததினால் ஐயர் அக்காரியத்தை நகராதிபதிக்குத் தெரிவித்துக்கொண்டார். இவரைக் கெடுக்கவேண்டுமென்றிருந்த நகராதிபதி, ஐயர் ராஜாங்கவிஷயத்தில் தலையிட்டார் என்று அவரைச் சிறைப்படுத்திவிட்டான். ஒருநாள் சீகன்பால்கு தமது வீட்டிலிருக்கையில், துபாக்கியுடனும் சில சேவகருடனும் ஒரு தலைவன் ஐயர் வீட்டிற்கு வந்து இவரைக் கைதுசெய்யப் போம்போது ஐயர் தாம் ஜெபம் செய்தபின் வருவதாகச் சொல்லி ஜெபித்தார். ஜெபம் முடியுமுன் தலைவன் அவரைத் திட்டி, மேற்சட்டையில்லாதிருந்த அவரை வீட்டுக்கு வெளியே கொண்டுவந்தான். வழி எல்லாம் ஜனம் நிறைந்திருந்தது. சிறைக்கூடமிருந்த உட்கோட்டை

புகுந்தபின், அங்கு கூடியிருந்த நகராதிபதிக்கும் மற்றோருக்கும் ஐயர் மரியாதை வந்தனம் சொன்னபின் தமக்கு நடக்கும் விசாரணையை ஒழுங்காய்ப் பதிவுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு அதிகாரி இணங்காமல் அவரை விசாரிக்கத் தொடங்கினான். ஐயர் பதில் சொல்லாததால் அவரைக் குற்றவாளியாகத் தீர்த்துச் சிறையிலடைத்தான். இவர் அடைபட்ட அறை சமையல்கூடத்துக்கு அருகிலிருந்தபடியால் அடுப்பு நெருப்பினாலும் எதிர் வெய்யிலினாலும் அது அகோரக் காங்கையுள்ளதா யிருந்தது. அவரோடு பேச யாருக்கும் உத்தரவில்லை. புத்தகமாவது, காகிதம், மையாவது அவருக்கு அகப்பட்டதில்லை. ஒருநாள் இரவில் ஜெர்மன்காரரான இரு காவலர் துணிந்து ஜன்னல் வழியாய்க் காகிதமும் ஈயக்கோலும் அவருக்குக் கொடுத்தார்கள். சீகன்பால்கு அவற்றைப் பெற்றுத் தமது நேரத்தைப் பிரயோஜனப்படுத்த மனதாய், இரண்டு சிறு புஸ்தகங்களை எழுதினார். இவர் சரீரநோவும் அசௌக்கியமும் உடையவராயிருந்தும், ஆவியின் ஆறுதலையும் ஆனந்தத்தையும் அனுபவித்து வந்தார். கர்த்தரை நோக்கி ஜெபித்து ஞானப்பாட்டுகளைப் பாடிக்கொண்டேயிருப்பார். காவல்காரர் முதலாய் இதினால் மனதுருகி இவரோடு ஜெபித்துப் பாடினார்கள். இரண்டு மாதம் சென்று ஐயர் நகராதிபதிக்குத் தமது காரியங்களைக்குறித்து நிருபங்கள் எழுதினதின்பேரில் இருவரும் வழக்கை நிறுத்திக்கொண்டு இருவர் கக்ஷிகளையும் அரசனுக்குத் தெரிவித்துக்கொள்வது எனும் தீர்மானத்துக்கு வந்தார்கள். இதின்மேல் நகராதிபதி ஐயரை விடுதலைசெய்ய, இவர் தமது சபையாரிடம் திரும்ப வருகையில் இவர்கள் ஆனந்தக் கண்ணீரோடு இவரை ஏற்றுக்கொண்டார்கள்.

அதிகாரிகளால் துன்பம் வந்தது. 1707 ஜூனில் கடல் ஓரமாய் ஒரு சிறு கோவிலுக்கு அஸ்திபாரம் போட்டிருந்தார்கள். டென்மார்க்கிலிருந்து வருஷந்தோறும் தரங்கைக்கு வரும் கப்பல் துறைமுகம் சேரும்போது, ஆரம்பமான கோவிற்றிருப்பணி முடியும்படி பணம் கிடைக்குமென்று நம்பிக் கப்பலின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். கப்பல் வந்துவிட்டது, பணமோ வரவில்லை. டேனிஷ் ராஜா இவர்களுக்குக் கொடுத்த சம்பளப் பணத்தில் பாதியையும், நண்பர் ஈவாக அளித்தத் தொகையையும் கொண்டு திருப்பணி முற்றுப்பெற்றது. அடுத்த வருஷம் ஆகஸ்ட்டு மாதம் வழக்கம்போல் டேனிஷ் கப்பல் வந்தது. இதிலே ஐயர்மாரை உற்சாகப்படுத்தும் ராஜாவின் நிருபங்களும், ராஜனும் உபகாரிகளும் அருளிய 4,000 ரூபாயும் வந்தன. இதுதான் கர்த்தரின் திருப்

பணிவிடைக்கு வந்த முதலாம் பணமாம். தர்மப் பள்ளிக்கூடங்களையும் சபையின் ஏழைகளையும் ஆதரித்துக் கட்டிடங்களைச் செய்வதற்கு இப்பணம் அதிகத் தேவையாயிருந்தது. பணம் வந்த செய்தி குருமாருக்கு அவர்கள் கோவிலுக்குப் போகுமுன் அறிவிக்கப்பட்டதும், தேவன் தங்கள் பொறுமையைக் கண்ணோக்கி, விசுவாசமுள்ள ஜெபத்துக்குச் செவி சாய்த்தருளின அவரது கிருபைக்காகத் துதிசெலுத்தினர். ஆராதனை முடிந்ததும் நகராதிபதியிடம் போயினர். பணம் கப்பலில் இருப்பதாயும் அன்று மத்தியானம் அது கரைக்கு வரும் என்றும் நகராதிபதி சொன்னான். இதைக்கேட்டு ஐயர்மார் தம் வீட்டுக்குத் திரும்பினர். சில மணிநேரம் சென்று ஒரு ஆள் வந்து பணப்பெட்டியைக் கரைக்கு எடுத்து வந்த படவு முழுகிப்போனதாக ஐயர்மாருக்கு அறிவித்தான். இதற்குக் காரணம் மாலுமியின் அஜாக்கிரதையும் வெறியுமாம். மறுநாள் சில சேவகர் முழுகிப்போன பெட்டியைத் தேடியும் அது அகப்படவில்லை. சீகன்பால்கு டேனிஷ் நகராதிபதியிடம் இதைப்பற்றி முறையிட்டபோது அவன் ஒன்றும் கவனியாமல் கோபம்மாத்திரம் காட்டிக் கையை மடக்கி ஐயர் நெஞ்சில் குத்தினான். எதிரிகள் யாவரும் கெம்பீரித்து இனி மிஷன் வேலை விழுந்துபோம் எனப் பேசிக்கொண்டனர். குருக்களோ வெனில் நடந்த காரியத்தைப்பற்றி ஊரதிகாரிக்குக் கடிதமூலமாய்த் தெரிவித்தபோது, இவன் அதிகச் சீற்றங்கொண்டு பயமுறுத்தலுள்ளதும் விரோதம் காட்டுவதுமான பதில் கடிதமனுப்பினான். ஐயர்மார் ரோமர் 12 : 19-ஐ வாசித்து ஜெபித்து அமர்ந்து இவனை நேரில் கண்டு இவன் கோபத்தைத் தணித்தார்கள். 1709-ல் வந்த கப்பலிலே மூன்று உடனூழியர் ஹல்லேயில் கிடைத்த தர்ம சகாயத்துடன் தரங்கை சேர்ந்தனர். பின்னும் அதே மரக்கலமானது ஐயர்மாருக்கு டேனிஷ் இராணியும் ராஜகுமாரத்தியும் தங்கள் சொந்தக் கைகளால் தீட்டிய நிருபங்களையும் கொணர்ந்ததும் நோயாளிகளுக்கு உதவியாக பிராங்கே ஐயர் இக் கப்பலிலே ஒரு பெட்டி மருந்தும் அனுப்பியிருந்தார். இது நிகழ்ந்து நாலு வருஷக்காலமாகத் தரங்கைக்கு டேனிஷ் கப்பல் வரவில்லை. மனுஷரால் கைவிடப்பட்ட சீகன்பால்கோ விரோதிகளால் இக் காலத்திலும் உண்டான துன்பங்களைக் கிறிஸ்தவப் பொறுமையோடு சகித்துக்கொண்டு தரங்கை நாகப்பட்டணம் முதல் சென்னைவரைக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார். 1714-ம் ஹு அக்டோபர்மீ ஒருநாள் கிறிஸ்தவரும் புறமதஸ்தருமான ஒரு பெருங்கூட்டத்தார் ஐயரைச் சூழ்ந்து கண்ணீர்

சொரிந்து நின்றார்கள். காரணம் என்ன? மறுநாள் ஐயர் கப்பல் ஏறித் தமது ஜென்மதேசம் போக இருந்ததுதான். அவரைச் சூழ நெருங்கிநின்ற எல்லாக் கிறிஸ்தவர்களும் சில புறமதஸ்தரு மான கூட்டத்தார் அவரைப் போகாதிருக்கும்படி கெஞ்சி மன்றாடினார்கள். இப்படி வருந்தியும், தாம் 22 மாதங்களில் திரும்பி வருவதாகவும் இக்காலத்தில் கிரீண்ட்லர் ஐயர் சபையைப் பார்த்து வருவார் என்பதாகவும் சொல்லி அவர்களை ஆற்றித் தேற்றினார். அடுத்தநாள் விடைபெற்று கப்பல் ஏறி யாத்திரைசெய்து ஒன்பது மாதத்தில் நார்வே தேசமடைந்தார்.

---

## ஐரோப்பாவில் நிகழ்ந்த அவருடைய நடபடிகள்

அநேக துன்பங்களினால் அலைசடிப்பட்ட பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குச் சமீபத்தில் சகோதரரைச் சந்திக்கும்போது: அவர்களைக் கண்டு தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தார் என வேதம் சொல்லுகிறது. அதேவிதமாய் இந்தியாவில் பேர்க் கிறிஸ்தவர்களாலும் புறமதஸ்தராலும் அளவிறந்த உபத்திரவங் களை அடைந்த நமது சுவிசேஷ தூதுவர் நார்வே டென்மார்க்கு ஜெர்மனி என்ற தேசங்களின் நண்பர் காட்டிய அன்பினாலும் கரிசனத்தாலும் உற்சாகமடைந்தார். 1714-ல் இந்தியாவுக்குத் திரும்பிவர மரக்கலமேறின அன்றே டேனிஷ் அரசர் அவருக்குச் சிரேஷ்டர் என்ற பட்டம் சூட்டினார். இச்சமயம் சுவீடனுக்கும் டென்மார்க்குக்கும் யுத்தம் நடந்ததால் ஸ்டிரால் சுண்டு என்ற இடத்தைக் கைப்பற்றும்பொருட்டு டேனிஷ் அரசர் அங்கு சில மாதங்களாகத் தங்கியிருந்தார். சீகன்பால்கு தாம் ஹல்லேக்கும் கோபென்ஹேகனுக்கும் வருவதைப்பற்றி அவ்விடங்களுக்குக் கடிதங்கள் அனுப்பிவிட்டுத் தமது ராஜ உபகாரியைப் பார்க்க, ஸ்டிரால் சுண்டுக்குப் போனார். அரசர் தமது மந்திரி, பிரதானிகள், பிரபுக்கள் கூடிய சபையில் வீற்றிருக்கையில் ஏழைக்கோலமான சுவிசேஷகரும் அவர் தம்முடன்கூட்டிப் போயிருந்த ஒரு தமிழ்ப் பையனும் (பேதுரு மலையப்பன்) இராஜ சமுகத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். அரசர் இவர்களை அன்புடன் வரவேற்றுச் சுவிசேஷ வேலையைப்பற்றித் திட்டமாய் விசாரித்து அவர் வாயால் ஞானப்பிரசங்கங்கள் கேட்டுத் தமிழில் அச்சேறியிருந்த வேதாகமப்பிரதி ஒன்றைப் பெற்றுக்கொண்டனர். இவ்விடத்தில் சீகன்பால்கு பத்துநாள் கழித்தது அரசருக்குச் சுவிசேஷ

வேலையில் அதிகக் கரிசனத்தை உண்டுபண்ணினதுமன்றி, அவரது பிரசங்கங்களால் அநேகருக்கு ஆசீர்வாதமும் கிடைத்தது. இந்தியாவில் சுவிசேஷ வேலையைத் தமது மரணபரியந்தம் செய்துவரத் தாம் தீர்மானித்திருந்ததைச் சீகன்பால்கு அரசருக்கு வெளியிட்டபோது, ராயர் அகமகிழ்ந்து அவ்வேலைக்கென்று புதிய உதவி புரிய வாக்களித்துத் தமது சொல்லைத் தமது கடைசிநாள் வரைக்கும் நிறைவேற்றிவந்தார். சிரேஷ்டரானவர் மிகுந்த பலவீன சுகத்தினராய், டென்மார்க்கின் தலைநகரான கோப்பென்ஹேகன் போய்ச் சேர்ந்தார். இப்பட்டணத்தில் அவர் என்ன செய்தார், எது நடப்பித்தார் என அறிவது வெகு முக்கியமானதாம். இவரது சுவிசேஷ வேலைக்கு இடையூறு செய்துவந்த வியாபாரச் சங்கத் தலைவரின் சமுகம் பெற்றுப் பற்பல விண்ணப்பங்களைச் செய்து கடைசியாக: இனி, வியாபாரச் சங்கத்தாராகிய நாம் சுவிசேஷ வேலைக்குப் பிரதிகூலம் செய்யாமல் அதற்குக் காப்பளிப்போம் என்ற உறுதிமொழிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். சீகன்பால்கைப்பற்றிய தீதுமொழிகளை முன் நம்பியிருந்தோர் யாவரும் இப்போது அவரோடு பழகிச் சகவாசம் செய்தபின் அவரைத் தேறின கிறிஸ்தவராகவும் உண்மையுள்ள புருஷராயும் கண்டுகொண்டனர். பக்தியுள்ள இராணியார் அவரை அரண்மனைக்கழைப்பிக்க அவர் போய்ச் சுவிசேஷ வேலையைப்பற்றிய செய்திகளை எடுத்துச்சொல்லி ஞானப்பிரசங்கங்களைச் செய்தார். மேற்கண்ட ஊரிற் சிலகாலம் தங்கித் தமது வேலைக்கான அனுகூலங்களைத் தேடிக்கொண்டபின் ஜர்மனிக்குப் புறப்பட்டார். இங்கு வந்து பழைய சிநேகிதர்களைக் கண்டு களித்துப் புது நண்பரையும் சம்பாதித்துக்கொண்டார். தரங்கையிலிருந்த தேவாலயம் அப்போதையக் கிறிஸ்தவரின் தொகைக்குப் போதாதெனக் கண்ட உபகாரிகள் ஒரு புதுக்கோவிலைக் கட்டும்படியாக உற்சாகமாய்ப் பணம் சேர்த்தார்கள். ஹல்லேயில் ஒன்றரைமாதம் தங்கிப் பக்தரின் அன்பை ருசித்து மகிழ்வெய்தினர். பிராங்கே என்ற போதகரும் அவர் பழைய மாணாக்கரான சீகன்பால்கும் ஒருவரையொருவர் இங்கு கண்டு களிகூர்ந்தார்கள். இவ்வூரில் இவர் மரியாள் தொரொத்தியாள் சாங்ஸ்மன் என்ற மாதைத் தமக்கு உயிர்த்துணைவியாக மணந்துகொண்டார். டிசெம்பர்மீ 2-ம் உ இவர் சிநேகிதர் இவரை இந்தியாவுக்கு வழிகூட்டியனுப்பினர். அனுப்புங்கால் பலர் மனம் விசனங்கொண்டது. விருத்தாப்பியரான அவ்வர் அன்னை இனித் தன் மகனைச் சந்திக்கலாகாதெனகண்டு மிகுந்த துக்கமடைந்தார். வழிப்பயணத்தில் இங்கிலாங்

துக்குச் சென்று அங்கு சிலகாலம் தங்கி, அத்தேச மன்னரான 1-ம் ஜார்ஜ் அரசரையும் கிறிஸ்தவ அறிவு பரிபாலன சங்கத்தாரையும் கண்டு சந்தித்தபின் தங்கள் யாத்திரையைத் தொடர்ந்து நடத்திஞர்கள். கப்பலில் தங்கியிருக்கவேண்டியதான ஐந்து மாதங்களில் ஐயர் வேத ஆராய்ச்சி செய்து, இங்கிலிஷ் பாஷையைப் படித்துத் தமிழ் மொழியைத் தமது மனைவிக்குக் கற்பித்து வந்தார்.

---

## சீகன்பால்கு தரங்கையில் செய்த கடைசி ஊழியமும், அவரது மரணமும்

தரங்கையிலுள்ள தமது சபையை இருபத்தொரு மாதம் பிரிந்திருந்தபின், திரும்பவும் அதை அடைந்துகொண்டார். அங்கத்திய கிறிஸ்தோர் யாவரும் அவரைப்பெற்று ஆனந்தித்தனர். அவர்களில் ஒருவன் ஐயர் கையில் 12 ரூபாயைக் கொடுத்து: இது பள்ளிக்கூடப்பிள்ளைகள் விருந்துண்டு, சிரேஷ்டர் வரவின் நிமித்தம் கர்த்தரைத் துதிப்பதற்காக என்று சொன்ஞன். சுவிசேஷ வேலைக்கு விக்கினம் செய்துகொண்டிருந்த நகராதிபன் வேலையினின்று தள்ளுண்டு டென்மார்க்குத் திரும்பலாஞன். அதிகாரிகளின் தடை நீங்கி, பணம் குறைவின்றி வந்து, ஐயர் புதுப்பலம் அடையவே, அவர் வேலை முன்னேற்றம் பெற்றது. 1717-ல் புது எருசலேம் தேவாலயத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டி அடுத்த வருஷம் கோவிலைப் பிரதிஷ்டை செய்தார்கள். இவ்விடத்தில் ஞாயிறுதோறும் நடக்கும் மூன்று ஆராதனைகளும், புதன் வெள்ளிக்கிழமைகளில் கேள்விப்பிரசங்கமும் பக்திக்கூட்டமும் நடந்துவந்தன. இத்திருமாளிகையில் வெகு தலைமுறைகளாகக் கூடிவந்து திருஸ்நானத்திஞல் சபையில் சேர்ந்து, ஜீவ அப்பமாகிய தேவ வசனத்திஞல் பலமடைந்து, மோக்ஷப் பிரயாணிகளைத் திடப்படுத்தும் திருவிருந்து அருந்தி: உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே எனக் களிகூர்ந்து வந்திருக்கிருர்கள்.

ஐயர்மார் வீடுகளில் காலை மாலை ஜெபம் நடந்துவரும். அதற்கு வீட்டாரும் பள்ளிக்கூடப் பிள்ளைகளும் சபையாரும் வருவார்கள். சபையாரில் எளிமைப்பட்டவர்களின் பிழைப்புக்காக ஒருகடுதாசிப் பட்டையும், நூல் நூற்றல், நூல் பின்னல், துணியில் அச்சடித்தல்

ஆகிய தொழிற்கூடங்களும் ஏற்படுத்தினார்கள். 1716-ல் மிஷனில் பள்ளிக்கூட வேலை பார்ப்பதற்காக உபாத்திமாரைப் பக்குவப்படுத்த ஒரு செமினெரிப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார்கள். இதை எட்டு மாணாக்கரை வைத்துக்கொண்டு சிரேஷ்டர் துவக்கினார். சுவிசேஷ வேலை இவ்வாறு தழைத்து வரும்போது அதற்குத் திடீரென ஒரு ஆபத்து வந்தது. சீகன்பால்கு ஐயர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து இரண்டு வருஷம் சென்றபின், அவருடைய பழைய நோவாகிய வயிற்றுவலியும் இருமலும் அவருக்குக் காணவே, இவர் மிகவும் ஒடுங்கிப்போனார். இவ்வியாதி அதிகரித்ததற்கு விசேஷக் காரணம் அவரது மனவியாகுலமே. ஐயர்மார் தரங்கன்பாடியில் நிலைகொள்ளாமலும் நிலங்களை வாங்கிக் கோவில்களையும், பள்ளிக்கூடங்கள் தொழிற்சாலைகளையும் கட்டாமலும் அப்போஸ்தலரைப்போல் பையும் வட்டுவமுமின்றி ஊர் ஊராய்த் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்று டேனிஷ் மிஷன் சங்கத்தார் அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். இவ்வபிப்பிராயத்துக்குச் சீகன்பால்கு இணங்காமையால் ஷெ சங்கத்தார் இரண்டு வருஷக்காலமாய் மிஷன் கிரியைக்கென்று ஒரு காசுதானும் அனுப்பாதே போனார்கள். இத்துடன் சபையின் சீர் குறைவானது ஐயருக்கு வெகுவான பெருமூச்சை கிளப்பிவிட்டது. சபையில் தாம் செய்த ஊழியத்தின் பலனைக் காணாது சிலருடைய துர் நடக்கையாலும் மறுதலிப்பினாலும் மனநோவடைந்தும் தாயடைவான கரிசனத்தோடு இவர்களைத் தாங்கிப் புத்திசொல்லி வந்தார். இராக்காலங்களில் கண்மூடாமல் கண்ணீர் சொரிந்து ஜெபிப்பார். 1719-ம் ஞு பெப்ருவரிமீ 10உ-ல் மிஷனின் மேல்விசாரணையையும் சொத்துக்களின் பொறுப்பையும் கிரீண்ட்லர் ஐயருக்கு ஒப்படைத்தார். அன்றிரவு ஐயரின் பெலன் அதிகமாய் ஒடுங்கவே அவர் மறுநாட் காலையில் பரி. இராப்போஜனம் வாங்குகையில் :—ஆ, கிறிஸ்துவோடிருக்க எத்தனையாய் வாஞ்சிக்கிறேன், அவர் தமதிரத்தத்தினால் என்னைச் சுத்திகரித்து தம்முடைய நீதியின் வஸ்திரத்தைத் தரித்தவனாகத் தமது ராஜ்யத்தில் பிரவேசிக்க அருள் செய்வாராக எனச் சொன்னார். மாலையில் தமது சபையாரை அழைப்பித்து அவர்களுக்கு உருக்கமான புத்திமதிகளைக் கூறி, உள்ளக்கனிவுடன் அவர்களை வாழ்த்திப் பாலோகப் பயணச்செலவு பெற்றுக்கொண்டனர். 23-ம் தேதி மட்டும் சற்றுச் சுகத்தோடிருந்து தம் மனைவியாருடன் அன்றையக் காலை ஜெபம் நடத்தினார். சாயாட்சை வேளையிலோ அங்கிருந்தவர்களுக்கு, அன்றைத்தினம் ஐயரின் கடைசிநாள் என்னப்பட்ட

தினால் கிரீண்ட்லர் ஐயரைக் கூப்பிட்டனுப்பினார்கள். இவரைச் சூழ்ந்திருந்தவர்கள் இவருக்குச் சொன்ன வார்த்தைகளுக்கும் இவருக்காகச் செய்த ஜெபங்களுக்கும் அவர் மும்முறை பேசினார். அது யாதெனில்: (1) இனி நான் பேசமுடியாது, இம்மட்டும் நான் பேசினதைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. (2) நான் என்னை தினந்தோறும் தேவனுடைய சித்தத்துக்கு ஒப்படைத்து வந்திருக்கிறேன். (3) பிதாவே, நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருக்கவேண்டுமென்றிருக்கிறேன் எனக்கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே என்பதாம். இவ்வாறு மொழிந்தபின் தமது கைகளைக் கண்களின்மேல் வைத்து: சூரியன் என் கண்களில் பிரகாசிக்கிறாப்போல் இருக்கிறதே, இவ்வளவு வெளிச்சம் இங்கே உண்டாயிருக்கிறது எப்படி என்றார். 'என்னை மீட்டுத் தாங்கிய' எனத் துவக்கும் ஞானப்பாட்டைக் கின்னாரத்துடன் பாடக் கேட்டுக்கொண்டார். அவ்வாறே பாடியபின், இவர் விருப்பப்படி இவரை ஒரு நாற்காலியில் சாயவைத்தார்கள். முற்பகல் 11 மணிக்கு அவர் கர்த்தருக்குள் பாக்கியமுள்ளவராய் நித்திரையடைந்தார். கிறிஸ்தவர்களும், புறமதஸ்தருமான திரள் ஜனங்கள் வந்து கூட, ஐயரை அவர் கட்டி முடித்த புது எருசலேம் தேவாலயத்தில் பீடத்துக்கு முன் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று சர்வ மரியாதையுடனும் அடக்கம் செய்தார்கள். கிரீண்ட்லர் ஐயர் பரி. யோவான் 3: 29, 30-ல் எழுதியிருக்கும் வாக்கியங்களின்பேரில் துக்கப்பிரசங்கம் செய்தார்.

---

## கிறிஸ்தியான் பிரதெரிக் சுவார்ச்

### பிறப்பு வளர்ப்பு

கெர்மானிய தேசத்தின் வடபாகத்தில் சொன்னென்புர்க் என்ற ஊரிலே, இவர் 1726-ம் வருஷம் பிறந்தார். ஞானஸ்நானத்தில் கிறிஸ்தியான் பிரதெரிக் என்னும் பெயர் கொடுத்தார்கள். ஐந்து வயதாயிருக்கும்போது இவர் தாய் இறந்துவிட்டாள். சாகுந் தருணத்தில் தன் படுக்கையண்டை இருக்கும் தன் புருஷனையும் குருவையும் பார்த்து: அன்னாள் தன் பிள்ளையாகிய சாமுவேலை எப்படி ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தாளோ, அப்படியே நானும் என் பிள்ளையை அது பிறக்குமுன்னேயே ஆண்டவருக்கு ஒப்புக்



சுவார்ச்சு போதகர்

கொடுத்திருக்கிறேன்; ஆதலால் இப்பிள்ளையைக் குருவேலைக்குப் படிக்கும்படி அனுப்பவேண்டுமென்று சொன்னாள். தன் புருஷனிடம் வாக்கு வாங்கிக்கொண்டபின் இறந்துபோனாள். அவர் அவ்வாக்கை நிறைவேற்றினார். பிள்ளையைச் சிறு வயதிலேயே பள்ளிக்கூடம் அனுப்பினார். பிற்காலத்தில் சுவார்ச்சென்பவர் சிறு பிராயத்திலே அனுபவித்ததெல்லாம் நினைவுகூருவார். அதாவது: ஆண்டவர் அடிக்கடி என் இருதயத்தின் கதவைத் தட்டினார்.

பக்தியுள்ள உபாத்தியாயர் ஆண்டவரிடம் சொந்த வார்த்தையால் பேசலாம் என்று சொன்னபடியே, நான் அடிக்கடி தனித்திருந்து ஆண்டவரோடு சம்பாஷிப்பேன். அப்பொழுது என் உள்ளத்தில் அதிகச் சந்தோஷமுண்டாயிற்று. குற்றம் செய்தபோது பயப் பட்டேன். தேவனிடம் மன்னிப்பு கேட்டபிற்பாடு என் பயம் நீங்கிப்போகும் என்பார். தமது பதினுன்காம் வயதில் திடப் படுத்தல் பெற்ருர். 1740-ல் வேறூருக்குப் படிக்கப்போனுர். போனபின் இவர் தகப்பனுர் இவருக்குப் பணம் தாராளமாகவல்ல, கொஞ்சம் கொஞ்சமாயனுப்பினுர், ஆதலால் சில சமயங்களில் இவர் பகல் சாப்பாடின்றி இருக்க நேரிட்டது. இப்படியிருக்கும் ஒருநாள் ஒரு பக்தியுள்ள புருஷன் இவரிடம் வந்து: நீர் வாரத் துக்கு இரண்டுமுறை என் வீட்டில் என்னேடு சாப்பிடலாம் என்ருர். அப்படியே, கிறிஸ்தியான் பிரெதெரிக்கு அவரோடு சாப்பிட்டு வெளியே வந்தபோது, வானத்தை அண்ணாந்து பார்த்து: இதெல்லாம் என் பரமபிதாவின் நடத்துதலல்லவா! பரலோகத்தில் எனக்கு ஒரு தகப்பன் இருக்கிருர் என்று நினைத் துச் சந்தோஷப்பட்டார். அக்காலத்தில் ஒரு பக்தியுள்ள குரு அவ்வூருக்கு வேலைபார்க்க வந்தார். அவரால் கிறிஸ்தியான் பிரெ தெரிக்கு ஞானவிஷயத்தில் அதிக எழுப்புதலையும் உதவியையும் பெற்றுக்கொண்டார். தமது வாலிபப்பிராயத்திலே இரண்டுமுறை மரணப்படுக்கையி லிருந்துகொண்டு கஷ்டப்பட்டார். இவர் இறந் துபோவார் என நினைத்தார்கள். ஆண்டவரோ, இவருக்கு மறு உயிரையும் சுகத்தையும் அருளிச்செய்தார். இருபதாம் வயதிலே ஹல்லே நகர்ச் சர்வகலாசாலைக்குப் படிக்கப்போனுர். கல்வியிலும் பக்தியிலும் சிறந்தோரான சிலர் அங்கே பண்டிதராய் இருந்தனர். முந்தப் பராபரனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும் என்ற நோக்கத்தோடு சுவார்ச்சு இந்தக் கல்லூ ரிக்கு வந்தார். அக்காலத்தில் அவர் மனச்சமாதானம் அற்றவரா யிருந்தார். அடிக்கடி இவருக்கு ஓர் விதமான திகில் உண்டா யிற்று, அதாவது: நான் திடீரென மரித்தால் மோக்ஷம் சேர மாட்டேனே எனும் திகைப்பாம். பக்திநூல்களைப் படிக்கவும், அடிக்கடி ஞானப்பிரசங்கங்களைக் கேட்கவும் உண்மையுள்ள சிநே கிதரின் சகவாசத்தில் ஊடாடவும் இவருக்குச் சமயம் கிடைத்தது. இவற்ருல் இவர் தேவனை அறிகிற அறிவிலே தேறிவந்தார். ஹல்லேயில் ஒருவருஷம்போல் தங்கினபின், நீதியின் சூரியனுகிய இயேசுகிறிஸ்து இவர் உள்ளத்தில் உதித்தார். இவர் விசுவா சித்து, தேவ ஐக்கியத்தின் பேரின்பத்தை அனுபவித்துக் களிகூரு

ளார். பிராங்கே ஐயர் அநாத பிள்ளைகளுக்காக ஸ்தாபித்திருந்த தர்மசாலையில், அநேக எளிய சர்வகலாசாலை மாணுக்கரைப்போல் சுவார்ச்சும் பாடம் கற்றுக்கொடுத்து வந்தார். சம்பளத்துக்குப் பதிலாக இவருக்கு அன்னமளிக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் சுமார் இருபத்தைந்து வருஷமாகச் சுவிசேஷவேலை செய்திருந்த ஷுல்சு ஐயர் தமது தாய் நாடான கெர்மானியாவுக்குத் திரும்பிவந்து ஹல்லேயில் தங்கியிருந்தார். இவர் சுவார்ச்சுக்கு உண்மையுள்ள சிநேகிதரானர். சுவார்ச்சு பாஷை வரம் பெற்றவரெனக் கண்ட ஷுல்சு ஐயர் அவருக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தார். தமிழ்வேதாகமத்தை ஹல்லேயில் அச்சேற்றவேண்டுமென விரும்பியும் துவக்கமான இவ்வேலை நிறைவேருது போயிற்று. சுவார்ச்சுக்கோ இவ்வந்நிய பாஷையைப் படிப்பது ஆசீர்வாதமாயிருந்தது. தூரதேசமாகிய இந்தியாவில் சுவிசேஷ வேலைசெய்ய ஆண்டவர் என்னை அழைத்தால் அவருக்கு என்ன சொல்லுவேன். ஆனுல் இதை யோசிப்பானேன். அவ்வேலைக்கு நான் அபாத்திரன், தகுதியற்றவன் என்பதாய்த் தமக்குள்ளே ஆலோசிப்பார்.

1749-ல் பிராங்கே போதகர் சுவார்ச்சைத் தம்மிடமழைத்து: டென்மார்க்கு தேசத்துக்குப் போய் அங்கே குருப்பட்டம் பெற்றுச் சுவிசேஷகராகத் தரங்கம்பாடிக்குப் போகச் சம்மதமா? எனக் கேட்டார். அதற்கு உடனே பதில் சொல்லாமல் சிலநாள் யோசித்து ஜெபித்துக்கொண்டே வந்தார். ஜெபித்து வருகையில், ஹல்லேக்குச் சமீபமான ஓரூரில் குருவேலை பார்க்கும்படி அழைக்கப்பெற்றுர். அதிகமாய்ப் போராடி ஜெபித்தபின் சுவிசேஷவேலைக்கு வந்த அழைப்பைக் கைவிட்டார். இப்படிச்செய்யவே இவர் ஆத்துமத்தில் அதிக வேதனையுண்டாகித் தேவசித்தத்துக்கு விரோதமானதைச் செய்தேனே எனச் சந்தேகித்துத் துயரடைந்தார். ஆண்டவரே நான் தள்ளிவிட்ட அழைப்பு உமதேயானுல், மனுஷரால் இன்னெருமுறை நான் அழைக்கப்படக் கடாட்சித்தருளும் எனப் பிரார்த்தித்தார். இரண்டாம் அழைப்பும் சிலநாட்களுக்குள் வந்துவிட்டது. மாட்டேன் என்னுமல், உத்தரவு பெற்றுக்கொண்டு சொந்த ஊர்போய் இந்தியாவில் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி தந்தையரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இவரது வயோதிகத் தகப்பனுர் கண்ணீரோடும் மனக்கலக்கத்தோடும் ஆண்டவர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே: உன் தேசத்தையும் உன் தகப்பனின் வீட்டையும் விட்டு தூரதேசத்துக்குப் போ, நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று

சொல்லித் தனது மூத்தகுமாரனை வழிவிட்டனுப்பினர். சுவார்ச்சும், இன்னும் இரு சுவிசேஷத் தூதுவரும் டென்மார்க்கு வழியாய் இங்கிலாந்து சென்று ஏழு மாதம் கடல்யாத்திரை செய்து தரங்கம்பாடியை அடைந்தனர்.

---

## இந்தியாவில்

1750-ல் இந்தியாவுக்கு வந்து கொஞ்சங்குறைய 50 வருஷம் சொந்த தேசத்தையும் இனத்தாரையும் திரும்பப் பாராதவராய்க் கர்த்தரின் மகிமைக்காகவும் அநேக ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கென்றும் இங்கேயே உழைத்தார். இவர் முக்கியவேலை எங்கு நடந்ததெனில், 1750–1762 தரங்கையிலும் 1762–1772 திருச்சினுப்பள்ளியிலும் 1772–1798 தஞ்சையிலுந்தான். தரங்கை வந்தவுடன் தமிழ் படிப்பது அவருக்குப் பிரதான கவலையாயிற்று. இந்து சமயத்தை அறிந்துகொள்ள மிகவும் முயன்றார். எருசலேம் கோவிலில் பிரசங்கித்து ஆண் பெண் பாடசாலைகளில் வேதத்தைச் சொல்லிக்கொடுத்துத் தமது அன்பினுலும் விசுவாசத்தாலும் உடன் சகோதரரின் மனத்தைக் குளிரப்பண்ணினர். தாம் சுவீகாரம் புகுந்த தேசத்தில் சுமார் ஒரு வருஷம் உழைத்தபின் பிராங்கே பண்டிதருக்கு அடியிற்கண்டவாறு எழுதினர்: நான் என் அருமைச் சகோதரரோடு க்ஷேமமாயிருக்கின்றேன். காய்ச்சலாலும் இரத்தச்சிலந்தியினுலும் ஆண்டவர் என்னைப் புடமிடப்பார்க்கிருரே! ஆ! ஆ! அவருக்குப் பிரீதியில்லாததெல்லாம் என்னைவிட்டு நீங்கிப்போவதாக. அவருக்கு என்னை முற்றுமுடிய ஒப்புக்கொடுத்திருக்கிறேன். தேவன் தமது கிருபையினுல் எங்களை முடிசூட்டுவார் எனச் சந்தோஷத்தோடிருக்கிறோம். அவருடைய பரிசுத்த நாமத்துக்குத் துதி உண்டாவதாக என்பதே. டென்மார்க்கு ராஜாவால் அனுப்பப்பட்ட சுவிசேஷகர் இதுமட்டும் டேனிஷ்காரர் குடியேறின நாட்டிலே மாத்திரம் தேவ வசனத்தைப் பிரசங்கித்து வந்தார்கள். இப்படிச் செய்தும் மற்ற நாடுகளிலிருந்தும் விசேஷமாய்த் தஞ்சாவூர்ச் சீமையிலிருந்து ஜனங்கள் தரங்கைக்கு வந்து ஐயர்மாரிடத்தில் கிறிஸ்து மார்க்கச் சத்தியங்களைப் படித்து ஞானஸ்நானம் பெற்று தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிவிடுவார்கள். 1751, 1752-ல் இவர்கள் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். மேற்கண்ட வருஷங்க

ளில் சுவார்ச்சையர் எட்டு மாதமாக வகுப்புக்களை வைத்துக் காலை மாலை அவர்களைப் போதித்து திருஞானஸ்நானத்துக்கு அவர்களை யத்தனப்படுத்தினார். தங்கள் நாட்டில் அக்கியானத்தால் சூழ்ந்திருக்கும் அவர்களையும் வழிதப்பிப்போன மற்ற ஆடுகளையும் அடிக்கடி சந்திக்கவும் தேடவும் தரங்கையிலுள்ள குருக்களுக்கு அதிக ஆசை. சுவார்ச்சையருடைய உள்ளத்திலோ இந்த வாஞ்சை பற்றி எரிகிற அக்கினிபோலிருந்தது. தஞ்சாவூர் ராஜா ஆளுகிற நாட்டுக்குப் போனால் பிராண அபாயம் உண்டாகக்கூடும் என்றறிந்தும், அங்கு வசிக்கும் ஆத்துமாக்களின்மேலுள்ள பக்தி வைராக்கியத்தினால் அதைக் கவனிக்காமல் அங்கே போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்பது அவருடைய நோக்கம். ஆனால் முந்தத் தமது ஞானத்தகப்பனான பிராங்கே என்பவருக்கெழுதிக் காரியத்தை விளக்கி, அவரிடம் ஆலோசனை கேட்டார். அதற்குப் பிராங்கே: மேலான அதிகாரிகளுடைய உத்தரவின்றித் தேவனுடைய ஊழியக்காரர் ஓர் தேசத்தில் புகுந்து சுவிசேஷ வேலையைச் செய்வது சரியல்ல. ஓர் ஊரில் துன்பப்பட்டால் அடுத்த ஊருக்குப் புறப்படவேண்டுமென்று கிறிஸ்துநாதர் தமது சீஷருக்குக் கற்பித்தார்; தெளிவான அழைப்பு இல்லாவிடில் நாம் நம்மை மோசத்துக்குட்படுத்திக்கொள்ளக்கூடாது என்றெழுதினார். இந்த உத்தாரப்படிச் செய்யவும் தஞ்சாவூரில் சுதேசக் கிறிஸ்தவர்கள்கூட துன்பப்படுவார்கள் என்று அறிந்து சுவார்ச்சையர் கதவு திறக்கப்படவில்லை என்று பொறுமையோடு காத்திருக்கவேண்டியவரானார். பத்து வருஷம் கழித்து, ராஜ உத்தரவு கிடைக்கவே, திரிச்சினாப்பள்ளியிலிருந்து இவ்வூருக்குச் சென்றார். 1755-ல் டேனிஷ் ஹல்லே மிசியோனின் 50-ம் வருஷோற்சவம் தரங்கையில் கொண்டாடப்பட்டது. அக்காலத்தில் யுத்தத்தினால் உண்டாகும் திகிலும் துன்பமும் இவ்வூருக்கு வந்தெட்டிற்று. ஜூலை 1-ம் உ தஞ்சாவூர் பக்கத்திலிருந்து சேவகரின் கூட்டம் வந்து தில்லையாடி என்ற சிற்றூரிலுள்ள டேனிஷ் சேனையை மேற்கொண்டு, வீடுகளைக் கொளுத்திப் பொருட்களைக் கொள்ளையாடிப் பிறையாற்றுக்குட் புகுந்து அங்குள்ள பெத்லகேம் கோவிலைச் சேதப்படுத்திவிட்டு அதின் திருப்பாத்திரங்களைக் கொண்டுபோய்விட்டார்கள். தரங்கை முழுவதையும் அக்கினிக்கிரையாக்கிப் போடுவதே சேனைத்தலைவரின் நோக்கமாயிருந்தது. நினையாத நேரத்திலே அவர்களுக்குள் வாக்குவாதம் நேரிட்டதால், இந்த யோசனையை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். ஆபத்திலே என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது

உன்னை நான் விடுவிப்பேன் என்ற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றின பரம தகப்பனை மகிமைப்படுத்தத் தரங்கையிலுள்ள கிறிஸ்தவர்கள் சங்கீர்த்தனங்களாலும் தேவவசனப் பிரசங்கத்தினாலும் உற்சவதினத்தைக் கொண்டாடினார்கள். சுவார்ச்சையர் இந்தியாவிலே உழைத்த முதல் பத்து வருஷங்களில் அநேக துன்பங்களையும் சோதனைகளையும் சகித்துவந்தார். அவற்றுட் சிலவற்றையெடுத்துரைப்போம். 1759-ல் நெஞ்சுவலியால் பீடிக்கப்பட்டு, இடைவிடாமல் கோவிலிலும் வீட்டிலும் சத்திரங்களிலும் தேவவசனத்தைப் பிரசங்கிக்கிற இவர், அருமையான தமது வேலையை மற்றச் சகோதாருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டுச் சும்மாவிருக்க நேரிட்டது. ஆனால் மேற்கண்ட வருஷத்தில் இலங்கைத் தீவிலுள்ள லுத்தரன் கிறிஸ்தவர்கள் தரங்கைக்கு எழுதி ஒரு குருவை தங்களுக்கு அனுப்பும்படி பிரார்த்தித்தபோது, சுவார்ச்சையர் அனுப்பப்பட்டார். அங்குப் போனவுடன் சற்று சுகப்பட்டுச் சுமார் மூன்றுமாதமாகப் பலத்த வேலை செய்தார். பெந்தெகோஸ்தே பண்டிகைக்கு முந்தின வாரத்தில் 400 பேரைத திருஇராப்போஜனத்திற்குப் பக்குவப்படுத்தினார். தனித்தனியே அவர்களோடு சம்பாஷித்துப் போதித்துக்கொண்டே வந்தார். காய்ச்சலில் விழுந்ததால் சமயாசமயங்களில் படுக்கையிலிருக்க வேண்டியவரானார். பண்டிகையின் இரண்டாம் நாளில் அகோர ஜுரத்தினால் படுக்கையிலே கிடந்துவிட்டார். அவருடைய மரணத்தறுவாய் இதுவேயென்று எல்லாரும் எண்ணியிருக்கையில், தேவன் தமது தாசரின் கையைப் பிடித்து, வியாதியை நீக்கிச் சுகத்தோடு எழுப்பிவிட்டார். ஏறக்குறைய இரண்டுமாதமாய் இன்னும் அத்தீவிலே திருப்பணிவிடை செய்தபின் தரங்கைக்குத் திரும்பினார்.

---

## திருச்சினாப்பள்ளியில் செய்த வேலை

## (1762—1772)

மேற்கண்டபடி, இம்மட்டும் சுவிசேஷ வேலையானது தரங்கம்பாடியிலும் நாகப்பட்டணத்திலும் இவற்றின் சுற்றுப்புறங்களிலும் நடந்துகொண்டிருந்தது. டேனிஷ் வியாபாரச் சங்கத்தார் தரங்கம்பாடி மாகாணத்தைத் தஞ்சை ராஜனிடம் குத்தகைக்கு வாங்கிக்கொண்டதுபோல், ஹொல்லாந்து வர்த்தகக்கூட்டத்தார் நாகப்

பட்டணத்தை அவனிடமே வாங்கிக்கொண்டனர். தஞ்சை ராஜ்யத்தில் அலங்கத்தினுலும் அகழியினுலும் அரண்பெற்றிருந்த தலைநகர் ஒன்றுண்டு. விசாலித்த இவ்விராஜ்யத்தில் நிலவளம் பொருந்திய அநேகம் பூமிகள் இருக்கின்றன. இவை பிராமணர்களாலும் விக்கிரகக்கோவில்களாலும் நிறைந்தவை. பதினுரும் நூற்ருண்டில் ரோமான் குருக்கள் இவ்விராஜ்யத்தில் வேலைசெய்துவந்தார்கள். அவர்களின் சபையாரோ, இந்துமத விக்கிரகங்களை ஒழித்துவிட்டபோதிலும், தேவமாதா, அர்ச்செயசிஷ்டர் என்றவர்களின் சொரூபங்களை வணங்கிவந்தார்கள். சுவிசேஷக் குருக்கள் அங்கே போய் வேலைசெய்ய வெகு வருஷங்களாய் ஆசித்தாலும், ராஜ்யாதிகாரிகளாலும் ரோமானித்தராலும் தடைபட்டுவந்தார்கள். இந்த நாட்டுக்குள் தமது திருவசனத்தைக் கொண்டுபோகும்படி உலகத்தார் கண்முன் மேன்மையில்லா ஒரு கருவியைக் கர்த்தர் தெரிந்துகொண்டிருந்தார். தஞ்சாவூர் ராஜாவின் சேனையில் இராஜநாய்க்கன் என்னும் ஓர் சேவகன் இருந்தான். இவன் தாழ்ந்த குலத்தில் பிறந்தும் சொற்பபுத்தியுள்ளவனல்ல. சிறு பிராயத்தில் ரோமான் குருக்களால் ஞானஸ்நானம் பெற்றிருந்தும், இருபத்திரண்டு வயதுமட்டும் படிப்பில்லாதவனுயிருந்தான். வாசிக்கப் படித்துக்கொண்டபின், அர்ச்செயசிஷ்டரைப்பற்றியும் தேவமாதாவைக் குறித்தும் சொல்லுகிற சில புஸ்தகங்களை வாசித்தறிந்து, கிறிஸ்துவைக் குறித்தும் சிலவற்றைத் தெரிந்துகொண்டான். இரட்சகருடைய பாடுகளைத் தியானிக்கையில், பாவத்தின் அகோரத்தையும் ஓரளவாக உணர்ந்துகொண்டான். இன்னும் அநேகப் புஸ்தகங்களை வாசிக்கவேண்டுமென்று வெகு ஆவல்கொண்டிருந்தான். ஆதிமனுஷர் எப்படியிருந்தார்களோ, இயேசுநாதர் என் புஸ்தகத்திலில்லாத அநேகக் காரியங்களைச் செய்திருந்தாரோ என யோசித்துவந்தான். ரோமானித்தரோ, சத்தியவேதத்தைத் தமிழ்ப்பாஷையில் திருப்பாதிருந்தமையால், முழுவேதபுஸ்தகமும் இராஜநாய்க்கனுக்குக் கிடைக்கவில்லை. 1725-ம் வருஷத்தில் ஒருநாள் இவன் ஒரு இந்துச் சந்நியாசியைச் சந்தித்தான். அவன் கையில் சீகன்பால்கு ஐயர் மொழிபெயர்த்த நாலு சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடிகளுமுள்ள ஓர் புத்தகமிருந்தது. அச்சந்நியாசி படிப்பில்லாதவனுதலால் இராஜநாய்க்கன் கையிலிருந்து ஒரு தலைப்பாகையைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்ப் புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டான். நமது சேவகன் ஆனந்தங்கொண்டு, அல்லும் பகலும் அதைப் படித்துக்கொண்டேயிருந்தான். இரண்டு வருஷம் கழித்து இராஜநாய்க்கனின் பவிஞ்சு தாங்கைக்குச் சமீபமான ஓர்

இடத்துக்கு அனுப்பப்பட்டது. மேற்சொல்லிய ஊரிலே, தேவ மாதாவைப் பணியாத குருக்கள் உண்டென்று கேள்விப்பட்டு அங்கே போய் அவர்களோடு சம்பாஷித்தான். அவர்களிடம் சுவி சேஷத்துக்குரிய சில புஸ்தகங்களைக்கொண்டு தனது இருப்பிடத் துக்குத் திரும்பினான். 1728-ல் விலையேறப்பெற்ற முத்தைக் கண்டுபிடித்தவனாக ஐயர்மாரிடம் வந்தான். வானத்தின் நட்சத் திரங்கள் பிரகாசிக்கிறவண்ணமாக தேவவாக்குப் பிரகாசிக்குமே எனச் சொல்லிச் சுவிசேஷச் சபையில் தன்னை ஏற்றுக்கொள்ளும் படி வேண்டிக்கொண்டான். இவன் ஏற்கனவே ரோமான் சபை யின் அவயவமானபடியால் குருக்கள் அவனுடைய விண்ணப்பத்தின் படியே செய்யாமல், விசுவாசத்தில் அவனைப் பலப்படுத்தி அனுப்பி விட்டார்கள். மூன்று மாதம் சென்று, இந்துமதஸ்தரான மூன்று சேவகரைக் கூட்டிவந்தான். தான் அறிந்தமட்டும் அவர்களைப் போதித்துத் திருச்சபையிலே சேரும்படி அவர்களைப் பக்குவப் படுத்திக்கொண்டிருந்தான். தஞ்சாவூர் நாட்டுக்கும் தீவிரமாய்ச் சுவிசேஷத்தை அனுப்பும்படி வருந்திக்கேட்டான். இரட்சண்ய வழியில் நன்றாய் உபதேசிக்கப்பட்டபின் சுவிசேஷச் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டான். 1728-ம் வருஷத் துவக்கத்தில் பிரெஸ்ஸியர் ஐயர் தெலுங்கு ராஜா என்னப்பட்ட ராஜகுமாரனால் வரவழைக்கப்பட்டுத் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தார். ராஜகுடும்பத் தாருக்கும் அரண்மனையிலுள்ள மற்றவர்களுக்கும் வேதத்தை விளக் கிக்காட்டுவதோடுகூட, ஊருக்குள்ளும்போய் இயேசுகிறிஸ்துவே ஒன்றான இரட்சகர் என்று பிரசங்கித்துவந்தார். ஒருநாள் சில மகமதியர் அவர்மேல் பாய்ந்தபோது, ராஜகுமாரன் தன்னுடைய சேவகரோடு அக்ஷணமே அவ்விடம் வந்திராவிட்டால் அவர்கள் ஐயரின் உயிரை வாங்கியிருப்பார்களாம். இனித் தஞ்சாவூரில் தங்காமல் தரங்கை வந்தடைந்தார். ராஜநாய்க்கனே தன் சேவ கத்தை ஒழித்துவிட்டபின், தஞ்சையில் சுவிசேஷப் பசிதாகமுள்ள ஆத்துமாக்களுக்கு வசனத்தைப்போதிக்கச் சுவிசேஷகனாக அனுப் பப்பட்டான். இதற்கு முன் தஞ்சாவூராரான 15 பேர் தரங் கையில் வந்து ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள்.

ராஜநாய்க்கனுக்குத் தெளிந்த புத்தியோடுகூட ஆச்சரியப் படத்தக்க ஞாபகசக்தியும் இருந்தது. வியாதியிலும் மரண அவஸ் தையிலும் அகப்பட்டவர்களோடு சம்பாஷித்து, அவர்களுக்கு இரட்சண்யவழியை விளக்கிக்காட்டுவது அவனுடைய விசேஷித்த வரமாம். இந்துக்கள் நடுவிலே சுவிசேஷ வேலையைச் செய்த லுத்தரன் மிசியோனின் முதலாம் உபதேசி இவன்தான். கர்த்

தரின் மகிமைக்கென்று இவன் உழைக்குங்காலத்தில் அடிக்கடி இந்துக்களினாலும் ரோமானித்தராலும் துன்பப்பட்டான். ரோமான் பாதிரியார் இவனுடைய தகப்பன் வீட்டைத் தரையோடு தரையாக்கிவிட்டு, சுவிசேஷச்சபையில் சேர்ந்த அவன் தந்தையையும் சகோதரனையும் கொலைசெய்வித்து, லுத்தரன் சபையை நிந்திக்கும் புஸ்தகங்களை எழுதினார்கள். ராஜநாய்க்கன் போகுமிடமெல்லாம், இவனை ரகசியமாகத் தொலைத்துப்போடும்படி ஆட்களுக்குக் கைக்கூலி கொடுத்திருந்தார்கள். இவனோ சகல துன்பங்களிலும் தர்க்கங்களிலும் சத்திய வேதத்தையே தன் ஆயுதமாக வைத்துக்கொண்டு ஜெயம் அடைந்தான். நான் வாஞ்சிக்கும் மகிமை எனக்குக் கிடைக்கும்படி என் ஆண்டவர் துன்பங்களின் மூலமாய் என்னைப் பக்குவப்படுத்துவார். அவருடைய உத்தரவின்றி எனக்கு ஒன்றும் நேரிடாது என்பான்.

அக்காலத்தில் உண்டான பஞ்சம், யுத்தம், கொள்ளைநோய் என்னும் உபாதைகளினாலே மனுஷருடைய இருதயங்களைத் தேவன் யத்தனப்படுத்திக்கொண்டிருந்தார். சுவிசேஷக்கிறிஸ்தவர்களுடைய உத்தம ஜீவியத்தைப் பார்த்து அநேக இந்துக்களும் ரோமானித்தரும் குணப்பட்டார்கள். தேவன் வானத்திலிருந்து மழையை வருஷிக்கப்பண்ணும்போது, வரண்டுபோன பூமியிலிருந்து பயிர் முளைக்கும் வண்ணமாக அக்காலத்தில் ஆவியானவரின் ஊற்றுதலால் இருதயங்கள் மென்மையாக்கப்பட்டு, இரட்சிக்கப்படும்படி என்னசெய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்குப் போதிக்கவும் அவர்களோடும் அவர்களுக்காகவும் ஜெபிக்கவும் தரங்கையில் உள்ள ஐயர்மார் தங்கள் காலத்தைச் செலவிட்டு வந்தார்கள். அறுப்பில் மகிழ்கிறதுபோலவும், கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகையில் களிகூருகிறதுபோலவும் களிகூர்ந்தார்கள். உயிர்ப்பிக்கப்பட்ட ஆத்துமாக்கள் இட்ட சாக்ஷிகளில் சிலவற்றைப் பார்ப்போமாக. ஓர் ஏழை ஸ்திரீ: என் நிமித்தமாகவே முட்கிரீடம் தரித்தார். நான் மரணபரியந்தம் உண்மையாய் இருப்பேன் என்றும், வேறு ஒருத்தி: நான் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிந்து, என் பாவத்துக்காக என் உள்ளத்தில் மெய்ம்மனஸ்தாபத்தை உண்டாக்கியருளும்; என்னை இரட்சித்து உமது மோக்ஷ பாக்கியத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளும் எனப் பிரார்த்திக்கிறேனே. அவர் என்னை அழைத்துக்கொண்டு என் மீறுதல்களை மன்னிக்கிறார். இயேசுபகவான்பேரிலே வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறேன். அவருடைய இரத்தம் என் ஆத்துமத்தில் பாய்ந்திருக்கிறது என்றும் சொன்னாள். இந்துக்களான தனது

உறவின்முறையாரால் கொடிய துன்பம் அனுபவித்த ஒரு வாலி பன்: என் இயேசுவானவரின் நிமித்தம் எந்தச் சிலுவையையும் சுமக்கத் தயாராயிருக்கிறேன். என்னுயிர் போனாலும் நான் அவரை மறுதலிக்கமாட்டேன். என் சத்துருக்களின் பாதங்கள் என்னை மிதிக்க இதோ யத்தனமாயிருக்கிறேன் என்பதாம்.

1738–ல் தஞ்சாவூரிலே 474 இந்துக்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களில் பூசாரியான ஒருவன் மனந்திரும்பினபின் அநேகரைக் கிறிஸ்துவினிடம் வழிநடத்தினான். மதுரையிலிருந்தும் ஜனங்கள் வந்து சபையில் சேர்ந்தார்கள். ஞானப்பிரகாசம் என்னும்பெயர்பெற்ற இவ்வூரான் ஒருவன் அநேகச் சொந்தக்காரரையும் முகமறிந்தவர்களையும் பிசாசின் வல்லமையினின்று தேவனுடைய ராஜ்யத்துக்குக் கொண்டுவந்தான். ஆசேர் என்னும் ஓர் பள்ளிக்கூடப் பையன் மரிக்கும்போது: இயேசு சுவாமி என்னை அழைக்கிறார், நான் சந்தோஷமாய்ப் போவேன், அவர் என்னைத் தமது மடியிலே வைத்துக்கொண்டு தமது அங்கியினால் என்னைப் போர்த்துகிறார், நான் செத்தாலும் சாவேன் என்று நினையாதேயுங்கள், நான் உயிரோடேயே யிருப்பேன் என்று சொன்னான்.

அநேக வருஷமாகப் பக்திவைராக்கியத்தோடு ராஜநாய்க்கன் உழைத்தபின், அவனுடைய ஆத்துமாவைப் பிடிக்கும்படி சாத்தான் விரித்திருந்த ஒரு கண்ணியில் அவன் சிக்கிக்கொண்டான். தஞ்சாவூர் ராஜா அவனுடைய உத்தம குணத்தைக் கவனித்து அவனுக்கு ஒரு உலக உத்தியோகத்தைக் கொடுக்கப்பார்த்தான். இதைப்பெற்று உத்தியோகம் நடத்திவருகையில் கடுமையான அநேகச் சோதனைகளுக்குள்ளானான். கடைசியில் தனது ஜாதியாருக்குரிய பாவத்தில் விழுந்து, மதுபானப்பிரியன் ஆனதால், தனது போதகப்பிதாக்களுக்கு அதிக வேதனையை உண்டுபண்ணினான். சில வருஷத்துக்குப்பின்னே, அவன் உணர்வடைந்து குணம்மாறி மரணபரியந்தம் தேவனுக்கென்று பிழைக்கக் கிருபை பெற்றான்.

தஞ்சாவூருக்கு 30 மைல் தூரத்தில் உள்ள அரணான ஒரு பட்டணமுண்டு. இதின் பெயர் திருச்சினாப்பள்ளி. மிஷன் வேலை அங்கே துவக்கினகாலத்தில் இவ்வூரை மகமது ஆலி ஆண்டு வந்தான். சுவிசேஷவேலைக்கென்று தஞ்சாவூர் ஒரு போர்ச்சேவகனால் திறக்கப்பட்டதுபோல், திருச்சியும் ஓர் போர்ச்சேவகனால் திறவுண்டது. இவன் பெயர் செட்டிநாய்க்கன். சுவார்ச்சு ஐயர் 1762-ம் ௵ முதல்முறையாக இவ்வூருக்கு வந்தபோது சுகக்

குறைவாயிருந்தார். அங்கே நடந்த வேலையைப்பற்றி அறிக்கை யெழுதச் சக்தியற்றவராயுமிருந்தார். செக்லின் ஐயர் மேற்கண்ட வருஷம் ஹல்லேயுக்கு எழுதிய கடிதத்தில்: பிரிய சகோதரனை சுவார்ச்சு பலக்குறைவுள்ளவராயிருந்தும், ஒரு பெரிய வேலையை ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வேலையில் அவர் தமது மாமிசத்தில் குத்தும் அம்முள்ளால் ஓயாமல் கஷ்டப்படுகிறார். தங்களை முற்று முடிய ஆண்டவருடைய கையிலே ஒப்புக்கொடுக்கிறவர்களை அவர் எவ்வளவு அதிசயமாய்ப் பெலப்படுத்தி உபயோகிக்கிறார் என்பதைப் பார்க்கிறோம் என்று சொல்லுகிறார்.

திருச்சியில் குடியிருந்து அடிக்கடி தஞ்சாவூருக்குப் போய்க் கிறிஸ்தவர்களுக்குள்ளும் இந்துக்களுக்குள்ளும் ஊழியம்செய்வார். அவருடைய முதல் அறிக்கை: செத்தவர்களாக விளங்கினாலும், இதோ உயிரோடிருக்கிறோம் என்னும் வார்த்தைகளோடு துவக்கும். ஒரு வருஷமாக இவ்விரண்டு ஊர்களிலும் வேலை செய்த பின், மதுரையைப் பிடிக்க வைக்கப்பட்டிருந்த சேனையில் காயப்பட்டவர்களுக்குள் ஆறுதலான வசனிப்பினாலும், திரு இராப் போஜனத்தாலும் அநேகரை மரணத்தைச் சந்திக்கப் பக்குவப்படுத்தினார். இங்கிலிஷ் சேனாபதியும் மகமதிய நவாப்பும் சுவார்ச்சையைத் தங்களுக்காகத் தேவனிடம் பரிந்துபேசும்படி வேண்டினார்கள். தமிழிலும் இங்கிலிஷிலும் பிரசங்கிக்கிறதுபோல, தமது தாய் பாஷையான கெர்மானிய மொழியிலும் அடிக்கடி ஆராதனை நடத்தி வந்தார். சுமார் மூன்றுமாதம் சேனையின் நடுவில் உழைத்த பிறகு, காய்ச்சலால் பீடிக்கப்பட்டுத் திருச்சிக்குத் திரும்பி வந்தார். இவ்வூரிலே 1765-ல் ஓர் கோவிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. இக்கோவில் மிஷன் பணத்தினால் அல்ல, இவ்விடத்திலேயே சேர்க்கப்பட்ட பணத்தினால் கட்டப்பட்டது. இதின் பேர் கிறிஸ்துவின் கோவில். திருச்சிக்கோட்டைக் கருகில் இன்னும் அக்கோவிலையும் ஐயர் வீட்டையும் பார்க்கலாம். சொற்பச்சம்பளம் வாங்கிக்கொண்டு சாதாரண போஜனத்தைச் சாப்பிட்டு ஜீவனம்பண்ணினார். ஒருநாள் ஓரூருக்குப் போய்ப் பிரசங்கம்பண்ணினபின் அவர் ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்துத் தமது சாப்பாட்டுக்காகக் காத்திருந்தார். வேலைக்காரப்பையன் இலை கொண்டுவந்து, சாப்பாடுபோட்டபின், ஐயர் ஜெபம் பண்ணத் துவக்கினார். போஜனம் அருளியதற்காகத் தேவனை துதித்து, நன்றியறிதலினாலும் பரம ஆனந்தத்தாலும் நிறைந்தவராக வெகு நேரமாய் ஜெபத்தியானத்திலே அமிழ்ந்திருந்தார். சிறுவனோ தாங்கலடைந்து, ஜெபம் நீண்டுபோவதால் சோறு

ஆறிப்போகுமே எனப் புலம்பினான். ஐயரோ: தேவனுடைய கடாட்சத்தை அனுபவிக்கிற நாம் துதிசெலுத்தின வாயினாலும், ஜெபத்துக்கு ஏறெடுக்கப்பட்ட கையினாலுமன்றிச் சாப்பிடலாகாது என்று கண்டித்தார்.

கிறிஸ்தவர்களுக்குள்ளும் புறமதஸ்தருக்குள்ளும் இவர் வேலை செய்யும் இக்காலத்தில் எதிர்பாராத பக்கத்திலிருந்து இவருக்குத் துன்பம் நேரிட்டது. தரங்கையில் சுவிசேஷ வேலையை நடப்பிக்கும் சில சகோதரரும் ஹல்லே பட்டணத்திலுள்ள சங்கத்தாரும் சுவார்ச்சையர் தரங்கையிலே உழைக்காமல், திருச்சியிலும் தஞ்சையிலும் ஊழியம் செய்ததை விரும்பாதவராய் சுய இஷ்டத்தின்படியும் பிடிவாதத்தின் பேரிலும் அப்படிச் செய்ததாகக் குறைகூற ஆரம்பித்தார்கள். இக்காரியத்தைப்பற்றிய கடிதங்கள் ஐயர் கைக்கு வந்தெட்டியபோது இவர் அதைரியப்பட்டுப் போகாமல்: தென் இந்தியாவின் காளவாய் நெருப்பான திருச்சியில் தங்காமல் சமுத்திரக்கரையிலுள்ள தரங்கைக்கு வந்து வசிக்க எனக்கு ஆசைதான். அப்படி கிடைக்கும்பக்ஷத்தில் நானும் மற்றச் சகோதரரைப்போல விவாகம்பண்ணிக் குடும்பத்தின் நடுவில் வாழலாமே. இங்கு இருப்பதில் என் இரட்சகரின் நாமத்தை அறிவிப்பதையன்றி எனக்கு வேறே எந்த நோக்கமுமில்லை. அப்படியிருந்தும் என்னுடைய அபிப்பிராயம் தப்பாயிருக்குமேயானால் சங்கத்தாருடைய கட்டளையின்படி நான் இங்குத் தங்கவாவது, இவ்விடத்தைவிட்டுப் புறப்படவாவது தயாராயிருக்கிறேன் என எழுதினார். இப்படியிருக்குங்கால் சென்னையிலுள்ள தேசாதிபதி அவரைச் சேனைக் குருவாக ராஜாங்கச் சம்பளம் பெற்றுத் திருச்சியில் தங்கும்படி அவருக்கு அழைப்பு நிருபம் அனுப்பினர். இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளச் சுவார்ச்சையருக்குப் பிரியமில்லை. என்றாலும் இவ்விரண்டு பெரிய பட்டணங்களையும் கைவிடச் சகிக்க முடியாமலும், அழைப்பை ஏற்றுக்கொண்டாலும் டேனிஷ்ஹல்லே மிஷனெரியாக எண்ணப்படுவார் என்னும் வாக்குப்பெற்றமையாலும் இம்மேன்மையான அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

---

## பிலிப்பு ஐயர் சரித்திரம்

இந்துமதஸ்தருக்குள் நடக்கும் சுவிசேஷவேலையில் சுவார்ச்சையருக்குச் சில உண்மையுள்ள உடனூழியர் இருந்தார்கள். அவர்களில் பிலிப்பு என்பவன் ஒருவன்.

நாகப்பட்டணத்துக்குச் சமீபமான ஓர் இடத்தில் ஓர் தாயான வள் தன் மகனை இழந்திருந்தாள். எவ்விதமாயென்ருல், அடிமை வியாபாரி ஒருவன் அப்பையனைத் திருடி, தரங்கைக்குக் கொண்டு போய் விற்றுப்போட்டான். இச்சங்கதியை அறியாத அந்த ஏழைத் தாய் சில மாதமாய்த் தன் மகனைத் தேடிக்கொண்டிருந்தும் கண்டுபிடிக்கவில்லை. தரங்கைக்கும் வந்து, அங்கேயும் அவனைக் காணவில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை எருசலேம் கோவிலைப் பார்த்து: இது என்ன கோவில் என்று வினவ, இது மெய்யான தேவனுடைய ஆலயம் என்று பதில் அடைந்து, வியாகுலத்தில் மூழ்கியிருந்த அவள், கோவிலை நோக்கி: இங்கே சேவிக்கப்படும் தேவனே, நீ மெய்யான தேவனுனல் என் பிள்ளையை எனக்குக் கொடு என்ருள். கொஞ்சநேரத்துக்குள் ரஸ்தாவில் ஓட்டப்பட்ட அடிமைகளின் கூட்டத்தில் தன் மகனைக் கண்டுபிடித்து, ஆவ லோடு ஓடிவந்து அவனை அணைத்துக்கொண்டு முத்தம் இட்டாள். வியாபாரியோ அவனை விடுதலையாக்கித் தாய்க்குக் கொடுக்க சம்ம திக்கவில்லை. சில நாளுக்குப் பின், இந்த ஸ்திரீ மறுபடியும் எரு சலேம் கோவிலண்டை வந்து: இங்கே சேவிக்கப்படுகிற தேவனே, பத்து நாளுக்குள் என் மகனை விடுதலையாக்கி எனக்குக் கொடுத் தால், நானும் என் பிள்ளைகளும் உனக்கு அடிமையாவோம் எனப் பொருத்தனை செய்துகொண்டாள். பத்தாவது நாளில் பிள்ளை யாண்டான் விடுதலையானுன். ஆனுல் அந்த ஸ்திரீ தன் வாக்கை மறந்துவிட்டு, வீட்டுக்குப் போய் வழக்கப்படி தன் குலதெய்வத் தைக் கும்பிட்டு வந்தாள். ஒருநாள் இரவு ஒரு சொப்பனம் கண் டாள். அதாவது, எருசலேம் கோவிலில் அவள் பார்த்த குரு வைப்போல் உடுத்தியிருந்த ஒரு பெரியவர் அவளிடம் வந்து: நீ கொடுத்த வாக்கை நிறைவேற்ருதிருப்பதென்ன? நிறைவேற்றி ஞல்தான் உனக்கு நன்மையாயிருக்கும் என்ருர். காலையில் எழுந்திருந்து, தரங்கைக்குப் போய்த் தன் மகனைப் பள்ளிக்கூடத் தில் ஒப்புவித்துத் தான் கிறிஸ்துமார்க்கத்தின் போதகத்தைப் படித்துச் சபையில் சேர்ந்துகொண்டாள். அவள் மரணமட்டும் மனச்சாக்ஷியுள்ள கிறிஸ்தவளாகப் பிழைத்தாள். உதாரணமாக, காலையில் ஜெபம்பண்ணுமுன் ஒருவரோடும் பேசமாட்டாள்.

அவள் மகன் ஞானஸ்நானத்தில் பிலிப்பு என்ற பெயர்பெற்று உபாத்தியாயர்—உபதேசியார் வேலைகளைச் செய்து 1772-ல் குருப் பட்டம் பெற்ருர். பதினைந்து வருஷக்காலமாக இவ்வூழியத்தில் நிலைத்துச் சாகும்போது நற்சாக்ஷி பெற்றுக்கொண்டார். ஐயரு டைய அறிக்கையில்: பிலிப்புப் போதகர் மரித்துப்போனது அவரு

டைய சபைக்குப் பெரிய நஷ்டம். அவரைப்போன்ற உண்மையுள்ள ஒருவராவது அவ்வேலைக்கு நியமிக்கும்படி கிடைக்கவில்லை. சபையாருக்குள் மனப்பிரியத்தோடு ஊழியஞ் செய்துவந்தார் என எழுதியிருக்கிறது.

---

## சம்பாஷணைப் பிரசங்கம்

ஓர் சமயம் சுவார்ச்சையர் கூடலூரில் ஒரு இந்துக்கோவிலுக்கு முன் நின்று ஜனங்களோடு பேச ஆரம்பித்தனர். அப்பொழுது ஒருவன் வந்து: ஐயா, ஐயா, இது ஒரு கோவில் என்றான். அதற்கையர்: பயப்படாதே, நான் ஒரு கல்லையாவது எடுத்துக்கொண்டு போகமாட்டேன் என மறுமொழி சொன்னார்.

வேறொரு சமயம் அவர் ஒரு விக்கிரகம் வைத்திருந்த ஓர் மரத்தடியில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டிருக்கையில்: சுவாமி இருக்கிறாரே, நெருங்கி உட்காரவேண்டாம் என ஓர் இந்து சொல்ல, ஐயர்: அவரே சொல்லட்டும், நான் கிட்ட இருக்கிறது அவருக்குப் பிரியமில்லாத பக்ஷத்தில் என்னைத் துரத்திவிடலாமே என்றனர். கூடின ஜனங்கள் எல்லாரும் சிரித்துக்கொண்டு அவர் கிட்டவந்து சுவிசேஷப் பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்டார்கள்.

ஒருநாள் ஒரு பிராமணன் ஐயரிடம் வந்து: ஐயா, ஒரு பறையனைத் தொடுவது கெடுதிதானா என்று கேட்டான். ஆம், ஆம், கெடுதிதான் என்று ஐயர் உரைத்தார். பிராமணன் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் நீங்கள் யாரைப் பறையன் என்பீர்கள் என, ஐயர்: திருடன், பொய்யன், மோசக்காரன், குடிகாரன், விபசாரக்காரன், அகந்தையுள்ளவன் எவனோ, அவனே பறையன் என்று பதிலளித்தனர். இதைக்கேட்ட அப்பிராமணன் மனச்சாக்ஷியில் குத்துண்டு வெட்கத்துடன் போய்விட்டான்.

முகஸ்துதி பேசுகிறவர்களைச் சுவார்ச்சையர் கண்டிப்பது வழக்கம். ஒரு சமயம் பிராமணன் ஒருவன்: நீங்கள் பாவம்போக்கு வதைப்பற்றி எப்பொழுதும் பேசுகிறீர்கள். உங்கள் முகத்தைப் பார்த்தால் போதுமே, இக்காட்சியினாலேயே எங்கள் பாவம் போய்விடும் என்க, ஐயர்: ஆஹா, நீங்கள் வியாதியாயிருக்கையில் வைத்தியரைப் பார்த்து, உம்முடைய முகத்தைப் பார்த்தால் போதும், மருந்து வேண்டியதில்லை என்பீர்களோ? இவ்விதப் பேச்சு வீணாயிருக்குமென்று உங்களுக்கு நன்றாய்த் தெரியுமே. தேவனுக்

கடுத்த காரியங்களைக்குறித்து என் அசட்டையாய்ப் பேசுகிறீர்கள் என்றார்.

கும்பகோணத்தில் ஒருநாள் திருவிழாக் கொண்டாட்டம் நடக்கையில், ஐயர் செட்டிநாய்க்கனை அழைத்துக்கொண்டு ஜனக் கூட்டத்தில் நுழைந்து, விக்கிரகாராதனையில் மூழ்கியிருந்த இந்துக்களைப் பார்த்து மனதுருகி அவர்களோடு பேசினார். வேத புஸ்தகத்தில் சில பகுதிகளை வாசித்து விவரித்தபின், ஓர் பிராமணன்: நீங்கள் சொல்வதெல்லாம் மெய்தான்; ஆனால் நாங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதபடி, கண்களின் துராசையும் மாமிசத்தின் இச்சையும் எங்களைத் தடுத்துவிடுமே என்றான்.

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் என்ற வாக்குக்கிசைய, ஐயர் ஒருநாள் பாடையைத் தூக்கிக்கொண்டுபோன ஜனக் கூட்டத்தோடு சேர்ந்து, சுடுகாட்டுக்குப் போனார். பிரேதம் எரிந்துகொண்டிருக்கும்போதே, மெய்ம்மார்க்கத்தின் போதகத்தை அங்குள்ளவர்களுக்கு விளக்கினார். கடைசியாய்: நான் உங்களை இகழ்ச்சியாக நினைத்துக்கொண்டு பேசுகிறேன் என்று எண்ணாதேயுங்கள். நாமெல்லாரும் ஒரே தகப்பனின் பிள்ளைகள். நீங்கள் அன்பும் மகத்துவமுமுள்ள பரம தகப்பனை விட்டுவிட்டுச் சுரூபங்களை வணங்குவது கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு வேதனையாம். நாம் எல்லாரும் கணக்குக் கொடுக்கவேண்டிய ஒரு நாள் வரும் என்பது உங்களுக்குத் தெரியுமே. அந்நாளில் நீங்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் ஆக்கினைத்தீர்ப்பு அடையும்போது, கிறிஸ்தவ சகோதரரான நாங்கள் உங்களை எச்சரிக்கவில்லையென்று நீங்கள் சொல்லாதபடி, இதோ இரட்சிக்கப்படும்படி தேவனிடம் மனந்திரும்புங்கள் என்று நான் இப்பொழுது உங்களை வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று சொல்லி முடித்தார்.

உயர்ந்த உத்தியோகத்திலுள்ள ஒரு இங்கிலிஷ்காரன் ஒருநாள் ஆணையிட்டுத் தன்னைச் சபித்துக்கொள்ளுகிறதைக் கேட்ட சுவார்ச்சையர் அவன் தோளின்மேல் கையை வைத்து: நீங்கள் என்ன சொன்னீர்கள், நான் அப்படிச் சொல்லமாட்டேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று நான் சொல்லுவேன் என்றார்.

மகமது ஆலி என்னும் நவாபு கிறிஸ்து மார்க்கத்தின்மேல் பிரியமில்லாதவனாயிருந்தும், சுவார்ச்சையரிடம் அன்பு பாராட்டி வந்தான். திருச்சியில் கிறிஸ்துவின் கோவில் கட்டப்படும்போது, அதைத் தடுக்காமல் ஐயரைச் சந்தித்துப் பேசினபின், அவரைப் பற்றி: அந்த மனிதனைச் சிநேகிக்கிறேன் என்று சொன்னான்.

நவாபுவின் மகனுன மதுர் உல்முல்க் என்பவனே, கிறிஸ்தவர்களைப் பகைத்து உறையூரில் கட்டியிருந்த ஒரு கிறிஸ்தவ கோவிலை இடித்துப்போட்டு, கட்டப்பட்டு வந்த ஒரு தர்ம வைத்தியசாலையை அது முடியாதபடிக்குத் தடைசெய்தான். கிறிஸ்துமார்க்கத்தில் சேர விரும்பின மகமதியரைப் பயமுறுத்தலாலும் சிறையிலடைத்து வைத்தலாலும் தடுத்தான்.

---

## தஞ்சாவூரில் செய்த வேலை

## (1772—1798)

**1763-ல்** துளசிராஜா தஞ்சாவூரில் சிம்மாசனமேறினுன். அவன் அடிக்கடி சுவார்ச்சு ஐயரைத் தன் அரண்மனைக் கழைப்பித்து, வேதசத்தியங்களைக் கேட்பான். அரசாண்டபோதும் சிறையிலடைப்பட்ட காலத்தும் ஐயரோடு மார்க்க சம்பாஷணை செய்வான். இது துளசியின் மந்திரிகளுக்கும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்கும் பிரியமாயிருந்ததில்லை. வழியருகே விதைக்கப்பட்ட விதையை ஆகாசத்துப் பக்ஷிகள் எடுத்துப்போனது போல, மேற்கண்டவர்கள் அரசனின் இருதயத்தில் விதைக்கப்பட்ட தேவ வசனத்தை எடுத்துப்போட வகைதேடினுர்கள். ராஜ்யவிஷயமாக, துளசியானவன் சுவார்ச்சையால் தனக்குச் சகாயம் கிடைக்கும் என நம்பியிருந்தான். அவ்வாறே நவாபிடத்திலும் ஆங்கிலேயரிடமும் தனக்காகப் பரிந்துபேச அவரை வேண்டிக்கொண்டான். அவன் சொல்லி மன்றுடியது: பாதிரியாரே, நீர் சிறிதும் பணத்தில் இச்சையற்றவரானபடியால் உமது மேல் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பதாம். அதற்கு ஐயர்: உங்களில் யார் வாயிலும் நிசம்வராது; கொடுத்த வாக்கை மீறுவதுமாத்திரம் உண்டு; ஆகையால் நான் தலையிடமாட்டேன் என்றுர். துளசிராஜன் மரணப்படுக்கையிலிருந்தபோது சுவார்ச்சை அழைப்பித்துத் தன் பக்கத்தில் நின்ற சுவீகாரப் புத்திரனை சரபோஜியை ஐயருக்குக் காண்பித்து: இவன் என் பிள்ளையல்ல, உம்முடைய பிள்ளை என்று அவரிடம் ஒப்புவித்தான். ஐயரோ, பட்டக்குமாரனைத் தாம் வளர்ப்பதும் அவன் இளமையில் ராஜ்யத்தை நிர்வகிப்பதும் தம்மால் முடியாமையால், அரசனின் தம்பியாகிய அமாசிங்கை அதற்கு நியமிக்க யோசனை சொல்லி, அரசனின் மனதைப் பரலோகத்துக்குத் திருப்பப் புத்திமதி

சொன்னார். அன்றே பட்டத்தரசன் சென்றுபோனான். ஐயர் உத்தரவாதத்தை விலகப்பார்த்தாலும் இளவரசனின் கல்விப் பயிற்சி, சன்மார்க்க வளர்ப்பு, ராஜ்ய பாத்தியம் என்றிவற்றில் கரிசனம் காட்டிவந்தார். தமது மரணப்படுக்கையிலுங்கூட சரபோஜியின் ஆத்துமத்துக்காகக் கவலைப்பட்டு விக்கிரகாராதனையை ஒழிக்கவும் மெய்த்தேவனை வணங்கவும் அவனுக்குப் புத்தி சொன்னார். சரபோஜி தனது ஞானத்தகப்பனை சுவார்ச்சையருக்கு நன்றிசெலுத்துகிறவனாக கிறிஸ்தவர்களுக்கென்று சில பூஸ்திதிகளைக் கொடுத்தான். ஐயர் ஆங்கிலப்போர்வீரருக்காகத் தஞ்சைக் கோட்டையில் கட்டியிருந்த ஆலயத்தில் அவர் ஞாபகத்துக்கென்று ஒரு சிலை செய்வித்திருக்கிறான்.

1778-ல் சுவார்ச்சையர் திருநெல்வேலிக்குப் பயணம்போனார். அந்நாட்டார் சுவிசேஷத்தைக் கேட்கவும், அதை அறிந்துகொள்ளவும் தங்களுக்கிருந்த ஆசையை வெளியிட்டு, ஐயரைப்பார்த்து: நீங்கள் வந்து வேதத்தைச் சொல்லிப் போய்விடுவதில் என்ன காரியம் இருக்கிறது, நீங்கள் எங்களிடம் வந்து, தங்கியிருந்து சொல்லிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இவர்களுக்குள் முதல் முதல் குணப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவள் கிளாரிந்தாள் என்ற ஒரு பிராமண விதவை. இவள் தன் மகனைச் சுவார்ச்சின் வளர்ப்புக்கொப்படைத்து, பாளையங்கோட்டைக் கிறிஸ்தவர்களுக்காக பிற்காலத்தில் ஒரு கோவிலைக் கட்டிக் கொடுத்தாள். இளம்பயிரான அவ்விடத்துச் சபைகளில் உழைப்பது ஐயருக்கு எத்தனை பிரீதியாயிருந்தும், மற்ற இடங்களிலும் உழைக்கவேண்டியவரா யிருந்ததால், அப்படிச் செய்ய முடியாமல் போயிற்று. எனினும் உபதேசிமார்களைத் துவக்கத்திலும், சத்தியநாதன் ஐயரைப் பிறகும் அவ்விடங்களுக்கு நியமித்துச் சபை விசாரணை செய்துவந்தார். சத்தியநாதன் ஐயர் தமது மரணபரியந்தம் அவ்விடங்களில் உண்மையாய் உழைத்துவந்தார்.

திருநெல்வேலிப் பாளையங்கோட்டையில் ஞானஸ்நானம் பெற்றவர்களில் ஒருவர் தேவசகாயம் என்பவர். அவருடைய பத்து வயதுள்ள மகன் ஓரிரவு பண்ணின ஜெபத்தை சுவார்ச்சையர் அவன் அறியாது கேட்டு, அவன்மேல் அன்புகூர்ந்து, அவனைப் படிக்கவைத்து வளர்க்கும்படி தஞ்சைக்கழைத்துப்போனார். இவன் பெயர் வேதநாயகம். ஒருநாள் ஐயர் படுத்திருக்கையில், இவன் வேதத்தை அவர் கேட்க வாசித்தான். ஐயர் தமக்குக் கால் வலிக்கிறதென்று சொன்னபோது, வேதநாயகம் அவருக்குக் கால் அமுக்கிவிட்டான். இந்நேரத்தில் ஐயர் மோக்ஷத்தில் கிடைக்கும்

ஆனந்தத்தைப்பற்றி இவனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அதைக்கேட்ட பிள்ளையாண்டான்: ஐயா! நான் உங்களோடு கூட அங்குவந்து, எப்போதும் உங்களுக்குக் கால் பிடித்துக் கொண்டிருப்பேன் என்றான். அதற்கு ஐயர்: அருமைப்பிள்ளையே, மோக்ஷத்திலே கால்வலிக்கும் என்று நினைக்கிறாயா? அங்கே பெலவீனமும் வலியும் இல்லையே, நீ மோக்ஷத்தைப்பற்றி இன்னம் அதிகமாய்ப் படிக்கவேண்டியதாயிருக்கிறது என உரைத்தார். வேதநாயகம் தேவ அறிவில் வளர்ந்து கவிகட்டுவதில் விசேஷ வரம்பெற்றவனாகித் தன்னை வெளிப்படுத்தினான். ஆண்டவருக்கு ஊழியம் செய்வதிலேயே இவ்வரத்தை உபயோகித்தான். வசனநடையான பிரசங்கத்தைவிட பஜனை மேரையான பிரசங்கம் கேட்பது சில ஜனங்களுக்குப் பிரியமாயிருந்தது. 50 வருஷம்போல் இவர் பஜனைப் பிரசங்கங்களைத் தஞ்சையில் நடத்திவந்தார். இந்நாள்மட்டும் இச்சுவிசேஷக் கவிராயரின் பாட்டுகள் தமிழ்நாட்டுச் சுவிசேஷச் சபைகளின் பெரும் பொக்கிஷமாயிருந்துவருகின்றன. இந்த அருமைப் புருஷரான வேதநாயக சாஸ்திரியார் 1864-ல் காலஞ்சென்றார்.

---

## அந்திய காலம்

அநேக வருஷங்களாய்ச் சுகத்துடன் உழைத்தபின், ஐயருக்கு திடீரென நோய் கண்டு தாராளமாய் மூச்சுவிட முடியாதபடிக்குக் கஷ்டப்பட்டார். இவ்வுபாதை முடிந்ததும் இவர்: என் அருமை இரட்சகர் இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று எனக்கு அறிவிக்கும்படி இந்த வியாதியை எனக்கு எச்சரிப்பாய் அனுப்பியிருக்கிறார். ஒவ்வொரு தினத்திலும் நான் விழித்திருந்து ஜெபம்பண்ணி யத்தனமாயிருப்பேனாக என்று தெரிவித்தார். இதற்குமேல் இரண்டு வருஷம் உழைத்தபின் மறுபடியும் நோக்காட்டுக்குள்ளானார். பக்கத்திலிருந்தவர்கள் அது அவருடைய கடைசி நோம் என நினைத்ததைக் கண்டு, அவர்: அப்படியல்ல, ஆண்டவர் இன்னுங் கொஞ்சநாள் தாமதிப்பார் என்றார். 1798-ம் வருஷம் பெப்ருவரி மாதத்தில் ஆண்டவர் சமீபித்து வந்தார் என்பதை அறிந்துகொண்டு, பொறுமையோடு வியாதியின் வேதனையைச் சகித்துத் தம்மைச் சூழநின்றவர்களுக்கு அநேக அருமையான வார்த்தைகளைச் சொன்னார். தமது சபையின் ஊழியருக்கு: சபையிலுள்ள

ஒவ்வொரு அவயவமும் மோக்ஷத்துக்கு வந்து சேரும்படி நீங்கள் பிரயாசப்படுங்கள் என்றும், கேரிக்கே ஐயரைப் பார்த்து: எனது கெர்மானிய சகோதரருக்கு, அவர்கள் பிரதான காரியத்தையே கண்ணோக்கும்படி சொல்லுவாராக என்றும் விளம்பினர். இம்மைக்கடுத்த காரியங்களைக்குறித்துப் பேச மனமற்றவராயிருந்தும் ஒரு இந்து அவரிடம் வந்து, நடந்த ஒரு அதிசயத்தைக்குறித்து அவருக்குத் தெரிவிக்க வந்ததாகச் சொன்னபோது: அதிசயங்களின் அதிசயம் என்னவென்று கேட்டால், நீங்கள் இதுவரையில் கேட்டறிந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாததுதான் என்று அவனுக்குச் சொன்னர். ஓர் சமயம் அதிக நேரம் தூங்குகிறவராக காணப்பட்டார். அவரைப் பார்க்க வைத்தியர் வந்தபோது கண்ணைத் திறந்து: கிறிஸ்துவின் மரணமே என் தியானம், அநேகக் காரியங்களைக்குறித்துப் பேசுகிறோம், ஆனால் இதுவே பிரதானம் என உரைத்தார். வேறொரு தருணம் அவர் தமது தாய்ப் பாஷையில் சொல்லியது: நமது உண்மையுள்ள ஆண்டவர் ஆபத்திலே நமக்கு உதவுவார். மிஞ்சினதாய்க் கடிந்துகொள்ளார். நம்முடைய பாவங்களுக்குத் தக்கபடி அவர் நம்மை நடத்தினல் நாம் அதைத் தாங்கமுடியாது. ஆம், நமது நற்கிரியைகளினிமித்தம்கூட அவர் நம்மைத் தள்ளிப்போடுவது நியாயம், ஏனெனில் அவைகளும் தீட்டானவையே என்பதாம். பெப்ருவரி 9-ம் தேதியில்: இப்பொழுது நான் சீக்கிரமாய் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடம் போவேன் எனச் சொன்னர். 13-ம் தேதி சகோதரர் பாட்டுப்பாடுகையில், சேர்ந்து பாடிச் சாயரக்ஷவேளையில்: இதோ உம்முடைய கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; உண்மையுள்ள ஆண்டவராகிய என் தேவனே! நீர் என்னை மீட்டுக்கொண்டீர் எனச் சொல்லி ‘ இரத்தம் காயம் குத்தும்’ என்கிற பிரார்த்தனையைப் பக்கத்திலுள்ளோர் பாடும்போது, ஒரு போராட்டமுமின்றி, ஜீவநாளெல்லாம் பரலோக சஞ்சாரஞ்செய்த அவருடைய ஆவி கிறிஸ்துவோடிருக்கும்படி பிரிந்துபோய்விட்டது. வயது 71. அன்றிரவெல்லாம் கிறிஸ்தவர்களின் வீடுகளிலே அழுகையும் புலம்பலும் கேட்டது. அடுத்தநாள் கல்லறைக்குப் போகும்போது துவக்கின பாடலை அழுகையின் நிமித்தம் நிறுத்த வேண்டியதாயிற்று. கோவிலில் துக்க ஆராதனையிலே கேரிக்கே ஐயர் தாங்கொணுத் துயரத்தினல் தமது பிரசங்கத்தை மிகவும் சுருக்கமாய் முடித்தார்.

சுவார்ச்சையர் மரணத்திற்குப்பின், சீமையிலுள்ள தாய்ச்சபையில் புத்தி விஞ்ஞானம் தலையெடுத்ததாலும், இத்தேசத்தில் ஜாதித்

தர்க்கங்கள் ஏற்பட்டதினாலும் ஹல்லேடேஷ் மிஷன் சபையின் சீர்கேடு பெருகிப்போயிற்று. இதுவும் தவிர, ஜெர்மானியாவி லிருந்து 40 வருஷக்காலமாக இந்தியாவுக்குச் சுவிசேஷத் தூது வரை அனுப்பச் சாத்தியப்படாமலும் போயிற்று. இலேப்சிக் மிஷன் சங்கம் ஸ்தாபகமானதின்மேல், கோர்டேங் ஐயரும் பிறகு உண்மை யுள்ள அநேகத் தேவ ஊழியரும் அனுப்பப்பட்டார்கள். காலா காலங்களில் சுவீடன்தேசக் குருக்களும் வந்து, இம்மிஷனோடு சேர்ந்து உழைத்தார்கள். 1901-ல் மதுரை, புதுக்கோட்டை, அணைக்காடு என்ற இடங்கள் சுவீடிஷ்வட்டமாக ஏற்படுத்தப் பட்டன. ஐரோப்பிய மகா யுத்தகாலத்தில் (1914–1919) சகல ஜெர்மானிய ஐயர்மாரும் இத்தேசத்தைவிட்டுப் போக நேரிட்ட தால், சுவீடிஷ் திருச்சபை மிஷன் இலேப்சிக் மிஷன் சபை முழு வதையும் ஒப்புக்கொள்ளவாயிற்று.

---

## உவில்லியம் கேரி

இங்கிலாந்திலிருந்து இத்தேசத்துக்கு முதல் முதல் சுவிசேஷ தானாபதியாய் வந்தவர் உவில்லியம் கேரி என்பவராம். இவர் 1761-ம் ஆ ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். இவர் பையல் பிரா யத்திலேயே அறிவில் அவாக்கொண்டவர். இரவில் வீட்டார் தூங்கும்போது இவர் கணக்குப்படிப்பார். தம்மைச் சுற்றிலுமுள்ள யாவையும் ஊன்றிக் கவனிப்பார். புஸ்தகங்கள் என்றால், அவருக்கு வெகு பிரியம். பூண்டு, செடிகளைப் பிடுங்கிப் புஷ்பங்களைக் கொய்து பாடம்பண்ணிவைப்பார். தமது சிறு தோட்டத்தை நன்றாய்ப் பயிரிடுவார். நாற்கால் பிராணிகள், பூச்சிகள், பறவை களிடம் வெகு நாட்டங்கொண்டவர். பிள்ளைப்பிராயத்திலேயே விடாமுயற்சிக்கு உதாரணமாய் விளங்கினர். தாம் தொடங்கிய தை எவ்விதக் கஷ்டம் வந்தும், முடியாது என்று விட்டார். கல்வி யில் தெளிவு வரும்பரியந்தம் ஒழியாதுழைப்பார். இப்பழக்கமே இவர் பிற்காலத்தில் அடைந்த வெகு சித்திகளுக்குக் காரணமாகும். பதினாறு வயதுவரையில் பண்ணையில் பயிரிட்டு வேலை செய்தார். வெய்யில் பொறுக்கமுடியாமையால், அதை ஒழித்துப் பாதரட்சை கட்டிப் பிழைத்தார். இளமையில் தானே லத்தீன் பாஷை படித்து இப்போது கிரேக்கபாஷை முதல் வாசகம் கற்கலானார்.

இம்மட்டும் இவர் மார்க்கவிஷயத்தில் நிர்விசாரி, பொய் சொல் லுவார், ஆணையிடுவார், மற்றப் பாவங்களையும் செய்வார். இவர்



உவில்லியம் கேரி

எஜமான ஓர் சமயம் தம்மிடம் வேலை பழகுவோருக்குத் திருஜென னப் பண்டிகை வெகுமதிகள் கொடுக்கும்படி சாமான்களை வாங்க இவரை அனுப்பியபோது, ஒருவன் செல்லாப்பணம் ஒன்றை

இவரிடம் கொடுத்துவிட்டான். இது செல்லாப்பணம் எனக்கடை வீதி போகையில்தான் இவருக்குத் தெரியவந்தது. தாம் ஏமாந்ததை மறைக்க, அப்பணம் தமது எஜமான் கொடுத்தபணமே எனச் சாதித்து, அந்தரங்கத்தில் கடவுளை நோக்கி: கடவுளே, இத்திருட்டில் என்னைக் காப்பாற்றுவீரானால், எல்லாத் துர்க்கிருத்தியங்களையும் விட்டொழிப்பேன் என வேண்டுதல் செய்தார். திருட்டோ வெளிப்பட்டுப்போக, வெட்கத்தாலும் மனச்சாக்ஷி வாதனையாலும் வெளிவர நாணி, ஆண்டவரை நோக்கி இறைஞ்சி மன்றாடினார்.

தாம் பாவி என்றும், மனமாறுதல் தமக்குத் தேவையென்றும் இப்போது கேரி கண்டறிந்தார். வெகுவான மற்றோரைப்போலவே, கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்த புறம்பான ஆசாரங்களால் தமது மனச்சாக்ஷியை அமர்த்திக்கொள்ளப் பார்த்தார். ஞாயிறுதோறும் தெய்வாராதனைக்குப் போவார், ஜெபக்கூட்டங்களுக்கும் அவ்வொழுங்கே செல்லுவார். இவ்வாறு தமது புண்ணியங்களால் இரட்சிப்படைய முயன்று வந்தார்.

சில காலம் சென்று நல்லறிவுண்டாகத் தமது சுயநீதியால் அல்ல, பாவிகளுக்காகச் சிலுவையில் மரித்துயிர்த்த இயேசுகிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியங்களால் மாத்திரம் இரட்சிப்படைய வேண்டும் எனக் கண்டுகொண்டார். இதுவே மெய்ஞ்ஞான ஜீவியத்துக்கு முதல் படியாம்.

கேரி பதினெட்டாம் பிராயத்திலே முதல் முதல் பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஒரு கிராமத்திலே பக்தியுள்ள சிலர் கூடி, ஒரு சிறு சபையானார்கள். இப்படியான கூட்ட ஆராதனை சமயங்கள் வேதாகமப் பங்கொன்றின்மேல் சில குறிப்புகள் சொல்லும்படியாய்க் கேரியைக் கேட்டுக்கொள்வார்கள். தாம் அறிவீனனாயிருக்க, அவர்கள் தம்மை மெச்சிக்கொண்டதினால், தமக்குப் பெருந்தீங்கிழைத்ததாய்ப் பிற்காலத்தில் எழுதினார். அதற்குப் பக்கத்தில் வசித்தவர்கள் அவரை வேண்டிக்கொண்டதன்மேல், அங்கும் போய் மூன்றரை வருஷம் ஞாயிறுதோறும் ஆராதனை செய்துவந்தார். அவர் பிறந்த கிராமத்தார் கேட்டுக்கொண்டதற் கிணங்கி, போக வர இருபது மைல் நடந்து அவர்களுக்கும் ஆராதனை வைத்தார்.

கேரிக்கு வயதிருபதாகுமுன், இவர் எஜமானன் காலஞ் சென்றுபோக, இவர் அவ்வேலையை மேற்போட்டுக்கொண்டு இவ்விளமையில் தமது முதலாளியின் சகோதரியை மணந்துகொண்டார். இவ்விவாகத்தால் பெருங்கஷ்டத்துக்குள்ளானார். இம்மனைவியை இவர் எத்துணையாய் நேசித்தாலும் இவள் தன் புருஷன் போங்குக்கு ஒத்துவருவதில்லை. ஜனோபகாரமான

அவரது பெருத்த ஆலோசனைகளில் அக்கறை கொள்ளாதவள். இளமைக்கலியாணத்தால் வெகு வருஷங்களாய்ச் சங்கடங்களுக் குள்ளானூர். ஹாக்கிள்டன் சிற்றூரில் ஒரு சிறு வீட்டைக் குடிக் கூலிக்குப்பிடித்து, அதைச் சேர்ந்த கொல்லையில் பயிர் போட்டுத் தமது ஜீவனமான பாதரக்ஷை செய்வதில்விட அதிக லாபம் அடைந் தார். இவர் தலைமகள் இரண்டு வயதில் மரித்துப்போனுள். இவரைக் காய்ச்சல் பிடித்துக்கொண்டு பதினெட்டு மாசம் வாட்டி வந்தது. இக்காலங்களில் அவர் பட்டபாடு இவ்வளவென்றில்லை. இவருக்கு ஒரு தம்பியிருந்தார். அவர் தமது சம்பாத்தியத்தில் செட்டுப்பிடித்து அண்ணனுக்குதவுவார். சுகம் அடைந்தபின் வேறு ஊருக்குப்போய்ச் செம்மான் வேலை செய்து இராப்பள்ளிக் கூடம் ஒன்றும் போட்டுக்கொண்டார்.

இக்காலத்தெல்லாம், கேரி தமதறிவைப் பெருக்க வெகு சுறு சுறுப்பா யுழைத்துவந்தார். பாஷாஞானம் அவருக்கு வரப்பிர சாதம். ஆனதுபற்றித் தாம் ஏற்கனவே கற்றிருந்த லத்தீன் கிரேக் கப் பாஷைகளோடு எபிரேய, பிரான்சிய மொழிகளையும் வரப்பண் ணிக்கொண்டார். கேரி பலவிடங்களில் சில காலம் பிரசங்கித் தும், தெய்வ ஊழியத்தை முறைபோல் பெற்றுக்கொள்ள மனங் கொண்டார். இதற்கென்று ஒல்னி என்னும் ஊர்ச்சபையாரைக் கேட்டுக்கொண்டார். இவர்கள் முந்த இவர் நடையைப் பரீக்ஷித்து இவர் தாம் குணப்பட்ட விருத்தாந்தத்தை ஒரு பிரசங்கத்தில் எடுத் துரைத்ததைக் கேட்டுப் பின்னொருசமயம் பிரசங்கிக்கச் சொல்லி இவரது இருபத்துநான்காம் வயதில் இவரை தெய்வ ஊழியத்துக்கு முறைப்படி அழைத்துக்கொண்டார்கள்.

---

## தற்கால மிஷன்களின் ஆரம்பம்

காப்டென் கூக் என்றவர் ஒரு பெருங்கடலோடி. உலகம் சுற்றிவந்த பிரபல்ய இங்கிலிஷ் மாலுமி. இவருடைய சுற்றுப் பிரயாணங்கள் அச்சேறி வெளிவந்தபோது, பசுபிக் மகா சமுத் திரத் தீவுகளில் விபரீத மானிடர் வசிப்பதாகவும், அவர்கள் அறிவீனரும், வீண்பக்திக்காரரும், நரமாமிச பக்ஷணிகளுமாயிருந்த தாக அதில் சொல்லியிருந்தது. இதைப் படித்துப்பார்த்த கேரி ஐயர் மனமுருகி அவர்களைக் கரையேற்ற வெகு கவலைகொண்டு, பல கூட்டங்களில் தமது கருத்தையும் ஞான ஒளிபெற்ற கிறிஸ்த

வர்களின் கடமையையும் எத்தனையாய் வற்புறுத்திக் கூறியும், இவருக்குக் கேள்விகொடுத்து ஒத்துழைக்க ஒருவனும் இல்லை.

இதற்கு மாருக ஒரு கூட்டத்தில் கேரி ஐயர் அஞ்ஞானிகள் மட்டில் கிறிஸ்தவர்களுக்குரிய கடமையைக் கூர்ந்து பேசுகையில், ஒரு கிழக்குரு அவரைப் பார்த்து: வாலிபா! உட்காரு, உன்னையும் என்னையும் இன்றி அஞ்ஞானிகளை இரட்சிக்க ஆண்டவருக்குத் தெரியும் என வாயடைக்கப் பார்த்தும், கேரி ஒரு சிறு பிரபந்தம் எழுதி அதைப் போதுமான பணங்கிடைத்தபோது அச்சடித்து வெளிப்படுத்தி அதின்மேல் பிரசங்கித்தார். அப்பிரசங்கத்தின் ஒரு பங்கு 'கர்த்தரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்' என்பது. மறுபங்கு, 'ஆண்டவருக்காகப் பெருங்காரியங்களைச் செய்ய முயலுங்கள்' என்பது. இதைக் கேட்டோர் மனம் பற்றி எரியவே, கூட்டம் கலையுமுன் ஒரு தீர்மானம் செய்தனர். அதாவது: கெற்றெரிங் ஊரில் தேவ ஊழியர் கூடும் அடுத்த கூட்டத்தில் அஞ்ஞானிகள் குணப்படுவதற்காகச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒரு சங்கம் ஏற்படுத்துகிறது என்பதாம்.

இது நடந்து நாலு மாதத்துக்குப் பிறகு 1792 அக்டோபர் 2-ல் கெற்றெரிங்கில் 12 தெய்வ ஊழியர்கூடிப் பாப்திஸ்தர் மிஷனெரிச் சங்கத்தை ஸ்தாபிக்கவும் இதற்கு புல்லர் ஐயரைக் காரியதரிசியாய் நியமிக்கவும் தீர்த்துக்கொண்டனர். இதற்கு அன்று கிடைத்த தர்மம் ரூ. 131. உடனே கேரி ஐயர் சங்கத்தார் தம்மை எத்தேசம் அனுப்புவார்களோ அங்குச் செல்லத் தம்மைத் தத்தம்பண்ணினுர்.

கேரிகுரு முந்தப் பசிபிக்கு சமுத்திரத்திலுள்ள தீவு செல்ல விரும்பியும், பிறகு இந்தியாவுக்கு சுவிசேஷவேலை செய்துவந்த தோமாஸ் வைத்தியரைக்குறித்துக் கேள்வியாகி, இந்திய அனுபவம் அடைந்திருந்த அவரை அண்டி இருவரும் அங்கு ஒத்துழைக்க விரும்பக் கேரி ஐயர் வைத்தியரின் கழுத்திறுகக் கட்டிக்கொண்டு அழுகையில், புல்லர் ஐயர்: இந்தியாவில் ஒரு பொற்சுரங்கம் இருக்கிறது. அதின் ஆழம் பூமியின் கெர்ப்பமட்டும் போகிறது. அதைத் தோண்டத் துணிபவன் யாவன் என, கேரிகுரு: நான் தோண்டுவேன், நீர் கயிற்றைப் பிடித்துக்கொள்ளவேண்டும் என இருவரும் ஒப்பித்துக்கொண்டார்கள்.

கேரி ஐயரும் தோமாஸ் வைத்தியரும் இந்தியாவுக்கு மிஷனெரிகளாக நியமனம் பெற்ருர்கள். ஹல் என்னுமூரில் உவில்லியம் வார்டு என்ற அச்சடிக்கும் வேலைக்காரரைக்கண்டு: கர்த்தர் எங்களை ஆசீர்வதித்தால் வேத புஸ்தகத்தை அச்சடிக்க உம்மைப்

போன்ற ஒருவர் எங்களுக்குத் தேவை, எங்கள் பின் வருகிறீரா என்று கேட்டார். அவர் ஐந்து வருஷம் சென்று அப்படிச் செய்தார்.

1793-ஆ மிஷனெரிகளை அவர்கள் வேலைக்கென்று ஜெபம் செய்து பிரித்தெடுத்தபின், புல்லர் ஐயர் அவர்களுக்கு உருக்கமாய்ப் புத்திசொன்னார். வர்த்தக முகாந்திரங்களால் கப்பல் பயணச்சீட்டு பெறுவது கஷ்டமாயிருந்தது. கேரி ஐயரின் மனைவிக்கு இந்தியா போக மனமில்லை. இது ஐயருக்குச் சொல்லி முடியா வேதனையாயிருந்தும் தமது மூத்த மகனை பேலிக்ஸைக் கூட்டிப்போகச் சித்தமானார். கப்பல் மாலுமி மோசமாய் இவர்களைத் திருட்டளவாய் ஏற்றிப்போக ஏற்பாடு செய்து 250 பவுன் வாங்கி, தான் அகப்பட்டுக்கொள்ளுந்தறுவாயில் 100 பவுனை அபகரித்துக்கொண்டு ஐயர்மாரை வஞ்சித்துவிட்டான். இந்த நஷ்டம் ஒரு பெரிய லாபமாக மாறியது. கேரி ஐயர் தம் மனைவியிடம் மறுபடியும் பேச, அவள் தன் தங்கையை அழைத்துப்போவதானால் தானும் வருவதாக இணங்கினாள்.

டேனிஷ் அரசருக்கு இந்தியாவில் இரண்டு வியாபார ஸ்தலங்களிருந்தன. இங்குப் போகும் ஒரு கப்பலில் மிஷனெரி வர்க்கத்தார் 315 பவுன் செலுத்திப் பிரயாணப்பட்டனர். ஐந்து மாதம் யாத்திரைசெய்து கடும் புயல்களில் அலைசடிப்பட்டு வந்தனர். கேரி ஐயர் வழியெல்லாம் தமது சுவிசேஷ வேலைக்கென்று பங்காளிப் பாஷையைப் படித்துவந்தார்.

---

## இந்தியா வந்திறங்குதல்

கேரிஐயர் 1793-ஆ நவம்பர்மீ 11உ-ல் இந்தியக்கரை வந்து இறங்கினார். பவுல் அப்போஸ்தலரைப்போல் கைப்பாடுபட்டுத் தம்மை சம்ரக்ஷித்துக்கொள்ளப் பார்த்தார். துவக்கத்தில் கஷ்டங்கள் அதிகமாயிருந்தன. அவர் பெண்சாதியின் நிஷ்டூரங்களால் அவர் வாதை பெருக்கெடுத்தது. சந்தர்பன்ஸ் என்னும் சதுப்பு நிலத்தில் வரியின்றி நிலம்பெற்று ஒரு குடிசை கட்டி அதில் தங்கிப் பயிர் விளைவித்தார். அங்கு நீண்ட காலம் தாமதித்திருந்தால், அவ்விடத்திய காய்ச்சலுக்கு அவரும் அவர் குடும்பமும் இரையாகவேண்டியதுதான். தேவச்செயலாய் மதனபதியிலுள்ள ஒரு அவுரிச்சாலையில் மாதம் ரூபாய் 200 சம்பளம் கிடைத்தது. அதற்கும் கல்கத்தாவுக்கும் 164 மைல். இவற்றை

யெல்லாம் இங்கிலாந்துக்குத் தெரிவித்து சங்கத்தார் தமக்குக் கொடுக்க வாக்கிட்ட தொகையைப் பங்காளிபாஷையில் தாம் மொழிபெயர்த்த புதியேற்பாட்டை அச்சுப்போடத் தரவேண்டு மென விண்ணப்பித்துக்கொண்டனர். மதனபதி அவுரிச்சாலையில் ஐந்து வருஷம் இருக்கையில் அவருக்கு வருஷத்தின் ஒரு காலத்தில் மாத்திரம் வேலை மும்முரமாயினும் மற்றக் காலங்களில் சாவகாசம் இருந்ததால், பங்காளி பாஷையில் தேறவும் புதியேற்பாட்டை மொழிபெயர்க்கவும் பிரசங்கிக்கவும் கூடியவரானார். மதனபதியில் ஒரு சிறு பள்ளிக்கூடம் தொடங்கி வேதாகமத்தில் பல புஸ்தகங்களை மொழிபெயர்த்து ஒரு பங்காளிச் சிற்றகராதியும் இலக்கணமும் எழுதிக்கொண்டார்.

இங்கவர் கடுஞ்சுரப்பட்டுத் தப்பிப் பிழைத்தாலும் அவரது ஐந்து வயதான மூத்த மகனைச் சாகக்கொடுத்தார். ஜாதி வித்தியாசக் கொடுமையால் அவருடைய சொந்தத் தச்சனும் பிரேதப்பெட்டி செய்ய மறுத்தான். குழிவெட்டவோ, சவம் தூக்கவோ, மகமதியரும் உதவிசெய்தார். தன் மகனை இழந்ததால் கேரி அம்மாள் பைத்தியங்கொண்டாள். இதினால் ஐயருக்குக் காலமெல்லாம் பெருங்கஷ்டம்.

ராஜீய, வர்த்தக தேகாரோக்கிய முகாந்தரங்களால் இங்கிலிஷ் துரைத்தனத்தைச் சேர்ந்த மதனபதியில் இனி யிருப்பதால் தமது சுவிசேஷ வேலை தடைபடும் எனக் கண்ட ஐயர் பேர்போன சுவார்ச்சு ஐயரின் உதவியால் டேனிஷ் அரசாட்சிக்குட்பட்ட ஸ்ரீராமபுரிக்கு 1800ஆம்-ல் வந்துவிட்டார். இதற்குள் அவர் சமஸ்கிருதத்தில் மகா பாரதத்தில் பெரும் பாகத்தைப் படித்தார். சமஸ்கிருத இலக்கணத்தை இங்கிலிஷ்படுத்தி, சமஸ்கிருத, ஆங்கில, பங்காளியப் பதங்களில் முப்பாஷை அகராதி ஒன்று இயற்றினர்.

---

## ஸ்ரீராமபுரி மிஷன்

இங்கிலாந்திலிருந்து வந்த நாலு சுவிசேஷ தூதுவரில் இருவர் இறந்துபோயினர். இப்போது முன் சொல்லப்பட்ட உவில்லியம் வார்டு என்ற அச்சு நிபுணர் வந்துசேர்ந்தார். மார்ஷ்மன் என்ற பெரிய படிப்பாளியும் வந்துசேர்ந்தார். இவர்களிருவரும் மிஷன் வேலையில் கேரி ஐயருக்கு மிகுந்த துணையாயினர். இவர்கள் மூன்று குடும்பஸ்தரும் ஒரு வீட்டில் தங்கிக் கைப்பாடுபட்டு, பொதுவில் சமைத்துப் புசித்துச் சங்கத்தார் அனுப்பிய பணத்தை

வேதாகமம் அச்சிடவும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் செல விட்டு வந்தார்கள்.

பங்காளி அக்ஷரங்களுக்கு அச்செழுத்தில்லாமையால், சார்லஸ் வில்கின்ஸ் என்ற பிரபு தமது சொந்தக் கையால் அச்சுத்தோண்டி எழுத்து வார்த்து, அவ்வேலையை ஒரு நாட்டுக்கொல்லனுக்குக் கற்பித்துக்கொடுத்தார். சில பிரார்த்தனைகளையும் சுவிசேஷ தூதிகை என்னும் சிறு பத்திரிகையையும் பங்காளியில் பிரசுரம் செய்து வந்து 1801ஆம்-ல் பங்காளிப் புதியேற்பாட்டை அச்சிட்டு முடித்தார்கள்.

மார்ஷ்மன் ஐயரும் அவர் மனைவியாரும் சாப்பாட்டுப் பள்ளிக்கூடங்கள் வைத்து, மிஷன் வேலைக்காக முன்னூறு ரூபாய் மாத வருமானம் சம்பாதித்தார்கள். அக்காலத்தில் பங்காளிப் பாஷையில் வசனநடை நூல்கள் இருந்ததில்லை. ஆதலால் ராஜாங்கச் சட்டங்களை அப்பாஷையில் படிக்க முடியாதிருந்தது. இக்குறைவை தீர்க்க, இந்திய தேசாதிபதி பங்காளிப் பாஷைக்கு ஒரு வித்தியாசாலையை வில்லியம் கோட்டையில் ஸ்தாபித்து அப்பாஷையில் பெரும் பண்டிதராயிருந்த கேரி ஐயருக்கு அதை ஒப்புவித்து, அவருக்கு மாதம் 500 ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள். கேரி பண்டிதர் சமஸ்கிருத வித்துவானாயிருந்ததினால், அக்கல்லூரியில் சமஸ்கிருத போதகராகி அதற்காகவும் சம்பளம் பெற்றுவந்தார். இதுகளினால் மிஷன்வேலைக்குப் பொருள் வரவும் செல்வாக்கும் உண்டாயிற்று. கேரி ஐயரை ராஜாங்கத்தார் ஆங்கிலப் பங்காளியத் துவிபாஷியாக நியமித்துக்கொண்டார்கள்.

---

## மிஷனால் முதல் முதல் கிறிஸ்துவண்டை திருப்பப்பட்டோர்

முதல் முதல் குணப்பட்டவன் ஒரு தச்சன். இவனுக்குப் பெயர் கிருஷ்ணசந்திரபாலன். இவன் கைச்சப்பை நழுவி வைத்தியரான தோமாஸ் ஐயரிடம் வந்தான். இவன் ஏற்கனவே சுவிசேஷத்தைக் கேட்டுத் தன் பாவ நிலைமையை உணர்ந்தவனாயிருந்தான். பாவிகளுக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அவன் கண்டுகொண்டபின், ஜாதியை விட்டுப்போட்டுப் பாதிரிமாருடன் சாப்பிட்டுப் பின்னும் உபதேசம் அடைந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். இவனுக்கு ஜாதியாரால் பல துன்பங்கள் நேரிட்டும், அவற்றால் பின்னடையாமல் உண்மையுள்ள கிறிஸ்தவனாய் விளங்கினான். அவன் தன்

பாஷையில் கிறிஸ்துவுக்கு நன்றியாக ஒரு கீதம் பாடினுன். அதில் விளங்கும் பக்தியும் ஆழ்ந்த நன்றியுணர்வையும் முன்னிட்டு அதை இங்கிலிஷ்படுத்தி இங்கிலாந்தில் ஆராதனைகளில் பாடுகிறுர்கள்.

பங்காளி மாதர்களில் முந்தி குணப்பட்டவள் மேற்சொல்லிய கிருஷ்ணசந்திரபாலனின் மைத்துனி ஜெயமணி. சீக்கிரத்தில் இவன் மனைவியும் ஞானஸ்நானம் பெற்று இவ்விரு பெண்களும் தங்கள் நாட்டாருக்குக் கிறிஸ்துவின் செய்தியை அறிவித்து வந்தார்கள்.

பீதாம்பர சிங்கு என்ற ஒருவன் தன் பாவங்களைத் தொலைக்க முப்பது வருஷம் பல இந்து க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தும், ஆறுதலடையவில்லை. ஸ்ரீராமபுரியில் அச்சிட்ட சுவி சேஷப் பத்திரிகை யொன்று அவனுக்குக் கிடைத்தது. அதைப் படித்துக் கிறிஸ்துவைக்குறித்து இன்னும் அறிய ஆவல்கொண்ட வனாய் 40 மைல் பயணம் செய்து, ஐயர்மாரிடம் வந்து, போது மான உபதேசமடைந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபின், உண்மையுள்ள உபாத்தியும் சுவிசேஷப் பிரசங்கியுமாய் உழைத்து வந்தான். முந்தின பிராமணன் கிருஷ்ணப் பிரசாதன். 1804ஞு-ல் இன்னும் இரு பிராமணர் குணப்பட அவ்வருஷக்கடைசியில் குணப் பட்டோரின் தொகை ஆண் பெண் உட்பட 40 ஆயிற்று. 1840ஞு-ல் இந்தியக் கிறிஸ்தவர்களின் தொகை 300. பங்கா ளத்தில் பல விடங்களிலும் மிஷன் ஸ்தானங்கள் ஸ்தாபகமாயின. பாடலிபுரம், காசி, ஆக்ரா, டில்லி என்ற ஸ்தானங்கள்கூடி இந்துஸ் தான் மிஷன் என வழங்கலாயிற்று.

அச்சுக்கூடத்தில் சுதேசிகளின் உதவியால் பல பாஷைகளின் அக்ஷரங்கள் வார்க்கப்பட்டதால், கேரி ஐயர் வேதாகமம் முழு மையையும் பங்காளி, உரியா, அசாமிய, சமஸ்கிருத, ஹிந்திய, மராத்திய பாஷைகளில் அச்சேற்றி முடித்தார். தாம் கற்ற பல பாஷைகளுக்கும் இலக்கணம் உண்டுபண்ணினுர்.

நரபலியிடுவதும், உடன்கட்டை ஏறித் தீகுதித்தலும், குழந்தை களைக் கங்கையில் கங்காதேவிக்கு எறிந்து படைத்தலும், இந்துக் கள் நடத்திவந்த முதலிய கொலைபாதகங்களைக் கேரி அதிகாரி களுக்கு எடுத்துக்காட்டிப் போராடியதால் ராஜாங்கத்தால் அவை தடுக்கப்பட்டும் தொலைக்கப்பட்டும் போயின.

---

63

## விவசாய உதவி

தோட்டப் பயிர் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருந்ததைப் பார்த்த கேரி ஐயர் தாமே ஒரு பெரிய மாதிரித் தோட்டம்போட்டுக் காய் கனிகளை எப்படிப் பெருக்கவும் ருசிக்கவும் செய்யலாமெனக் காட்டினார். இதை ஆதரித்து நடத்திவா அவர் சில வெள்ளைக்காரரையும் ஜமீன்தார்களையும் சேர்த்து ஒரு சங்கம் ஏற்படுத்தினார்.

தேசத்தில் அடிக்கடி உண்டான பஞ்சங்களைப் பார்த்துப் பரிதபித்து அவைகளைக் குறைக்கவும் ஒழிக்கவுமாக விவசாயச் சங்கமொன்றை ஸ்தாபித்துச் சீர்திருத்தமான நூதன விவசாய முறைகளைக் கற்பித்து, புதுவிதக் கலப்பை முதலிய பண்ணைக் கருவிகளைக் கையாடி காட்டினார். கன்று காலிகளைப் பருக்கவைக்கவும் அவற்றின் மலஜலங்களை எருவாக்கி, நல்ல விளைவு பெறவும் பயிர் குடிகளுக்கு யோசனை அளிப்பார். அவர் ஸ்தாபித்த விவசாயச் சங்கங்கள்தான் இப்போது ராஜாங்கத்தாரால் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

---

## சங். உவில்லியம் கேரி சாஸ்திரியாரின் அந்தியநாட்கள்

அவருக்குக் கடைசி காலத்தில் கொடிய துன்பங்கள் வந்து சம்பவித்தன. அவர் மிஷன் பணத்தையும் சர்வகலாசாலைத் திரவியத்தையும் போட்டுவைத்திருந்த பெரிய வியாபாரச்சாலைகள் நொடித்துப்போயின. கல்கத்தாக் கோட்டையில் இருந்த சர்வகலாசாலையைச் சர்க்கார் எடுத்துவிட்டார்கள். துவிபாஷி வேலையையும் நிறுத்தி ஐயருக்கு அவர் வருமானத்தில் மூன்றத்தொன்றை உபகாரச்சம்பளமாகக் கொடுத்தார்கள். இதுகளினுலெல்லாம் அவர் மனச்சோர்வடையாதவராய் மிஷன் கிரியைக்கென்று தமது மனங்கொண்டமட்டும் உதவக்கூடாமற் போனதற்காகமாத்திரம் விசனித்தார். வயது 70 ஆகியும் வெள்ளென எழுந்து 4, 5 மைல் குதிரைசவாரிசெய்து சூரியோதயத்தில் வீடு வருவார். வந்து தினந்தோறும் மொழிபெயர்ப்பு வேலையில் தரித்திருப்பார். சர்வகலாசாலையில் வாரம் இருமுறை வேதசாஸ்திரத்திலும், இருமுறை ஜடத்துவ சாஸ்திரத்திலும் உபந்நியாஸம் செய்து தமது முறை வருகையில் கோவிலில் பங்காளியிலும் இங்லிஷிலும் பிரசங்கிப்பார்.

அவரது கடைக்கால வருஷங்களில் தமது பங்காளி வேதாகம மொழிபெயர்ப்பைப் பரிசோதித்து வந்தார்.

ஒருநாள் மார்ஷ்மன் ஐயர் கேரி சாஸ்திரியாரைப் பார்க்க வந்த போது, இவர் குருவின முகத்துடன் இருக்கக் கண்டு அதற்குக் காரணம் கேட்டபோது, சாஸ்திரியார்: நான் கண்மூடினபின் சகோதரனுகிய மார்ஷ்மன் என் தோட்டத்தில் பசுமாடுகளை விட்டோட்டுவார் என்க, மார்ஷ்மன்: அது எனக்குத் தூரமாயிருப்பதாக. தாபர சாஸ்திரத்தில் உமக்குள்ள பிரியம் எனக்கில்லாவிடினும், உமக்கு அத்தனை சந்தோஷத்தை அளித்த தோட்டத்தைப் பாதுகாப்பது எனக்குத் திருக்கடமையாயிருக்கும் என்று சொல்லிவிட்டார். மார்ஷ்மனும் அவர் மகனும் அத் தோட்டத்தை 40 வருஷங்களாய்ப் பரிபாலித்து வந்தார்கள். அவரது பொழுதுபோகும் நாட்களில் பலரும் தேசாதிபதியும் பெருமாட்டியாரும் அடிக்கடி அவரை வந்து பார்த்தார்கள். கல்கத்தாவின் அத்தியக்ஷரான வில்சன் என்பவர் அவர் தம்மை ஆசீர்வதிக்கக் கெஞ்சினுர். சாஸ்திரியாரின் குமாரரில் ஒருவர் மரணப்படுக்கையிலிருந்த தமது தந்தையின் ஆத்தும நிலைமையைக்குறித்து அவருடன் சம்பாஷித்தபோது, நம்பிக்கையும் விசுவாச வீரமுமான பதில் உரைத்துக் கடைசியாகத் தமது அடக்கம் மிகவும் சாமான்யமாய் நடக்கவேண்டுமென்றும் தமது கல்லறைக்கல்லில் பின்வரும் வார்த்தைகளை வரையவேண்டுமென்றும் சொன்னுர்:

"உவில்லியம் கேரி என்ற நீசனும் எளியனும் நிர்ப்பந்தனுமாகிய நான் ஆண்டவரது அன்புள்ள கரங்களில் விழுகிறேன்" என்பனவாம். அவர் மரிக்குமுன், இந்தியாவுக்குச் சுவிசேஷ ஊழியத்திற்காக வந்த டப் சாஸ்திரியார் அவரைக் காணவந்தச் சமயத்தில், மிஷன் வேலையைக்குறித்து அவரிடம் சற்றுப் பேசியபின் தமக்காக ஜெபிக்க அவரை வேண்டிக்கொண்டார். அவர் ஆசையை நிறைவேற்றிப் புறப்படுகையில் கேரி இளைத்த குறலாய்: டப் சாஸ்திரியாரே, நீர் கேரி சாஸ்திரியைக்குறித்து வெகு அதிகமாய்ப் பேசுகிறீர், நான் சென்றுபோனபின் கேரியைப்பற்றியல்ல, கேரியின் மீட்பரைப்பற்றிப் பேச உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்க, டப் சாஸ்திரியார்: தேவகிருபையை முன்னிட்டு அப்படியே செய்கிறேன் என்று விருத்தரின் கரத்தை அழுந்தப் பிடித்துச் சொன்னுர்.

அவர் மரணத்தறுவாயில் அவரைப் பார்க்க வந்த அவரது வயோதிக நண்பர் மார்ஷ்மன் ஐயர் அவரை நோக்கி: நற்செய்தி ஐயா, நற்செய்தி, மிஷனுக்கான புது உணர்ச்சி இங்கிலாந்தில் பிறந்திருக்கிறதென்று சொல்ல, கேரி சாஸ்திரியார் நடுக்கத்துடன்

தமது கரங்களை ஏறெடுத்துத் தாங்கி மூச்சுவிட்டு: தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் தமது வாக்கை மீருர். மிஷன் வேலை தழைக்கும் என, மெல்லிய குறலுடன் தமது ஆனந்தத்தைக் காட்டினுர்.

மறுநாள் காலையாகிய 1834-ஷு ஜூன்மீ 9உ சூரியோதயத்தில் ஞான சூரியனுகிய தமது கர்த்தரை முகமுகமாய்ச் சந்திக்கப் பிரயாணமானுர். அவர் தேகம் இளைப்பாறும் ஸ்தலம் ஸ்ரீராமபுரியில் இருக்கிறது.

---

## 2. பர்மாவின் அப்போஸ்தலனுகிய அதோனிராம் ஜட்ஸன்

இவர் அமெரிக்காவிலுள்ள பாஸ்றறன் ஊரில் 1798-ல் பிறந்தார். இவர் தகப்பனுர் ஒரு குரு. தாயார் அதிகப் பக்திசீலி. இவருக்கு 1 இரா 5: 14-ல் ஆலயக்கட்டிடப் பகுதிவிஜாரிப்புக்காரன் என்று சொல்லப்பட்ட அதோனிராம் என்ற லேவியனின் பேரை இட்டார்கள். இதினுல் தங்கள் மகனும் தேவ ஊழியன் ஆகவேண்டும் என்ற தங்கள் அபேக்ஷையைக் காட்டினுர்கள். ஜட்ஸன் மூன்று வயதில் வாசிக்கத் தொடங்கினுர். தாயாரைப் போல் வரம்மிகுத்தவர். 18-ம் வயதிலே கலாசாலைப் பிரவேசப் பரீக்ஷையில் தேறி 19-ம் பிராயத்தில் இங்கிலிஷ் இலக்கணம், கணிதம் முதலிய புஸ்தகங்களை இயற்றிப் பிரசுரித்தார். தகப்பன் தனது மகனைப்பற்றி அதிக மதிப்பாக எண்ணிக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் சிலரோடு பேசும்போது, தன் மகன் ஒரு காலத்தில் பெரியவன் ஆவான் என்று புகழ்ந்து சொன்னுர். இதை ஜட்ஸனும் கேட்டுக்கொண்டிருந்தார். இவ்வார்த்தை இவர் மனதில் தைத்தாலும், இவரது ஜீவியம் இதற்கேற்றதாயிருந்ததில்லை. இவருடைய முக்கிய சிநேகிதன் ஒரு நாஸ்திகன். அவனுடைய அவிசுவாசத்தால் இவரும் தன் சிறுவயதின் விசுவாசத்தை இழந்து கெட்டுப்போனுர். அதுவுமன்றி இவர் நாடகங்களிலும் சேர்ந்துகொண்டார். பக்தியுள்ள தாயார் அகுஸ்தீன் போதகப் பிதாவின் தாயைப்போல் அழுது கண்ணீர் சொரிந்து தனது பரமபிதாவைக் கெட்டியாய்ப் பிடித்துத் தன் மகனின் குணப்படுதலுக்காக ஜெபித்து வந்தாள். ஆனுல் பலன் உடனே வரவில்லை. நாளடைவில் இவருக்கு நாடகத்தில் வெறுப்புண்டாகி அதை விட்டுவிட்டுத் தம் தகப்பன் சொல்லியதைப்போல் பெரியவனுகவேண்டும், அமெரிக்கா ராஜாங்க தலைவனுக வேண்டும் என்ற உலக நாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்பி வந்தார். வரும் வழியில் ஒரு சத்திரத்திலே



பர்மாவின் அப்போஸ்தலனாகிய அதோனிராம் ஜட்ஸன்

தங்கும்படியாய் இடங்கேட்டார். அது இரா நேரம். சத்திரக் காரனே: ஐயா, இங்கே நல்ல அறைகள் காலியில்லை, ஒன்று தான் இருக்கிறது, அது உங்களுக்குத் தங்கப் பிடிக்காது. அதற்

குப் பக்கத்தறையில் ஒரு ஆள் அதிக வியாதியாய்க்கிடக்கிறது. இவ்வறை சுவர் மறைப்புள்ளதல்ல. ஒரு திரைதான் தடுப்பாயிருப்பதால் உங்களுக்குக் கஷ்டம் நேரிடும் என்றுன். இவரோ வேறு வழியில்லாததால் அதிலேயே தங்கச் சம்மதித்துக்கொண்டார். இராமுழுவதும் இவர் தூங்க முடியவில்லை. வியாதிக்காரன் அதிகப் பயங்கரமான சத்தம் போட்டுக்கொண்டிருந்தான். அப்போது இவர்: ஐயோ! இந்த வியாதிக்காரனுக்குச் சாகப் பிரியமில்லைபோலும், இவன் சாகத்தான்போகிருனே என்று இவ்விதமாகப் பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தார். பிறகு சத்தமேயில்லை. அப்போது இவர்: இவ்வியாதிக்காரனுக்குச் சற்று தாவிளைபோல் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு, அதிக நேரம் தூங்கிவிட்டார். எழுந்திருந்தபோது சத்திரக்காரனிடம்: அடுத்த அறையில் உள்ள வியாதிக்காரன் இப்போது சுகமாய்த் தூங்குகிருனே என்று கேட்டதற்கு அவன்: இல்லை, அவ்வாலிபன் இராத்திரியே இறந்துபோனுன், பெரிய படிப்பாளி வரம்பெற்ற வாலிபன், சர்வகலாசாலைப் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினவன், அவன் பேர், ஊர் இன்னதென்று திட்டமாய்ச் சொன்னுன். அப்போது ஜட்ஸன் திகில் அடைந்து: ஐயோ! அது என் சிநேகிதன் அல்லவா! என் இளவயதின் விசுவாசத்தைப் புரட்டினவன் இவனல்லவா! ஐயோ! அவன் செத்து நரகத்துக்குத்தான் போயிருப்பான். எனக்கும் இப்போது மரணம் வந்தால், நான் என்ன செய்வேன். அவனது மரண அவஸ்தைகளும், பயங்கரமான சத்தங்களும் என்னைத் திகில்படுத்துகிறதே என்று அன்று முதல் முழுமனதோடும் ஆண்டவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்துக் குருவேலை செய்யும்படியாகத் தமக்குள்ளே தீர்மானம்பண்ணி, வேதசாஸ்திர வகுப்பில் போய்ப் படித்தார். பிறகு குருவாகத் தமது ஊருக்கு அனுப்பப்பட்டார். தங்கள் ஊரிலேயே தங்கள் மகன் இருந்து வேலை பார்ப்பது பெற்றோருக்கு அதிகச் சந்தோஷம். இவரோ தாம் வாசித்தறிந்திருந்தபடியே அஞ்ஞான இருள் நிறைந்த பர்மா தேசத்துக்குப் போய் சுவிசேஷ வேலைசெய்யப் பிரியப்பட்டு, இதைப் பெற்றோருக்கு அறிவித்தார். இவர்கள் மகனைவிட்டுப் பிரியத் துக்கித்தும் தேவ ஊழியத்தை முன்னிட்டுச் சம்மதித்தார்கள். இவரையும் இன்னும் சில சுவிசேஷகரையும் புறத்தேசங்களுக்கு அனுப்ப ஒரு சங்கம் ஏற்பட்டது. இச்சங்கத்தாரால் இவர் பர்மா தேசத்துக்கு அனுப்பப்பட்டார். தைரியம், சந்தோஷம், நம்பிக்கை என்னும் குணங்கள் எல்லாக் கஷ்டங்களையும் மேற்கொண்டன.

இவர் புறப்படுமுன் ஒரு வீட்டிற்கு விருந்தாளியாய்ப் போயிருந்தார். அவ்வீட்டில் அன் என்னுமோர் அழகிய பெண் இருந்தது. அவள் முக அழகுக்குச் சரியாய் அவள் குண அழகும் பொருந்தியிருந்தது. இதைத் தொட்டு அவள் தகப்பனார் அவளைச் சம்மனசு என்று அழைப்பார். ஜட்ஸன் அப்பெண்ணைத் தமக்கு மனைவியாகக் கொடுக்கும்படி அவள் தகப்பனாரிடம் கேட்டு ஒழுங்குபண்ணிப் புறப்படுவதற்கு முந்தினநாள் கலியாணம்செய்து கொண்டார். அப்பெண் தைரியமுள்ளவளும் முழுமனதோடும் ஆண்டவருக்கு ஊழியம்செய்ய ஆசையுள்ளவளுமாய் இருந்தாள். இனஜனப் பிரிவினையாலுண்டாகும் சகல வருத்தங்களையும் கர்த்தரின் உதவியால் மேற்கொண்டவர்களாய் மறுநாள் கப்பல் ஏறினார்கள். பலவான காரணங்களினால் கப்பலிலே வியாதிப்பட்டார்கள். கப்பல் கல்கத்தா துறைமுகம் வந்துசேர்ந்தது. அப்போது அங்கே பெரிய வில்லியம் கேரி இருந்தார். அவரிடம் பர்மாவைப் பற்றி விசாரித்தபோது, அவர்: அத்தேசத்தார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; இது என் மகன் அவர்களிடம் பட்ட பிரயாசையால் எனக்குத் தெரியும் என்று சொல்லிப்போட்டார். இங்கிலிஷ் வியாபாரக்கூட்டத்தார் ஜட்ஸன் ஐயரைக் கல்கத்தாவில் இருக்கக்கூடாதென்று துரத்தினார்கள். சுயதேசம் போக இவருக்குப் பிரியமேயில்லை. அப்போது இவரும் இன்னும் சிலரும் ஏதாவது ஒரு தீவுக்குப்போகலாம் என்று இராநேரத்தில் கப்பலேறிப் புறப்பட்டார்கள். கப்பல் போகும்போது காற்று வேறுதிசையாய் அடிக்கவே அது ரங்கூன் பக்கமாய் வந்து ஒதுங்கிற்று. இது தேவநடத்துதல் என்றறிந்து, கரையிறங்கி அங்கே ஓர் குடிசையில் தங்கினார்கள். அக்குடிசைக்குப் பக்கத்தில் சுடுகாடு. இதைக்குறித்து: எங்கள் நாள் எல்லாவற்றிலும் இதுவே அந்தகார நாள் என்று பிற்காலத்தில் சொன்னார்கள். பிறகு அதிகக் கஷ்டப்பட்டுப் பாஷைகளைப் படித்தார்கள். அப்படி அம்மாளும் படித்துப் பெண்களிடம் வேலைசெய்தாள். மூன்று வருஷம் வேலை செய்தும், ஒரு பலனையும் காணவில்லை. சீமையிலுள்ளவர்களும்: நீங்கள் அந்த இடத்தை விட்டுவிட்டு வேறு இடத்தில் வேலை செய்யலாம். இல்லாவிட்டால் வந்துவிடுங்கள், வீணாக என் அங்கு வேலைசெய்யவேண்டும் என்று எழுதினார்கள். ஐயரோ: தேவன் உண்மையுள்ளவர், அவர் தமது வாக்கை நிறைவேற்றுவார், என்னை இருபது முப்பது வருஷத்துக்கு இங்கேயே விட்டுவிடுங்கள் பலனைக் காட்டுவேன். நீங்கள் எங்களுக்காகப் கப்பல் அனுப்பினாலும், இவ்விடத்திய வேலையை விட்டுவரமாட்டோம் என்று சொல்லிவிட்டார்.

ஐயர் முதல் முதல் மத்தேயு சுவிசேஷத்தைப் பர்மா பாஷையில் மொழிபெயர்த்து அதைப் பரவச்செய்தும் இன்னும் ஒரு பலனையும் காணவில்லை. இக்காலத்தில் இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து ஒன்பது மாதத்தில் இறந்துபோயிற்று.

இப்படியிருக்க ஒருநாள் அந்தஸ்துள்ள பர்மியர் ஒருவர் ஐயரிடம் வந்து: இயேசுவைப்பற்றிப் படித்து அவரை அறிந்துகொள்ள எத்தனைநாள் செல்லும் என்று கேட்டார். ஐயர்: அவரைப்பற்றி ஏதாவது உமக்குத் தெரியுமா என்று கேட்டு இயேசுவின் சரித்திரத்தைப்பற்றிய சில சில கேள்விகளையும் கேட்க, அவர் நல்ல விடைகொடுத்தார். அப்போது மத்தேயு சுவிசேஷம் ஒன்றை அவர் கையில் கொடுத்து, இயேசுவின் இரட்சிப்பைப்பற்றி அவருக்குப் போதித்தார். அவர் சந்தோஷத்தோடு கேட்டுக்கொண்டு போனார்.

ஒரு தடவை ஜட்ஸன் ராஜாவைப் பார்க்கும்படியாகத் தன் மனைவியை ரங்கூனில் விட்டுவிட்டு, ராஜா தன் தேசத்தில் சுவிசேஷ வேலைக்கு இடங்கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்ள, ஆவா என்னும் ஊருக்குப் போனார். ராஜசமுகத்தில் அத்தேச வழக்கம் போலவே குணஸ்துதி சொல்லிப் புகழ்ந்துபேச வேண்டியவரானார். முதலில் அவன் அதிகச் சந்தோஷத்தோடு பேசிப் பிறகு இவர் கொண்டுபோன அழகான கட்டிடமுள்ள வேதபுஸ்தகத்தை அவன் கையில் கொடுத்தார். கொடுத்ததும் அவன் வெகு கோபமாய் அதை வீசி எறிந்துவிட்டு அரண்மனைக்குப் போய்விட்டான். இப்படியாக ராஜன் கிறிஸ்துமார்க்கத்தின் பேரில் அதிகத் துவேஷம் கொண்டிருந்ததை ஜட்ஸன் கண்டுகொண்டார். இப்பிரயாணத்தில் இவருக்குக் காய்ச்சல் கண்டு அதிக மோசமான நிலைமையில் இருந்தார். ஒன்பது மாதமாக இவர் ரங்கூனுக்கு வராததில், தன் புருஷனுக்கு என்ன நேர்ந்ததோ என்று ஜட்ஸன் அம்மாள் அதிகக் கலக்கம் கொண்டாலும், அதை அதிகம் பாராட்டாமல் விஷபேதி நடமாடின வீடுகளுக்கெல்லாம் தன்னை ஒறுத்துப்போய் ஊழியம் செய்துவந்தாள். ஒருநாள் ஐயர் அதிகக் காய்ச்சலினிமித்தம் கப்பலாட்களால் தூக்கிக்கொண்டு வரப்பட்டார். அம்மாளின் மனக்குழப்பத்தை என்னென்று சொல்வது! அம்மாளின் பராமரிப்பால் ஐயருக்கு நல்ல சுகம்வரவே, இவளுக்கு அதிக வியாதிகண்டது. இது நிமித்தம் குடும்பத்தோடு அமெரிக்காவுக்குப் போக நேரிட்டது. ஆயினும் சீக்கிரம் திரும்பவும் பர்மாதேசமடைந்தார். இக்காலங்களில் புதியேற்பாடு முழுவதையும் மொழிபெயர்த்து அதைத் திரும்பத்திரும்ப மூலபாஷையோடு ஒத்துப்பார்த்துத்

47545
Q6 N26

திருத்திவந்தார். இச்சமயம் ஒரு வாலிபன் ஞானஸ்நானம் பெற்று உண்மையுள்ள தேவ ஊழியனைப் பிழைத்தான். அவன் பெயர் மூன்நாவு. ஆனல் ராஜாவின் கடுமைக்கும் பயந்து அநேகர் ஞானஸ்நானம் பெறவும் வெளியரங்கமாய் இவரிடம் வந்து போதனை பெறவும் அஞ்சினார்கள். அதிகக் கஷ்டமான இந்த இடத்தில் இவர் பத்துவருஷம் தமது வேலையை நடத்திக்கொண்டு வந்தார். பள்ளிக்கூடத்துக்காகவும் தேவாராதனைக்கென்றும் மூங்கிலால் ஒரு வீடு கட்டிக்கொண்டார்கள்.

இப்படியிருக்கும் காலத்தில் இங்கிலாந்திலிருந்து வைத்தியம் படித்த ஒரு போதகர் பர்மாவுக்குவந்தார். இவர் பெயர் பிரைஸ். இவர் வித்தையினிமித்தம் ராஜன் நல்ல வைத்தியம் செய்துகொள்ளலாம் என்றெண்ணி இவரைத் தன்னிடம் வரும்படி அழைத்தான். ஆனல் இவருக்குப் பர்மாபாஷை தெரியாமையால் இவர் பேசுவதை மொழிபெயர்க்க ஜட்ஸன் ஐயரையும் அழைப்பித்தான். இப்போது அரசனின் தயவு இவ்விருவருக்கும் கிடைத்தது. தனது நகராகிய ஆவாவிலேயே தங்கும்படி ஜட்ஸன் ஐயரைக் கேட்டுக்கொண்டான். அவர்கள் குடியிருக்க நிலமும் கொடுத்தான். ஐயர் ஆவாவில் அவசியமானவற்றை எல்லாம் ஒழுங்கு பண்ணினபிறகு, ரங்கூனிலிருந்து தமது மனைவியையும் வரவழைத்துக்கொண்டார். இக்காலம் அவர்கள் துன்பமின்றி வேலைசெய்தார்கள்.

கொஞ்சக்காலத்திற்குப் பின் 1823-ல் ஒரு பெரிய துன்பம் வந்து சம்பவித்தது. இங்கிலிஷ்காரர் ரங்கூன்மேல் படையெடுத்து, அதைப் பிடித்துக்கொண்டார்கள் என்ற செய்தி ராஜாவுக்கு வந்தெட்டிற்று. அரசன் தன் படைகளை எல்லாம் அங்கே அனுப்பினன். யுத்தம் மும்முரமாயிருந்தது. ராஜன் வெள்ளைக்காரர் மந்திரக்காரராயிருப்பதால் தான் ஜெயம் அடைகிறார்கள் என்றும், தனது தேசத்தில் உள்ள வெள்ளைக்காரர் அவர்களைச் சேர்ந்தவர்கள் என்றும் நினைத்துத் தன் நாட்டில் உள்ள எல்லா வெள்ளை மனுஷரையும் சிறைச்சாலையில் அடைத்து விலங்குபோடக் கற்பித்தான். அநேகச் சேவகர் திடீரென ஐயர் வீட்டில் புகுந்து, அவரைக் கயிற்றினல் இறுகக் கட்டிச் சிறைச்சாலைக்குக் கொண்டு போய்விட்டார்கள். அம்மாள் அதிக வருத்தப்பட்டுக் கொஞ்சம் பொன் வெள்ளி உடைமையையும், ஐயர் அரும்பிரயாசத்துடன் மொழிபெயர்த்து வந்த புதியேற்பாட்டு மொழிபெயர்ப்புக் கையெழுத்துப் பிரதியையும் பூமிக்குள்ளே புதைத்து வைத்தாள். போன சேவகர் சிறிது நேரத்திற்குள் திரும்பி வந்து வீட்டிலுள்ள

எல்லா சாமான்களையும் பொறுக்கிக் கொண்டுபோய்விட்டார்கள். புதைப்பட்டவை மாத்திரம் அவர்கள் கண்ணுக்குத் தப்பின.

காவல் கூடத்தில் கிடந்த ஐயருக்குக் காலில் பாரமான விலங்கு மாட்டி, அசுத்தமான ஓர் இருட்டறையில் அநேகப் பாதகர்களூடனே அவரைப் போட்டிருந்தார்கள். இன்னும் அத்தேசத்திலுள்ள வியாபாரிகளான அநேக வெள்ளைக்காரரும் அங்கே போடப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருநாளும் மூன்றுமணிக்கு ஒரு சேவகன் வந்து அங்குள்ளவர்களில் எவனாவது ஒருவனை இழுத்துக்கொண்டு போய்க் கொலைசெய்வது வழக்கம். அந்த மூன்றும் மணி வேளை சிறைகளுக்கு மிகவும் பயங்கரமாயிருந்தது. இன்று யாரைக் கொல்லுவார்களோ என்று தெரியாது. இப்படியிருக்குங்கால் அம்மாள் ஓடி ஓடி விசாரித்து அடைபட்டிருந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சிறைச்சாலைத் தலைவனிடம் வந்து தன் புருஷனோடு முன் முற்றத்தில் பேசும்படியான தயவைப் பெற்றுக் கொண்டாள். இருவரும் சந்திக்கும்போது அவள் மனம் பட்ட பாட்டைச் சொல்ல யாரால் ஆகும்! தன் பர்த்தாவின் காயங்களிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட பத்தினியின் மனவேதனை எவ்வளவானதெனச் சொல்ல யாவர் மாட்டுவர்! அம்மாள் தன் கணவனண்டை அங்கே போம்போதெல்லாம் தன்னைக் காத்துக் கொள்ளப் பர்மாக்காரிபோல் உடைதரித்துப் போகவேண்டும். வீட்டிலுள்ள இரண்டு தத்துப்பிள்ளைகளைப் போஷிக்கவேண்டும். அதிகாரிகளிடமும் பேசவேண்டும். சிறைச்சாலைக்காரன் தயவினால் ஐயருக்குச் சாப்பாடு வீட்டிலிருந்து கொடுத்தனுப்பவேண்டும். இத்தனை கஷ்டங்களினூடே சாப்பாடு அனுப்பும்போது காகிதம் எழுதி அதை இரகசியமாய்ச் சாப்பாட்டுக்குள் வைத்து அனுப்புவாள். இப்படி நடந்துவரும்போது ஒருநாள் ஒரு போர்ச்சேவகன் இதைக் கண்டுகொள்ள, சிறைச்சாலைக்காரனின் இரக்கத்தால் ஐயரும் அம்மாளும் தப்பினார்கள். ஒரு சமயம் ஐயர் சமுசாரம் சிறைக்கூடத்துக்கு இருபது நாள் போல் வரவில்லை. பிற்பாடு, இந்நாட்களுக்குள் தான் பெற்ற பாலகனைத் தூக்கிக்கொண்டு ஐயரிடம் வந்தாள். ஐயர் அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு அழுதார். ஒருநாள் இவருக்கு ஒரு தலையணை கொண்டுவந்து கொடுத்தாள். அதில் புதியேற்பாட்டு மொழிபெயர்ப்பை உள்ளே வைத்து அது தெரியாப்படி தைத்துவைத்திருந்தாள்.

இப்படியிருக்குங்கால், இங்கிலிஷ்காரர் அபஜெயப்பட்டார்கள் என்ற செய்தி வந்தெட்டியது. அப்போது பர்மர் யுத்தத்தில் பிடிபட்ட வெள்ளைக்காரர் எல்லாரையும் ஜோடு ஜோடாகக் கட்டி

ஊரைச்சுற்றி நடத்திவந்து சிறையிலடைத்தார்கள். மறுநாள் அபஜெயப்பட்ட கைதிகளான வெள்ளைக்காரரையுங்கூடப் பிடித்து வந்து, ஜோடு ஜோடாகத் தெருச் சுற்றவைத்துக் கொலைக்களத்துக்கு நேரே கொண்டுபோனார்கள். இதைக் கேள்விப்படாத அம்மாளோ மறுநாள் தன் புருஷனைப் பார்க்க வந்தபோது அங்கு அவர் இல்லாததையும் வெள்ளைக்காரக் கைதிகள் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்பட்டதையும் அறிந்தபோது மகா விசனப்பட்டுச் சிறைச்சாலைக்காரனிடம் விசாரித்தாள். அவன்: அவர்கள் கொலைசெய்யப்படப் போகவில்லை, ஏதோ வேறு காவல் கூடத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள், ஆனால் எங்கே என்று தெரியாது என்று சொல்லிப்போட்டான். பிறகு அம்மாள் அவர்கள் போனதிசையாக விசாரித்துக்கொண்டே வீட்டுக்குப் போனாள். வழியில் ஒரு சிறைச்சாலைக்காரன் ஜட்ஸன் ஐயர் பிரியமாய் வைத்திருந்த தலையணையைப் போட்டுவிட்டுப் போனதால், அதைப் பத்திரப்படுத்திக் கொடுத்தால் தனக்கு ஏதாவது கிடைக்கும் என்று எண்ணி அதை வைத்திருந்தான். அம்மாள் அதை அவனிடமிருந்து சந்தோஷமாய் வாங்கிக்கொண்டாள். அதிலிருந்த இரகசியமோ ஒருவருக்கும் தெரியாது. பிறகு அவள் வீட்டிற்குப் போய் தன் தத்துப்பிள்ளைகள் இருவரையும் தன் மகள் மரியாளையும் கூச்சில் என்ற வேலைக்காரனையும் கூட்டிக்கொண்டு தன் புருஷன் அவுங் பேண்ட்வாய் என்ற இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டார் என்று கேள்விப்பட்டு அவ்வழியே ஒரு வண்டிவைத்துப் போய்ச் சேர்ந்தாள். ஐயர் போன அன்றையத்தினம் பர்மர்கள் அவரையும் அவரோடு சேர்ந்த கைதிகளையும் நடத்தின கொடுமையைச் சொல்ல இயலாது. வெற்றுக்காலுடன் சுடுமணலில் அவர்களை முடுக்கித் துரத்தினார்கள். காலில் கொப்புளங்கண்டு அதிலிருந்து இரத்தம் பீறிட்டது. வேலைக்காரன் ஒருவன் ஜட்ஸனுக்குத் தன் துண்டைக் கிழித்து அவர் காலில் கட்டினான். இதினால் சற்று லகுவுண்டாயிற்று. குறிக்கப்பட்ட இடம் விஷப்பூச்சிகள் நிறைந்த காட்டுக்குள்ளேயிருந்தது. தங்கின இடத்தில் நல்ல பாம்புகள் பத்துப்போல் அடித்தார்கள். அவர்களெல்லாரையும் கொண்டுவந்து தொழுவிலடித்துத் தொழுக்கட்டையைத் தூக்கிவைத்தார்கள். கொசுக்கள் புண்களில் மொய்த்ததினாலும், கால்கள் உயரத் தூக்கியிருந்ததாலும் அக்கைதிகள் பட்ட வேதனையைப் பார்த்துப் பர்மர் கட்டையைச் சற்று தாழ்த்தினார்கள். அடுத்த நாள் அம்மாள் அந்த இடம்போய்ச் சேர்ந்து அங்குள்ள தலைவனிடம் சிறைவீட்டிற்குப் பக்கத்தில் தான் குடியிருக்க இடம் கேட்டபோது

அவன் : கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டான். ஒரு சேவகனே, தன் குடிசையில் ஒரு தாழ்வாரத்தைக் கொடுத்தான். அங்கேயிருந்துகொண்டு ஐயரை அடிக்கடி பார்த்துவந்தாள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் ஒரு சிங்கம் அச்சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டது. காரணமென்னவெனில்: எதிரிகள் சிங்கக்கொடிவைத்து ஜெயிக்கிறார்கள், ஆகையால் நாம் வளர்க்கிற சிங்கத்தைக் கொன்றுவிட்டால் அவர்கள் அபஜெயப்பட்டுப்போவார்கள் என்று ராஜா மூடத்தனமாய் எண்ணி, தான் அருமையாய் வளர்த்த சிங்கத்தைப் பட்டினிப்போட்டுக் கொல்லும்படியாக இங்கு அனுப்பிவிட்டான். அவன் எண்ணியவிதமாகவே சிங்கம் இரையில்லாமல் செத்துப்போயிற்று. இந்தச் சிங்கம் வந்த தினத்தில் கைதிகள், தங்களைக் கொல்லத்தான் இவ்வரசன் இதை அனுப்பியிருக்கிறான் என்று நினைத்தார்கள். சிங்கம் செத்தபின் அக்கூட்டை வியாதியாயிருக்கிற ஐயருக்கு படுக்கத் தயவாய்க் கொடுக்கும்படி அம்மாள் மன்றாடினாள். கிடைத்தபின் அதைச் சுத்தம்பண்ணி அதில் ஐயரைப் படுக்க வைத்தாள். அது அவருக்கு அரண்மனைபோலிருந்ததால் அன்றைத்தினம் நன்றாய்த் தூங்கினார். ஐயருக்குச் சுகமானபிறகு அம்மாளுக்கு இந்த இடத்திலிருக்க உத்தரவு கிடைக்கவில்லை. வேறு குடிக்கூலி வீட்டில் இருந்தாள். ஐயரோ வியாதியால் அதிகப் பெலவீனப்பட்டுச் சாகிற நிலைமையிலிருந்தார்.

இது இங்ஙனமிருக்கத் திடீரென ஒருநாள் இங்கிலிஷ்காரர் பர்மியரை ஜெயித்துவிட்டார்கள் என்றும், அவர்களுக்கும் ராஜாவுக்கும் சமாதான உடன்படிக்கை நடக்கப்போகிறதென்றும் செய்திவந்தது. அதுவும் அன்றி, பர்மாபாஷையும் இங்கிலிஷ்பாஷையும் தெரிந்த ஒரு துவிபாஷியைத் தேடினபோது ராஜன் ஜட்ஸன் ஐயரை நினைத்து அவரை வரும்படி அழைத்தனுப்பினான். அப்படியே ஐயர் பர்மியப்படைகளுடன் தங்கித் தங்கி ஆவாவுக்குள் போனார். ஆனால் விலங்கு இன்னம் கழற்றப்படவில்லை. சமாதான உடன்படிக்கையெல்லாம் முடிந்தது. அப்புறந்தான் இவருக்கு விடுதலை. இங்கிலிஷ்காரர் இவருக்கு அதிக மரியாதை செய்து இவரைக் கனப்படுத்தினார்கள். விடுதலையானவுடன் இவர் தம் மனைவியைப் பார்க்கப்போனார். அநேகந்தடவை இந்த வீட்டைத் தாண்டிப்போயிருந்தபோதிலும் வீட்டிற்குள்போக உத்தரவு கிடைத்ததில்லை. இப்போதவர் வீட்டில் பிரவேசிக்கையில் அழுக்குப்பிடித்த வேலைக்காரியும், சாகப்போகிற நிலைமையிலுள்ள ஒரு நோஞ்சல்பிள்ளையும் ஒரு கட்டிலுக்குக் கீழே உரு

வழிந்துகிடக்கிற ஒரு பெண்ணையும் பார்த்துத் தன் மனைவியும் பிள்ளைகளும் இக்கோலமானதைக் கண்டு கண்ணீர்விட்டு, வியாதியால் பிரக்ஞையற்றுக்கிடந்த அம்மாளிடம் முழங்கால்படியிட்டு ஊக்கமாய் ஜெபித்தார். அம்மாளும் தன் கணவனைப்பார்த்துப் புது உயிர் அடைந்து, இவருடைய அரும்பிரயாசத்தால் சற்று சுகமடைந்தாள். இந்தக் கஷ்டத்திலெல்லாம் குச்சில் என்ற வேலைக்காரன் சம்பளம் கேட்காமல் உண்மையுள்ள கிறிஸ்தவனாக உதவிசெய்து வந்தான். இவனது உண்மைக்குத் தக்க வெகு மதியை ஐயரால் பிற்காலத்திலடைந்தான். ஐயர் சிலகாலம் தன் மனைவியின் சுகத்துக்காக அங்கு தங்கிப் பின் தமது மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஒருநாள் ராத்திரி நிலவில் கப்பலேறி ரங்கூனுக்குப் போனார். ஆ! அந்தநேரம் அவருக்கு எவ்வளவு ஆனந்தமும் இன்பமுமாயிருந்ததென்பது அவர் சொல்லும் வார்த்தைகளால் விளங்கும். இருபத்தொரு மாதத்துக்குப்பின் நானும் என் குடும்பமுமாகச் சேர்ந்து கப்பலில் போகும் இந்த நேரம் எனக்கு மோட்சத்தின் முன்ருசிபோல் இருக்கிறது என்பதாம். 1826-ம் வருஷம் இந்த நடபடிகளுக்குப்பின் சுகத்துக்கென்று இவர் தம் குடும்பத்தோடு அமெரிக்காவுக்குப் போனார். மோரீஷ் தீவண்டை போகும்போது அம்மாளுக்குச் சற்று சுகம் போலிருந்தது. ஆனால் சென்ற் ஹெலினா தீவைக் கடக்கும் போது அம்மாள் மறுபடியும் வியாதிப்பட்டுக் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தாள். ஐயருடைய துயரம் தாங்க ஒண்ணாததாயிருந்தது. அவர் தமது பத்தினியை உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று அடக்கம்பண்ணினார். பிள்ளைகளோடு அமெரிக்காவுக்குச்சென்று சிலகாலமாய்த் தங்கி, மறுபடியும் பர்மாவுக்குத் திரும்பி வந்தார். வந்து அநேக ஆத்துமாக்களைக் கிறிஸ்துவின் மந்தையில் அரும்பிரயாசத்துடன் அனுதினமும் சேர்த்துவந்தார். அநேகமாய் மலைநாட்டாரான கரேனர் என்றவர்களிடம்தான் இவரது வேலை சித்திபெற்றது. இதற்குள்ளாக அநேக ஐயர்மார் சீமையிலிருந்து வந்திருந்தார்கள். பத்து வருஷத்தில் 20,000 கரேனர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஒரு சமயம் ஐயர் சில சீஷர்களுடன் காட்டிற்குள்ளே போய் தியானம், உபவாசம், நூல் ஆராய்ச்சி முதலியவற்றில் சில வாரங்களைக் கழித்தபிறகு கிளம்பி வந்தார். இன்னொரு தடவை அவர் ஒண்டியாகவே வெகு அடர்ந்த ஒரு காட்டுக்குப் போனார். அப்போது பர்மர் எல்லாரும், அவர் நிர்வாண தசை யடையப் போய்விட்டார் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனாலோ

ஆவியில் திடப்பட்டவராய் அதைவிட்டு நாற்பது நாளுக்குப்பிறகு வெளியே வந்தார். அவ்வனத்தில் அவர் காட்டுக் கிழங்குகளைச் சாப்பிட்டுக் காட்டு மிருகங்கள் மத்தியில் வாசம்பண்ணினார். தாம் மொழிபெயர்த்திருந்த பழையேற்பாட்டையும் மூலபாஷையோடு ஒத்திட்டுப்பார்த்துத் திருத்தி முடித்தார். இவ்விதமாக முந்தி மொழிபெயர்த்த புதியேற்பாடும் இப்போது முடித்த பழையேற்பாடுமாகிய சத்தியவேதம் எவரும் குற்றம்சொல்லமுடியாத சுத்தமான பர்மாபாஷையில் அரும் பொக்கிஷமாக பர்மருக்கு இப்பெருமான் உபகரித்தருளினர். இவர் தமக்கு இங்கிலிஷ்காரர் இனுமாகக் கொடுத்த பணத்தையும் தமது சொந்தத்திலிருந்து வெகு பணத்தையும் இரண்டும் சேர்ந்த 21,000 ரூபாயையும் மிஷனுக்காகச் செலவழித்தார். ஏறக்குறைய நாற்பது வருஷம் பர்மருக்காக உழைத்துக் கடைசியாக 1850-ம் வருஷம் அதிகப் பெலவீனமாயிருந்ததுபற்றி வைத்தியர் யோசனைப்படி நீண்ட நாள் கடல் யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஜனங்கள் துக்கித்தபோது அவர்: விடுமுறை காலத்தில் ஒரு பள்ளிக்கூடப்பிள்ளை தன் வீட்டுக்குச் சந்தோஷமாய்ப் போவதுபோல் எனக்கு மரணம் வந்தால் சந்தோஷமாய் நானும் போவேன். என் பரம தகப்பன் என்னைத் தள்ளிப்போடமாட்டார் என்று அறிவேன். ஆனால் உங்கள் நிமித்தமும் என் பிள்ளைகளுமாகவும் இன்னும் இங்குத் தங்கி வேலைசெய்ய ஆசை உண்டு என்றார். பிறகு கப்பல் அநேகநாள் ஓடி நடுக்கடலில் இருக்கும்போது கர்த்தரின் இவ் ஊழியர் திடீரென மரித்துப்போனர். கப்பலாட்கள் எல்லாரும் நித்திரைபோன்ற அவரது மரணத்தைக் கண்ணுற்று, ஆச்சரியப்பட்டுப் பயபக்தியுடனிருந்தார்கள். அவரது பிரேதம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று சமுத்திரத்தின் ஆழத்தில் க்ஷேமிக்கப்பட்டது. இச்செய்தி பர்மருக்கும் அமெரிக்கருக்கும் சில மாதங்களுக்குப் பின்தான் தெரியவந்தது.

தற்காலம் இவரது வேலையின் விர்த்தி எவ்வாறெனில் 83,000 கிறிஸ்தவர்கள் உண்டென விடை தரலாம்.

---

## 3. சீன தேசம்

இத்தேசமானது இவ்வகண்ட உலகத்தில் பெரிய கண்டமாகிய ஆசியா கண்டத்திலுள்ள பெரிய தேசங்களில் ஒன்று. இது இந்தியாவுக்கு வடகிழக்கில் இருக்கிறது. இது அதிக ஜனத்

தொகையுள்ளது. இத்தேசம் வெகுகாலமாக சக்கரவர்த்திகளின் ஆளுகையிலிருந்து வந்தது. 1895-ம் வருஷம் நடந்த யுத்தத்தில் சீனு அபஜெயப்பட்டது. அப்போது ஆண்டுவந்த சக்கரவர்த்தி திறமையுள்ளவனல்ல. ஆகையால் இராணி அவனை ஒரு தீவில் அடைத்து வைத்துவிட்டு தானே சக்கரவர்த்தினியாயிருந்து தேசத்தை வெகு சாமர்த்தியமாய் ஆண்டுவந்தாள். சீனர் ஜப்பானியரோடு யுத்தம்பண்ணி தங்கள் நாட்டை காப்பாற்றிக்கொண்டார்கள். அப்போது இத்தேசத்தில் பாக்ஸர் என்னப்பட்ட கலகக் கூட்டத்தார் இராஜாத்திக்குச் சொன்ன துர் ஆலோசனையினுல் அவள் தன் தேசத்திலுள்ள எல்லா ஐரோப்பியரையும், அந்நிய தேசத்திலிருந்து தங்களுக்குக் கொண்டுவந்த சரக்குகளையும் அவற்றைக் கொண்டுவருபவர்களையும் முக்கியமாய்த் தங்கள் அபின் சரக்கால் அதிக மிஞ்சின லாபம் சம்பாதித்துக்கொள்ளுகிறார்களென்ற பொறாமையினுல் பகைத்து அந்நிய தேச வியாபாரிகளையெல்லாம் கொன்றாள். அவர்களோடு சுதேச கிறிஸ்தவர்களையும் கிறிஸ்து மதத்தைக் கொண்டுவந்த பாதிரிமார்களையும் வன்கொலையாய்க் கொன்றாள். இதற்கெல்லாம் பாக்ஸர் தலைமையாயிருந்து நடத்தினார்கள். இவர்களே இராச்சிய சீர்திருத்தக்காரர், சுதேச அபிமானமுடையோரென மதிப்புப் பெற்றிருந்தாலும், இவர்களால் உள்நாட்டுக் கலகம் 1900-ம் வருஷம் ஆரம்பித்தது. தேசம் சீர் குலைந்து போம்போலிருந்தது. 1908-ம் வருஷம் இராணி மரணமடைந்தாள். அதுமுதல் சீனு தேசம் சக்கரவர்த்தியின் ஆளுகையைத் தள்ளிப்போட்டது. பிரஜைகள் ஒருவரை பிரசிடென்ட் என்ற தேசத்தலைவராகத் தெரிந்துகொள்ள, அவரே தேசத்தை ஆண்டு வருகிறார். இது முதல் பிரஜாதிபத்தியம் நடந்தேறி வருகிறது.

**சீனுவின் மதங்கள்.** இத்தேசத்தவர் எந்த மத அனுசாரிகள் எனப் பிரித்துப்பார்ப்பது கஷ்ட அசாத்தியமாய் இருக்கிறது. என்றாலும் ஒருவாறு அவர்கள் மதங்களை மூன்று முக்கிய மதங்களாகப் பிரிக்கலாம். அவை: 1. **கான்பிஸியுஸ் மதம்**, 2. **தாவோ மதம்**, 3. **புத்த மதம்** என்பனவாம். என்றாலும் இம்மூவகையாரும் மூதாக்கள் அல்லது பிதிர் வணக்கக்காரர். இதன்றி ஷா அவாங்டி என்பவன் கி. மு. 269-ல் உண்டுபண்ணின ஷாங்டி என்னும் ஒரு தெய்வமும் உண்டு. இதன் விக்கிரகம் மோட்ச ஆலயம் என்னப்பட்ட பிக்கின் பட்டண ஆலயத்தில் இருக்கிறது. இவ்வாலயத்தைச்சுற்றிஇரண்டு மைல் விஸ்தீரணத்தில் ஒரு நந்தவனம் உண்டு. இவ்வாலயத்தில் சக்கரவர்த்திமாத்திரம் வருஷத்திற்கு

மூன்று தடவையும் மற்ற விசேஷித்த நாட்களிலும் தன் மந்திரி பிரதானிகளோடு யானை கட்டிய வண்டியிலேறி முந்தின நாளே போய் அவ்விராமுழுவதும் தபம்பண்ணி அடுத்த நாள் குடிகளெல்லோருக்காகவும் தன் இராச்சிய முழுமைக்காகவும் பிரார்த்திப்பான்.

---

## கான்பிஸியுஸ் மதம்

இம்மதத்தை ஸ்தாபித்தவன் கங் என்னும் போதகன். இவன் நன்றாய்க் கல்வி கற்று தத்துவசாஸ்திரமூலமாக அதிக பாண்டித்திய மடைந்தவன். இவன் பல தேசங்களுக்குப்போய்ச் சுற்றிவந்தவன். சக்கரவர்த்தி இவனை மந்திரிபோல் வைத்து ராஜ்யத்தை நடத்திவரும் காலத்திலே இன்னொரு அரசன் அவனைத் தள்ளிவிட அவ்வரசனுக்குத் தந்திராலோசனை சொன்னான். சக்கரவர்த்தி அப்பேச்சைக் கேட்டு அவனைத் தள்ளிவிடவே, அதிகக் கஷ்டத்துக்கு ஆள் ஆனான். ஷாங்டி தெய்வ வணக்கத்தை இவன் மதித்தான். இவன் மார்க்கம் இம்மைக்குரிய மார்க்கம்தான். மறுமையைப் பற்றிய பேச்சு அவனிடமில்லை.

ஒவ்வொருவனும் தன்னைத்தான் ஆண்டு நடத்தவேண்டும். பெண்களோ தங்கள் புருஷருக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பான். இவன் சீனாவின் கல்விக்காக அதிக முயற்சி எடுத்தவன், தன் முன்னோர்களை அதிகமாய் மதித்து வணங்கி வந்தான். கடைசியாகத் தன் 70-ம் வயதில் மரணமடைந்தான். இவனது சமாது பிக்கிங் பட்டணத்திலிருக்கிறது. எல்லா மாணாக்கரும் உத்தியோகஸ்தரும் அரசரும்கூட இவனை மதிப்பார்கள். இம்மதத்தார் இரத்தப்பலி செலுத்துவார்கள். விசேஷித்த திருவிழாக் காலத்தில் 1 எருது 22 பன்றிகள் 22 ஆடுகள் முழுசாய் உரித்துவிட்டுப் பலிசெலுத்தினபிறகு எல்லோரும் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றைப் பங்கிட்டுச் சாப்பிடுவார்கள்.

---

## தாவோ மதம்

இம்மதத்தை ஸ்தாபித்தவன் கி. மு. 600-ல் பிழைத்த லயோடிசி என்பவன். லயோடிசி என்னும் பெயருக்குக் கிழப்பையன் என்பது அர்த்தம். இவன் ஏற்படுத்தின மார்க்கப்போதனை தௌ என்பது. தௌ என்றால் வழி என அர்த்தம். சகலத்துக்கும் இதுவே தாய். இம்மார்க்கத்தின் போதனை சுயநய மற்றது, முழுதும் வீண்பக்தியுள்ளது.

## புத்த மதம்

இம்மதத்தை ஸ்தாபித்தவன் புத்தன். இம்மஹான் இந்தியா தேசத்தில் காசிக்கு வடக்கே கபிலவஸ்து என்னுமிடத்தில் ஆண்டு வந்த ஓர் அரசனின் குமாரன். இவனது குடும்பப் பெயர் கௌதமன். இவன் வாலிபனுயிருந்தபோது பிணி, மூப்பு, மரணம் என்ற காரியங்களைக் கவனித்துத் தியானித்ததின் பலனுக இல்லறத்தின் மேல் வெறுப்புற்று மனைவியையும் மகனையும் பெற்ருேரையும் ராஜ்யத்தையும் விட்டுக் காட்டில் போய் தபநிஷ்டை செய்தும், தன்னைத்தான் ஒடுக்கியும், யோகாப்பியாசம் பண்ணியும் வந்தான். இதிலெல்லாம் காரியமில்லையெனக்கண்டு அசோகமரத்தின் அடியில் உட்கார்ந்து நாற்பத்தொன்பது நாள் தியானம் செய்யவே ஞானம் பிறந்துவிட்டதாம். அப்போது புத்திமானுகிவிட்டானும். ஆகையால் இவனுக்குப் புத்திமானுனவன் என்று அர்த்தம்கொள்ளும் புத்தன்எனப் பெயர் வந்தது. புத்தன் என்பதற்குத் தெளிவுற்றவன் என்பது பொருளாம். இவனது மதம் நாஸ்தீக மதமே. மனிதனுடைய எல்லாக் காரியங்களும் இம்மையிலேயே முடிகிறது, நிர்வாணுதசையே மோட்சம். இவனது போதனை மூன்று. அவை யாவன :

1. பிறப்பு சஞ்சலம். 2. வயோதிபம் சஞ்சலம் 3. மரணம் சஞ்சலம்.

இம்மதம் இந்தியாவிலுண்டானபோதிலும் இப்போது அது கொஞ்சங்குறைய இந்தியாவைவிட்டுப் போய்விட்டது. சீனு, தீபேத்து, இலங்கை முதலிய இடங்களில்தான் இம்மதஸ்தர் ஏராளம். புத்த ஆலயம் ஒவ்வொன்றிலும் புத்தபிரதிமை இருக்கும். இம்மதத்தைச் சேர்ந்த அநேக மடங்கள் உண்டு. இக்குருக்களுக்கு லாமா எனப் பேர். அநித்தியம் துக்கம் சூனியம் என 108 மணிகளடங்கிய மணிமாலையை வைத்துக்கொண்டு கிளிப்பிள்ளைபோல் 108 தடவை சொல்வார்கள்.

சீனுவிலுள்ள எல்லா மதஸ்தருமே பொதுவாகத் தங்கள் இனத்தார் சாகும்போது பிரேதத்தைச் சிலநாள் வைத்திருந்து நாள் குறித்து அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி கல்லறைகளைச் சிறப்பாக அலங்கரித்து, பட்டாசு, வாணவேடிக்கை, காகிதவேலையான சாமான்கள், நாணயங்கள் முதலிய எல்லாம் கல்லறைமட்டும் கொளுத்திக்கொண்டே போவார்கள். காரணமென்னவெனில், ஆவிகள் காகிதத்தால் செய்தவையெல்லாம் நிஜமாகவே மறு உலகத்தில் நடக்குமென்பதாம். இப்படிச் செய்யாவிட்டால்

ஆத்துமாக்கள் கோபித்துக்கொண்டு தங்களுக்குத் தீங்கு செய்யும் என்று அவர்கள் அதிகமாய்ப் பயப்படுவார்கள். அல்லாமலும் செத்தவர்களுடைய ஆவிகளுக்காக வீடுகளில் பீடங்கட்டி அதற்குக் காணிக்கைகள் படைத்து வணங்கிவருவார்கள்.

இத்தேசத்தார் பெற்றோரைக் கனம்பண்ணுவதிலும், தொழில் முயற்சியிலும், அடக்கவொடுக்கத்திலும் சுதேச அபிமானத்திலும், மரியாதையிலும் சிறந்தவர்களே. எனினும் பழிபாவத்திற்கு அஞ்சாதவர்கள். அதிகமாக அபின் குடிப்பார்கள். இத்தேசத்தவர்கள் ஜனப்பெருக்கமுடையவர்களா யிருந்தாலும் விர்த்திக்கு இடையூறான சில விஷயங்கள் இவர்களிடமுண்டு. அவையாவன: தற்பொழிவு, தவறான தேசாபிமானம், ஒழுங்கற்ற ஆளுகை, மிஞ்சின ஜனப்பெருக்கம், கலியாணத்துக்கும் சாவுக்கும் அழிக்கும் வீண் செலவு, பெண்கள் படிப்பில்லாதிருத்தல், அபின் குடித்தல், மூடத்தனமான வீண்பக்தி முதலியன.

இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தப்பட்டு வருகின்றன. முன் காலத்தைவிட இப்போது பிறதேசக் கல்வியைக் கற்க ஆசைப்படுகிறார்கள். ஆங்கில கல்வி, தந்தி, தபால், புகைவண்டி, நீராவிக்கப்பல் முதலியவற்றைத் தாங்களும் கையாடுகிறார்கள். எல்லாவற்றிலும் முக்கியமான கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்து வருகிறார்கள்.

இத்தேசத்திற்கு முதல் முதலில் ரோமானித்தால் கிறிஸ்துமார்க்கம் கொண்டுபோகப்பட்டது. 1807-ல் தான் முந்தின சுவிசேஷ தூதுவர் அத்தேசத்திற்குப் போய்க் கிறிஸ்துவை பிரசங்கித்து, ஒரு சபையை ஸ்தாபித்தார். இம்முதல் மிஷனெரியின் பேர் மாரிஸன்.

---

## மாரிஸன்

இவர் தமது ஜென்ம தேசமாகிய இங்கிலாந்திலிருக்கும்போது அங்கே இருந்த ஒரு சீன வாலிபனோடு பழக்கம்பண்ணி அவனது தேசத்தின் நிலைமை நன்றாய்க் கேட்டறிந்து, அதற்காகப் பரிதாபப்பட்டுத் தான் போய் அத்தேசத்தில் உழைக்க எண்ணி அவனிடத்திலேயே சீன பாஷையை நன்றாய்க் கற்றுக்கொண்டார். இவர் அதிக ஏழைதான். என்றாலும் பல பாஷைகளையும், வானசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் முதலியவைகளையும் பிரயாசத்தோடு கற்றுக்கொண்டார். பிறகு சீனதேசத்திற்குப் போய்

அதின் வெளி நாட்டிலே அதிகக் கஷ்டப்பட்டுக் கிறிஸ்துவுக்காக உழைத்தார். ஏனெனில் அத்தேசத்தார் அந்நிய ஜாதியாரையா வது அந்நியமார்க்கத்தையாவது கொஞ்சமும் மதியாதவர்கள். இப்படி அநேக வருஷகாலம் உழைத்தார். அன்றியும் வேதபுஸ் தகம் முழுவதையும் சீன பாஷையில் மொழிபெயர்த்தார். பின் னும் அநேக சிறு புத்தகங்களையும், தாள் பிரதிகளையும், இலக்கணம், ஞானோபதேசம், சீன ஆங்கில மொழிகளுக்கு அகராதி முதலியவை களையும் எழுதிப் பிரசுரம்பண்ணினார். இத்தேசத்தில் இவரது வேலை யால் உண்மையாய்க் குணப்பட்ட ஒரு உத்தம சீனன் இவரோடு சேர்ந்து சந்தோஷத்துடன் ஆண்டவருக்காக உழைத்தான். இவன் குணப்பட்டது சுவிசேஷ வேலைக்கும் பெரிய உதவியா யிருந்தது. இவரைக்கொண்டு சீனாவில் சுவிசேஷத்திற்கென்று ஆண்டவர் 1807-ல் கதவைத் திறந்தார்.

---

## ஹட்ஸன் டேய்லர்

இவர் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தவர். தகப்பனார் அதிக பட்சமும் கண்டிப்பும் உள்ளவர். தாயார் அதிக தேவபக்தியும் அன் பும் உள்ளவள். இருவரும் தங்கள் பிள்ளைகளைத் தெய்வபக்தியில் வளர்க்கப் பிரயாசப்பட்டார்கள். இந்தப்பிள்ளைகள் பிற்காலத்தில் தங்கள் வீட்டை நினைத்து : எங்கள் வீடு மோட்சத்திற்கு அடுத்தது என்று சந்தோஷமாய்ச் சொல்லுவார்கள். ஹட்ஸன் சிறு வயதி லேயே அதிகப் பெலயீனமாயிருந்ததால் படிக்க முடியவில்லை. இன் னொருவன் வாசிக்கக் கேட்டுப் படிப்பது இவருக்கு வழக்கம். தகப் பனார் ஒரு மருந்துகடை வைத்து மருந்துசெய்து விற்றுவந்தார். அந்தக் கடையில் இவரும் போய்த் தகப்பனாருக்கு உதவிசெய்து வந்தார். இப்படி இருக்கும் காலத்தில் இவருக்குச் சுமார் பதினாறு வயது இருக்கும். இவரது விசுவாசம் தளர்ச்சியடைந்து போய்விட் டது. கெட்ட தோழர்கள் இவருக்குச் சிநேகிதரானார்கள். இயேசு கிறிஸ்துவைப்பற்றித் தாயார் இவருக்குப் போதித்திருந்த தெல் லாவற்றையும் மறந்துபோம்படியா யிருந்தார். அது விஷயத்தில் ஆசையுமில்லை. இதினால் தாயாருக்கு மனவேதனை கொஞ்சமல்ல. ஏனெனில் இவர் பிறக்கும்போதே தாயார் இவரை ஆண்டவரது ஊழியத்திற்கென்று ஒப்படைத்திருந்தாள். ஆனால் 'சிறுவத் தில் கல்வி சிலையில் எழுத்து' என்றபடி இவர் தாய் சிறுவத்தில் போட்டிருந்த வித்து வீண்போகவில்லை. இப்படி வளர்க்கப்பட்ட

பிள்ளை ஒரு காலத்தில் ஒருவாறு தவறிப்போனாலும் உணரும் காலம் வரும். அப்படியும் வந்தது.

ஒரு தடவை டெய்லர் அம்மாள் ஏதோ ஒரு காரியமாய் ஒரு ஊருக்குப் போய் அங்கே இரண்டு வாரம்போல் தங்கிவிட்டாள். அச் சமயத்தில் வீட்டில் இருந்த இந்தப் பையன் நேர போக்குக்காக தன் தகப்பனது புஸ்தகசாலையில் பல கதை புத்தகங்களைப் பார்த்த பின் ஒரு சிறு பத்திரிகை அவன் கைக்குக் கிட்டிற்று. அதில் இருந்த தெல்லாம் தேவபக்திக்குறியனவாம். இதிலுள்ள கதைமட்டும் வாசித்துவிட்டு வைத்துவிடுவேன் என்று எண்ணி வாசிக்கவே அதில் இயேசுகிறிஸ்து நமக்காக இரட்சிப்பை முடித்தார் என்னும் சத்தியம் தெளிவாய்க் கண்டிருந்தமையால், வாசிக்க வாசிக்கப் பையனுக்கு அதைக் கீழே போட்டுவிட மனமில்லாமல் அதின் முடிவுவரைக்குமே வாசித்தான். முடிந்தது என்ற வார்த்தை இருதயத்தை அசைத்தது. அவர் எனக்காகவும் இரட்சிப்பை முடித்தாரே என்று முடிவுபண்ணிக்கொண்டு முழங்கால் படியிட்டுத் தன் இரட்சகருக்குத் தன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தார். ஆனால் ஒருவருக்கும் இதைக்குறித்துச் சொல்லாமல் தன் தாயாருக்கே முந்த முந்த அதைத் தெரிவிக்க எண்ணினார். தாயாரும் வீட்டுக்கு வந்தாள். மகன் தாயாருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு: அம்மா நான் என்னை இரட்சகருக்கு ஒப்படைத்துவிட்டேன் என்று சொன்னார். தாயோ: மகனே எனக்கு அது தெரியும் என்று சொன்னாள். எப்படி அம்மா என்று பையன் கேட்கத் தாயானவள்: நான் போயிருந்த ஊரில் நான் ஆண்டவரிடம் வெகு நேரம் உனக்காகவே போராட்ட ஜெபம் செய்து அழுது கேட்டபின் என்னை அறியாமலே என் விண்ணப்பம் ஸ்தோத்திரமாக மாறிவிடவே என் ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் அளித்துவிட்டார் என நிச்சயித்து அன்று முதல் நான் சந்தோஷமாயிருக்கிறேன் என்று பதில் சொன்னாள். இது மகனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அது முதல் அவன் அதிக மனச்சமாதானம் அடைந்து தன் தகப்பன் கடையில் உண்மையும் சுறுசுறுப்புமாய் வேலைசெய்துவந்தான். ஒவ்வொருநாளும் ஜெபிப்பான். என் ஆண்டவர் எனக்கு ஒரு விசேஷித்த வேலை கொடுக்கமாட்டாரோ என்று எண்ணுவான். ஒருநாள் இராமுழுவதும் ஜெபத்தில் போராடினான். பிசாசு அவனை அதிகச் சந்தேகத்துக்குள்ளாக்கி: உன்னால் ஒரு வேலையும் செய்யமுடியாது என்று சொல்லிற்று. இச்சந்தேகத்தையும் மேற்கொண்டார். கடைசியாய் ஒரு தேவ சத்தம் அவர் காதில் தொனித்தது. அதா

வது: ‘நீ எனக்காகச் சீனுவுக்குப் போ’ என்பதே. சந்தோஷமாக முழங்காலிலிருந்து எழுந்தார். அது முதல் சீனுவைப்பற்றியே யோசித்துக்கொண்டிருப்பார். ஒருநாள் அவ்வூர் குருவினிடம் போய்ச் சீனு தேசத்தைப்பற்றிய விபரம் அடங்கிய ஒரு புஸ்தகத்தைக் கேட்டார். அவர் அப்படியே கொடுத்து: ஏன் சீனுவைப் பற்றி யறிய ஆசிக்கிருய் என்ருர். ஹட்ஸன் அதற்கு: ஐயா, நான் சுவிசேஷ வேலை செய்யச் சீனுவுக்குப் போகிறேன் என்ருர். அதற்கவர்: ஐயோ! நீ சிறு பிள்ளைத்தனமாய்ப் பேசுகிருய், வயது வந்தால் உன்னுடைய எண்ணங்கள் கஷ்டமுள்ளது என்பதை உணர்ந்துகொள்வாய். இயேசுவின் காலத்திலுள்ள அப்போஸ்தலர் காசும், மூட்டை முடிச்சும் இன்றி அப்படி தெய்வ ஊழியம் செய்தார்கள். உன்னுல் முடியுமா என்ருர். இவரோ தளர்ந்து போகாமல் அப்புஸ்தகத்தை வாசித்துவிட்டுக் கொடுத்துவிட்டார். அவர் தான் சீனுவுக்குப் போனுல் வைத்திய வேலையை நன்ருய்க் கற்றுக்கொண்டால் மாத்திரம் பிரயோஜனமுண்டென எண்ணி லண்டன் பட்டணத்திற்குப் போனுர்.

அங்கே படிக்கும்போது இவர் கறுப்பு ரொட்டியும் தண்ணீருமே சாப்பிட்டு ஒரு சாதாரண சொற்ப வாடகைக்கு ஒரு வீடு அமர்த்திக் குடியிருந்துகொண்டு தமது சம்பளத்தில் மூன்றில் ஒன்றைத் தமக்காகவும் மீதியை தர்ம காரியத்திற்காகவும் செலவழித்து வந்தார். இதுதான் சீனுவில் பிழைக்கவேண்டிய மாதிரி என்றெண்ணினுர். ஆகையால் அதற்குப் பழகிக்கொள்ள இப்படிச் செய்தார். ஒருதடவை தாயாருக்குக் காகிதம் எழுதினதில்: அம்மா நான் சீனுவுக்கு அனுப்பப்பட ஜெபியுங்கள். ஆகா! தேவதூதருக்கு இவ்வேலையிட்டால் எவ்வளவு சந்தோஷமாய்ச் செய்வார்கள். எனக்கு நூறு உயிர் இருந்தாலும் சீனுவுக்காக எல்லாவற்றையும் கொடுக்க எனக்கு ஆசை என்று எழுதினுர். சீனு, சீனு என்பதே இவரது எண்ணமும் நினைவும். இவருக்கு வைத்தியம் கற்பித்த எஜமான் வருஷத்தில் நாலு தடவை சம்பளம் கொடுத்துவந்தார். ஒரு தடவை அவருக்குச் சம்பளம் கொடுக்க மறந்துபோனுர். இவரும் அவரைக் கேட்கவில்லை. இவரது எண்ணமோ: ஒருவரையும் ஒன்றும் கேட்கக்கூடாது, தான் தேவனிடம் கேட்டால் அவர் உரியவரின் நெஞ்சில் பிரவேசித்து அதை அசைப்பார். அப்போது கிடைக்கும். ஏனெனில் இப்படி மனுஷரை நம்பாமல் எல்லாவற்றிலும் தேவனையே நம்பி பிழைத்தால்தான் சீனுவில் நான் வேலை செய்யமுடியும் என்று எண்ணினுர். எளியோரின் கஷ்டங்களில் அவர்களுடன் ஜெபிப்பதாலும் அவர்களுக்குத் தமக்குள்ளதைக்

கொடுப்பதாலும் சீனவில் செய்யப்போகும் வேலைக்குத் தம்மைப் பழக்கிக்கொண்டார். ஒருநாள் வைத்தியர் இவரிடம் வந்து: உன் சம்பளம் வாங்கினயா எனக் கேட்க இவர் இல்லை என்றார். இப்போதாகிலும் வைத்தியர் சம்பளம் கொடுப்பார் எனச் சந்தோஷப்பட்டார். ஆனல் பண்டிதர்: நான் மறந்து போனேன், இப்போதும் எல்லாப் பணங்களையும் பொக்கிஷத்தில் போட்டாயிற்று என்று சொல்லிப் போய்விட்டார். அப்போது இவர் விசனத்துடன் ஒரு மூலையில் போய் ஜெபித்தார். சற்று நேரம் சென்று பண்டிதர் திரும்பி வந்து இவரைக் கூப்பிட்டு: இதோ, இப்போதுதான் நான் முன் வைத்தியம் செய்த இடத்திலிருந்து இந்தப் பணம் வந்தது. இதை உன் சம்பளக் கணக்கில் வைத்துக்கொள் எனச் சொல்லிக் கொடுத்தார். ஹட்ஸன் அதை வாங்கிச் சந்தோஷப்பட்டார்.

ஒரு முறை ஒரு வியாதிக்காரனைச் சந்திக்கப் போயிருந்தார். அவ்வீட்டில் அவர்கள் பட்ட கஷ்டத்தைப் பார்த்து, அவர்களுக்கு இரங்கி இவர் சட்டை பையில் இருந்த கடைசி பணத்தைக் கொடுக்க நினைக்கையில், இதை முழுவதும் கொடுத்துவிட்டால் எனக்கு ஒன்றும் இராதே என்ற போராட்டம் இவருக்கு வந்தது. 'பிதா எனக்கிருக்கிறார்' என்ற நம்பிக்கையால் இப்போராட்டத்திலும் ஜெயமடைந்து அந்தப் பணத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு வெறுங்கையாய்த் தமது வீடு சேர்ந்தார். இதன்பின் ஒருவர் திடீரென்று 10 ரூ. பணம் அவருக்கு அனுப்பினர். இதைப் பெற்று: அதற்கு வட்டியோடு கடவுள் எனக்குத் தந்தார் எனச் சந்தோஷப்பட்டு, இப்படியாகக் கடவுள்பேரில் அதிக நம்பிக்கை வைத்தார். பின்னும் ஓர்நாள் இவர் வைத்திய சாலையில் வேலைசெய்துகொண்டிருக்கும்போது விஷக்காய்ச்சலில் இறந்த ஒரு பிரேதத்தைச் சோதிக்கும்போது, அந்த ஊசியைத் தெரியாமல் தன் கையில் குத்த உடனே கொஞ்சநேரத்தில் அந்த விஷக்காய்ச்சல் இவருக்கு வந்து குளிராலும் காய்ச்சலாலும் கஷ்டப்பட்டார். இவரைக் கொண்ட வைத்தியர் இதையறிந்து இவரைப் பார்த்து: நீ சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டும். இது மரணத்துக் கேதுவானது. ஆகையால் ஒரு வண்டியில் ஏறிச் சீக்கிரமாய்ப் போய் உன் காரியங்களை எல்லாம் ஒழுங்குபடுத்தி மரணத்திற்கு ஆயத்தம் பண்ணவேண்டும் என்று சொல்லிவிட்டார். அப்போது வண்டிக்கு இவரிடம் பணம் கிடையாது. இவரால் நடக்கவு முடியவில்லை. கொஞ்சத்தூரம் சென்று ஓர் டிராம் வண்டியிலேறி வீடு சேர்ந்தார். அங்கு இவருடைய

இனத்தார் இவருக்கு உதவிசெய்தார்கள். அவ்விடம் வேறு வைத்தியர் இவரைப் பார்த்து: நீ முன் கனத்த சாப்பாடு சாப்பிட்டிருந்தால் மரணம்தான் வரும். லேசாய்ச் சாப்பிட்டிருந்தால் ஓர்வேளை பிழைக்கலாம் என்று சொன்னார். அப்போது இவர்: நான் கட்டாயம் சீனாவுக்குப் போவேன். அப்படி நான் போகாமல் செத்தால் கர்த்தர் எப்படி என்னைச் சீனாவுக்குப் போ என்று சொல்லுவார் என தனக்குள்ளே போராடி இப்படியாகக் கர்த்தரையே நம்பித் திரும்பவும் சுகமடைந்தார். இதை அறிந்த அந்த வைத்தியர்கூட இவர் விசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டுத் தாமும் குணப்பட்டார்.

பிறகு ஹட்ஸன் தமது பெற்றோரிடம் போய்ச் சிலகாலம் தங்கி 1853-ல் சீனாவுக்குப் புறப்பட்டார். தாயார் அதிக தூரமாய் அனுப்புவதை முன்னிட்டு மனவேதனையடைந்தார்கள். மகனே தாயைத் தேற்றிக் கப்பலில் ஏறினார். கரையில் நின்றுகொண்டிருந்த தாயார் மகனது பிரிவின் ஆற்றாமையால் மயக்கம்போட்டுக் கீழேவிழுந்தார்கள். மகன் பழையபடி கரைக்கு வந்து தாயாருக்குத் தேறுதல் சொல்லி முத்தியிட்டுக் கப்பலுக்குள் போனார். கப்பலும் புறப்பட்டது. வெகுதூரம் வெகுநாள் பிரயாணம் செய்தார்கள். இப்படிப் பிரயாணம் செய்யும் ஒருநாள் திடீரென்று காற்றடித்துக் கப்பல் ஒரு கற்பாறைக்குச் சமீபமாய்ப் போய்க் கொண்டிருந்தது. மாலுமி என்னசெய்தும் மோசத்திற்குத் தப்ப முடியவில்லை, எல்லோரையும் பார்த்து: நாம் அபாயத்திலிருக்கிறோம், ஆகையால் ஜெபியுங்கள் என்றார். ஹட்ஸனைப் பார்த்து: நீர் சீனாவுக்குப் போவேன் என்று நம்பினீரே, இப்போது நாமெல்லாரும் சாகப்போகிறோம் என்றார். ஆனால் ஹட்ஸனும் சில உத்தமர்களும் ஊக்கமாய் ஜெபித்தார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் காற்று வேறுபுறமாய் வீசவே கப்பல் கற்பாறையை நெருங்காமல் வேறுபக்கமாய்த் திருப்பப்பட்டது. எல்லோரும் ஆண்டவரைப் புகழ்ந்து இவ்வாச்சரியமான விடுதலையை எப்பொழுதும் நன்றியறிதலோடு நினைவுகூர்ந்தார்கள்.

பஸிபிக் சமுத்திரத்தில் போகும்போது காற்று மும்முரமாய் அடித்தபடியால் கப்பல் நரமாமிச பக்ஷணிகளின் தீவுகளில் ஒன்றுக்குக் கிட்டிவந்தது. கரையிலே நரமாமிச பக்ஷணிகள் தங்களுக்கு நல்ல இரை அகப்பட்டதென்று துள்ளி, பிரயாணிகள் கரைவந்தவுடன் அவர்களைக் கொன்று அக்கினியில் சுடும்படியாகத் தீ வளர்த்திக்கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துக் கப்பலிலிருந்தவர்களெல்லாரும் பெரும் கூச்சலிட்டு அழுதார்கள். அப்போதும்

ஹட்ஸன் தேவனது வாக்குத்தத்தத்தைப் பிடித்து ஜெபித்தார். காற்று எதிர்புறமாய் அடிக்கவே கப்பலை வேறு திசையாய்த் திருப்பி நடத்தினார்கள். இவ்விதமாய்க் கடலில் பல பல கஷ்டங்களையும் கடந்து சீனாவுக்கு இவ்வுத்தமர் வந்து இறங்கினவுடன், ஆண்டவர் தம்மை அழைத்த தேசக் கரையிலிருந்து அவரைத் துதித்து ஆனந்தக் கண்ணீர்விட்டுச் சந்தோஷத்துடன் தமது வேலையைத் தொடங்கினார். இது 1853-ம் வருஷம்.

இந்தக் காலங்களிலே சீனாவிலே யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ஹட்ஸனுக்கு முன்னாலேயே அங்கு வேலைசெய்துகொண்டிருந்த லண்டன் மிஷன் ஐயர்மார் தங்கள் வீட்டில் இவரை அன்புடன் ஏற்றுக்கொண்டார்கள். இவர் அங்கே சிலகாலம் தங்கிச் சீனப்பாஷையைக் கற்றுக்கொண்டார். இவருக்குப் பணக்குறைவினாலும் சுகக்குறைவினாலும் பாஷைக்குறைவினாலும் மிகுந்த கஷ்டம் நேரிட்டது. என்றாலும் ஊக்கத்தைக் கைவிடவில்லை. ஆறுமாசத்திற்குப்பின் சீனப்பாஷையை நன்றாய்ப் பேசமுடியாததினால் கைப்பிரதி, தாள்புத்தகம் முதலியவற்றைக் கொடுத்தும் விற்றும் இவ்விதமாய்க் கர்த்தருக்கு ஊழியம்செய்தார். சீனர் அந்நியன் என்று அருவருக்காதபடி சீனரைப்போலும் சடையும் (பொய் முடியினால் பின்னி) உடுப்பும் போட்டுக்கொண்டார். இது மற்ற ஐயர்மாருக்கு அதிக வருத்தம். இப்படியாகச் சில காலத்திற்குள் நன்றாய்ப் பாஷையைக் கற்றுக்கொண்டு பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரிந்தார்.

இவரது வேலைக்கு ஒரு உத்தமதோழன் சீமையிலிருந்து வந்தார். அவர் பேர் ஜோன்ஸ். இவர் குடும்பஸ்தர். இருவரும் தங்களை வெறுத்து ஆண்டவருக்கு ஊழியஞ்செய்து ஒரு புதிய மிஷன் ஸ்தானத்தை ஸ்தாபித்தார்கள். ஒருநாள் சாப்பாட்டுக்கு வீட்டில் ஒன்றுமில்லை. கையில் காசுமில்லை. என்ன செய்வது என்று யோசித்துத் தங்களிடமிருந்ததும், சீனாக்காரருக்கு உபயோகப்படுவதுமான இரும்பு அடுப்பு ஒன்றை விற்கத் தீர்மானித்தார்கள். இதற்காக அடுப்பை எடுத்துக்கொண்டு அடுத்த ஊருக்குப் போகலாமென்று யோசித்துப் புறப்பட்டபோது நடுவிலுள்ள ஆற்றின் வெள்ளத்தாலும் தோணி இல்லாததாலும் தடைப்பட்டு, இது ஆண்டவருடைய தடை என்று சொல்லி வீட்டுக்கு வந்தார்கள். வந்தவுடன், ஜோன்ஸ் அம்மாள் தன்னையும் பிள்ளைகளையும் ஒரு வீட்டிலே சாப்பாட்டுக்கு அழைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஐயர்மார் தங்கள் வீட்டில் மீதியாயிருந்த கொஞ்சம் கொக்கோ மாவைக் காய்ச்சிக் குடித்துவிட்டு ஒரு அறையில் போய்

இருவரும் ஊக்கமாய் ஜெபித்தார்கள். ஜெபித்து எழுந்தவுடன் தபால்காரன் ஒரு காகிதமும் பணமும் வந்திருக்கிறதென்று சொல்லிக் கதவைத் தட்டினன். சந்தோஷத்துடன் கதவைத் திறந்து தங்கள் ஜெபத்திற்குக் கிடைத்த உத்தரவை ஆச்சரியத்துடன் பெற்றுக்கொண்டார்கள். இப்பணத்தைக்கொண்டு சிலகாலம் பிழைத்துவந்தார்கள்.

ஹட்ஸன் டெயிலர் அங்கே சுவிசேஷ வேலைசெய்துவந்த ஒரு ஆங்கில கன்னியை மணம்புரிந்துகொண்டார். அநேகச் சீனர் குணப்பட்டுச் சபையில் சேர்ந்தார்கள். இப்படி இருக்க அங்கே ஆஸ்பத்திரி கட்டி வைத்தியராயிருந்த பார்க்கர் என்பவர் தாம் சீமைக்குப் போகவேண்டியிருந்தபடியால், ஹட்ஸன் டெயிலரை ஆஸ்பத்திரியை ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அந்த ஆஸ்பத்திரியிலுள்ள வியாதிக்காரருக்குச் சாப்பாடும், பண்டிதமும் வைத்தியர்தான் செய்யவேண்டும். இதின் நிமித்தம் ஹட்ஸன் பணம் இல்லையே என்று யோசித்துக்கொண்டார், என்றாலும், மறுபடியும் கர்த்தரைத் திடநம்பிக்கையாய் நம்பி அவ்வேலையை ஒப்புக்கொண்டார். இந்த வைத்தியசாலையில் அவர் வியாதிக்காரரைப் பார்த்துக்கொண்டும் அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் வந்தார். இத்தோடு தமது சபையையும் கண்காணித்து வந்தார். இவர் மனைவியோ தன் வீட்டுக்காரியங்களையும் ஆஸ்பத்திரி கணக்குகளையும் பார்த்துக்கொண்டு அத்தோடு லோகத்தின் பாவத்தைச் சுமந்த தேவாட்டுக்குட்டியைப்பற்றி வியாதிக்காரருக்குச் சொல்லியும் வந்தாள். இவ்வாறு கூடி உழைத்தது அவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

ஒருநாள் ஆஸ்பத்திரி சமையல்காரன் ஹட்ஸன் இடம் வந்து: அரிசிமூட்டையெல்லாம் ஆகிவிட்டது, இதுதான் கடைசி மூட்டை என்றான். இவரிடமோ வேறு அரிசி வாங்க காசுமில்லை. வேலைக்காரருக்குள் முறுமுறுப்பும் உண்டானது. இதையெல்லாம் இவர் கண்டு விசனத்துடன் அறைக்குள் போய்க் கதவை அடைத்துக்கொண்டு தமது வழக்கப்படி ஜெபம் செய்தார். கொஞ்சநேரத்துக்குள் பதிலும் கிடைத்தது. யாரோ ஒருவன் 1,000 ரூபாயை அனுப்பிக் காகிதமும் எழுதியிருந்தான். காகிதத்தின் விபரம் என்னவெனில்: எனக்கு அதிக பணம் இருக்கிறது. அதுவுமன்றி என் சொந்தக்காரன் ஒருவன் செத்துப்போக, அவனது சொத்தும் எனக்குக் கிடைத்தது. அப்பணத்தைக்கொண்டு என்ன செய்யலாமென்று யோசித்தபோது உங்கள் வைத்தியசாலையின் ஞாபகம் எனக்கு வந்தது. ஆகையால் இந்த ஆயிரம் ரூபாயை உங்களுக்கு

அனுப்புகிறேன். நீங்கள் இதைக் கர்த்தருடைய வேலைக்கென்று செலவழித்துக்கொள்ளுங்கள் என்று எழுதியிருந்தது. இந்தத் தேவ நடத்துதலைப்பார்த்து, இவர் ஆனந்தங்கொண்டார். கிறிஸ் தவரல்லாத அநேகர்கூட இதை அறிந்து ஆச்சரியப்பட்டு: எங்க ளது தேவன் இவ்வளவு வல்லமையுள்ளவரல்ல என்று சொல்லிச் சுவிசேஷத்துக்குச் சார்பானார்கள்.

சிலகாலம் இப்படி வேலைசெய்து வரும்போது ஹட்ஸனுக்குச் சுகம் அடியோடு கெட்டுப்போய் அதிகக் கஷ்டப்பட்டார். வைத் தியர்கள் இவரை ஜன்மதேசம் போகக் கட்டாயம்பண்ணினார்கள். தேவனுக்கு என்னைத் தமது பணிமுட்டாக உபயோகிக்கப் பிரிய மில்லையாக்கும் என்று மனக்கிலேசமடைந்து 1860-ம் ௵ இங்கி லாந்துக்குப் போனார்.

---

## சொந்த தேசத்தின் அனுபோகம்.

இங்கிலாந்து தேசத்தில் ஒரு பெரிய வைத்தியரைக்கொண்டு தமது உடம்பைப் பரிசோதித்துக்கொண்டார். அவ்வைத்தியர் இவரைப் பார்த்து: இனி நீர் சீனத்துக்குப்போவது சந்தேகம். அப் படி போகிறதாயிருந்தாலும் சமீபகாலத்துக்குள் முடியாது. வியாதி பலமாயும் நீர் பெலவீனமாயுமிருக்கிறீர் என்று சொல்லிப்போட் டார். இது இவருக்கு அதிக விசனமாய் இருந்தது. வைத்தியர் உத்தரவின்படி சுகத்திற்காகக் கடற்கரையோரமான ஒரு ஊரில் குடியிருந்துவந்தார். அங்கேயும் சும்மாயிராமல் சீனபாஷை யிலிருந்த புதியேற்பாட்டை இவர் சஞ்சரிக்கிற சீனநாட்டார் பேசின பாஷையில் திருப்பினார். இங்கிலாந்தில் 2 வருஷத்திற் குள் இவரிடம் வரத்துப்போக்காயிருந்து சீனாவிற்காக உழைக்கப் பிரியப்பட்ட 5 சுவிசேஷத் தூதுவரைச் சீனாவுக்கு அனுப்பினார். சீனாவைப்பற்றிய கவலை இவரை அதிகமாய் வருத்திற்று. தாமோ வியாதியஸ்தர் என்றபோதிலும் தமது அறையிலே சீனதேசப் படத் தைத் தொங்கவைத்து இதைப் பார்த்து அந்தத் தேசத்திற்காக ஜெபித்து வந்தார். முன்னே தாம் ஊக்கமாய் வேலைசெய்த பாகத் திற்காகமாத்திரம் ஜெபித்து வந்த இவர் இந்தப் படத்தைப் பார்க்கப் பார்க்க, இன்னும் எவ்வளவோ உள்நாட்டுப் பாகங்களும் அதில் 11 மாகாணங்களும் இருக்கிறதே என்றும் அங்கே சுவிசேஷம் அறி விக்கப்படாமல் இருக்கிறதே என்றும் அங்கலாய்ப்பார். மன அமைதியே இவருக்கு இல்லை. சீனாவின் பாரம் இவரை அழுத்

திற்று. ஐயோ! 250,000 ஆத்துமாக்கள் இரட்சகரை அறியாமல் ஒரு வாரத்திற்குள் சீனுவில் சாகிறதே எனப் புலம்புவார்.

ஒருநாள் 1865-ம் ஸு ஜூன்மீ 25-ம் தேதி ஞாயிறுதினத்தில் கோவில் மணிகள் அடித்தபோது அவ்வூரார் எல்லோரும் கூட்டம் கூட்டமாய்க் கோவிலுக்குப் போனார்கள். ஹட்ஸன் அதைப் பார்த்தபோது: இந்தத் தேசமெல்லாம் இந்த நாளில் தேவனைத் தங்கள் இரட்சிப்புக்காகப் புகழவும் துதிக்கவும் போகிறார்களே, ஐயோ அந்தச் சீனுதேசம் நிர்ப்பந்த நிலைமையிலிருக்கிறதே, அங்கே இப்படிப்பட்ட காலம் வராமலிருக்கையில் நான் எப்படிச் சந்தோஷமாய்க் கோவிலுக்குப் போகமுடியும் என்று கோவிலுக்குப் போகாமல் சமீபத்திலுள்ள ஆற்றங்கரைக்குப்போய் ஆண்டவரை நோக்கிச் சீனுவுக்காக வெகு ஊக்கமாய் யாக்கோபைப்போல் தன் பெலன் தனக்குள் இல்லாமல் போகுமட்டாகப் போராடினார். அடிக்கடி தேவனுக்கும் இவருக்கும் இதற்குமுன் சம்பாஷணை நடந்ததுபோல் இப்போதும் சம்பாஷணை நடந்தது. இது வருமாறு:

ஹட்ஸன்: ஆண்டவரே, யாரைச் சீனுவின் உள்நாட்டுக்கு அனுப்புவீர்?

தேவன்: நீ ஏன் போகக்கூடாது?

ஹட்: அது என்னால் முடியாது, ஆண்டவரே.

தேவன்: வேண்டிய ஆட்களைத் தேவன் கொடுக்கமாட்டாரா?

ஹட்: அவர் கொடுப்பார்.

தேவன்: வேண்டிய பணத்தைக் கொடுக்கமாட்டாரோ?

ஹட்: கொடுப்பார்.

தேவன்: அப்படியிருக்க, நீ ஏன் விசுவாசித்துப் போகமாட்டாய்.

ஹட்: நான் இந்த மஹாப் பெரிய வேலையை நடத்தமுடியாது, யாரையாவது அனுப்பிவிடும்.

தேவன்: உத்தரவாதம் என்பேரில் அல்லவோ இருக்கிறது. நீ விசுவாசித்துக் கீழ்ப்படி, தியங்காதே, கலங்காதே.

ஹட்: நான் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறேன், ஆண்டவரே.

உடனே இவர் தைரியமடைந்து: ஆண்டவரே, எனக்கு இப்போது நீர் 24 ஆள் கொடுக்கவேண்டும். சீனுவிலுள்ள 11 மாகாணங்களுக்கு 22 பேர், மங்கோலியாவுக்கு 2 பேர் என்று சொல்லி ஜெபித்தார்.

இதன் பின்பு தமது அனுபவத்தையும் தாம் துவக்கப்போகிற சுவிசேஷ வேலைக்காக தமது யோசனைகளையும் வாய்மொழியாகவும், பத்திரிகைகளைக்கொண்டும் வெளிப்படுத்தினர். இதன் பயனாக இவர் கருத்துக்கு இசைந்த தோழர்கள் கிடைத்தார்கள். ஹட்ஸன் ஐயர் இத்தோழரோடு யோசனைபண்ணிச் சீனா உள்நாட்டில் நடத்தவேண்டிய சுவிசேஷக் கிரியைக்கென்று பின் வரும் ஏற்பாட்டைச் செய்தார்.

அவர்கள் சீனாவில் ஸ்தாபிக்கப்போகிற மிஷன், சீனா உள் நாட்டு மிஷன் என பேர் பெறும், ஏனெனில் சீனாவில் உள்பாகத்தில்தான் இவர்கள் வேலைசெய்யவேண்டியது. அதுதான் சுவிசேஷம் இன்னும் அறிவிக்கப்படாத இடம், அறிவிக்கப்படாத இடத்திற்கு அறிவிப்பதே இவர்களது நோக்கம். அதில் உழைக்கும் ஊழியர் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சுவிசேஷ சபையாயிருந்தால் போதும். அவர்கள் ஊழியம்செய்யும் போது ஒருவரிடத்திலும் கடன்படக்கூடாது, பணத்திற்காக மனிதரிடமும் ஒன்றும் கேட்கவும்கூடாது, எல்லாக் காரியத்துக்கும் தேவனையே கேட்டு அவரையே நம்பி உழைக்கவேண்டும். சம்பளமும் திட்டமாக ஒன்றும் ஏற்படுத்தப்படாது. ஆண்டவர் பணம் கொடுத்தால் ஆகட்டும், இல்லாதேபோனாலும் அவர் சித்தப் படியே சும்மாதானிருக்கவேண்டும் என்பதாம்.

இப்படித் தாங்கள் செய்த தீர்மானத்தை இங்கிலாந்து முழுவதிலும் பரம்பப்பண்ணிச் சீனா மிஷனைப்பற்றிய தங்கள் ஒழுங்கைத் தெரிவித்தார்கள். இவர்களது முயற்சியால் தங்களை சீனாவில் சுவிசேஷ வேலைக்காக ஒப்புக்கொடுத்தவர்கள் 66 பேர். அத்தனை பேரிலேயும் 16 பேரைமாத்திரம் தெரிந்துகொண்டு அவர்களோடு ஹட்ஸனும் சேர்ந்து சீனாவுக்குப் போனார். இது 1866-ம் ஞு நடந்தது. இப்போது இவர் கேட்டிருந்தபடியே இம்மிஷனுக்காக முன் போயிருந்தவர்களும், இப்போது போகிறவர்களும் சேர்ந்து 24 பேர் ஆனார்கள். காலம் ஆக ஆக இன்னும் அநேக ஊழியரும் சீனாவில் போய் வேலைசெய்தார்கள். 1916-ம் ஞு சீனாவில் நடந்து வந்த வேலையைப்பற்றிய 50 வருஷ அறிக்கைபத்திரிகையாக வெளிப்பட்டது. அவை பின்வருமாறு :

## 1866—1916.

இது சீன உள்நாட்டு மிஷன்வேலையைப்பற்றிய பத்துப் பத்து வருஷ விர்த்தியைக் காட்டும் 5 பாகங்களாக அமையும்.

I. 1866–1876. சீனாவில் மிஷன் வேலையின் அஸ்திபாரமும் உள்நாடுகளில் சீனரோடு பழக்கம்பண்ணினதும்.

II. 1876–1886. சீனாவிலுள்ள உள்நாட்டின் 11 மாகாணங்களிலும் வேலைதுவக்கி அங்கங்கே தேவ வசனம் விதைக்கப்பட்டது.

III. 1886–1896. நாளுக்கு நாள் வேலை தேர்ச்சியடைந்து அநேக ஆத்துமாக்கள் குணப்பட்டுச் சபையில் சேர்ந்ததும், நல்ல பலன் விளைந்ததும்.

IV. 1896–1906. சீனாவில் பாக்ஸர் என்ற கட்சிக்காரரால் கிறிஸ்தவர்களுக்கும், தேவஊழியரனைவருக்கும் அதிக கொடுந் துன்பம் நேரிட்டது. சீனா கிறிஸ்தவர்களுக்கு இரத்த ஸ்நானமாயிற்று. தேவ ஊழியரும் அவர்களது பிள்ளைகளுமாக 80 பேர் கொல்லப்பட்டார்கள். இதுபோக அங்கு நடந்த கொலைகளுக்குக் கணக்கில்லை.

V. 1906–1916. இரத்தச்சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து என்பது சரியாயிருந்தது. இத்துன்பத்தில் கிறிஸ்தவர்களுடைய உறுதியைக் கண்ட அநேகர் இதுவே மெய் மார்க்கமென்றறிந்து கிறிஸ்தவமார்க்கத்தில் சேர்ந்தார்கள். இது சீனாவின் நல்ல அறுப்புக்காலம் என்னலாம். ஆனால் இதற்காக உழைத்த ஹட்ஸன் டெயிலர் 1905–ம் வூ கர்த்தருக்குள் மரணமடைந்தார்.

1915-ம் வூ இம்மிஷனில் 1,063 மிஷனெரிகளும் 2,765 சுதேச ஊழியரும் 50,770 சீனக்கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். கடைசி வருஷம் இம்மிஷனுக்காக ஜெபத்தால் கிடைத்த பணம் ரூ. 14,81,868.

---

## ஷி என்ற சுதேசக் குரு.

ஷி என்னப்பட்டவர் சீனாதேசத்திலுள்ள கூங் பட்டணத்தில் பிறந்தவர். இவர் அதிகப் படிப்பாளியாயும், பணக்காரனுயுமிருந்தார். அதிகப் படிப்பாளியாயிருந்தமையாலும் தொழில்

களைக் கேவலமாய் எண்ணினபடியாலும் வீட்டிலேயே சும்மா இருந்துகொண்டும் அபின் குடித்துக்கொண்டும் இருந்தார்.

இப்படி இருக்கும்போது இவ்வூரிலும் சுவிசேஷம் தொனித்தமையால் இவர் குணப்பட்டு எப்போதும் வேதம் வாசித்து முற்றிலும் முன்னிருந்த நிலைமைக்கு மாருக நடந்துவந்தார். அதாவது இவர் விக்கிரக வணக்கத்தையும் முன்னேர்கள் வணக்கத்தையும் விட்டுவிட்டார். இதைக் கண்ணுற்ற அவ்வூரார்: ஐயோ, இந்த மனுஷனுக்கு என்ன வருமோ, ஆவிகள் கோபங்கொண்டு பெரிய கெடுதிதான் செய்யப்போகிறது. இவன் அந்நியப் பிசாசுக்களின் மருந்தைச் சாப்பிட்டதினுல் கேடடையப்போகிருன் என்ருர்கள். இவரைக் கவனித்து வந்தபோது கெடுதி வருவதற்குப் பதிலாக இவர் ஓயாச் சந்தோஷம் உள்ளவராயிருப்பதோடு அபின் குடிப்பதையும் நிறுத்திவிட்டுத் தமது வேலைகளை அதிகச் சுறுசுறுப்பாய்ச் செய்துவந்தார் எனக் கண்டுகொண்டார்கள். அப்போது ஊரார்: பார்த்தீர்களா இவன் சாப்பிட்ட அந்நிய பிசாசுக்களின் மருந்து இவனைச் சிரஞ்சீவியாய் இருக்கப்பண்ணும் போலிருக்கிறது. இவனுக்கு வயது மாருமலும் சாவு வாராமலும் இருக்கும்போல் தோன்றுகிறது. இவன் சந்தோஷமாகவே இருக்கிருனே என்று ஆச்சரியப்பட்டார்கள்.

இவருடைய வீட்டாரும் இவரது மாறுதலைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஏனெனில் முன்னுலே இவர் அதிகக் கோபி. இவர் மனைவி மக்களெல்லாரும் இவரைக் கண்டு புலியைக் கண்டு நடுங்குவதுபோல் நடுங்குவார்கள். இப்போதோ கோபமெல்லாம் மாறி, அதிகச் சாந்தகுணமுள்ளவராகிவிட்டார். அன்பும் சாந்தமும் இவரில் குடிகொண்டுவிட்டது. வேதத்தைத் தாம் வாசிப்பதுமன்றி வீட்டிலுள்ள யாவரையும் ஒன்றுசேர்த்து அவர்களுக்கும் அதை வாசித்துக் காட்டி அவர்களையும் படிப்பித்து வந்தார்.

இவர் குணப்படும் முன்னே இவர் வீட்டில் இருந்து வந்த தமது சிறிய தாயாரை அதிகமாகத் திட்டித் தமது கோபத்தில் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டிருந்தார். அந்த அம்மாள் தன்னைப் போஷிப்பாரில்லாமையால் பிச்சை எடுத்துச் சாப்பிட்டுவந்தாள். குணப்பட்டபிற்பாடோ அந்த அம்மாளைத் தாமே தேடிப்போய்: அம்மா, நான் கோபத்தில் உங்களைத் துரத்திவிட்டேன், இனிமேல் அப்படிப்பட்டதொன்றும் செய்யமாட்டேன். என்னை நம்புங்கள், நான் முழுவதும் குணம் மாறிவிட்டேன். உங்களுக்கு ஒரு சவப்பெட்டி செய்துவைத்து நல்லடக்கம் செய்கிறேன். வாருங்கள் அம்மா, வாருங்கள் என்று கூப்பிட்டார். (சீனருக்குச் சவப்பெட்டி

செய்துவைப்பதுதான் பெரிய மேன்மை.) அந்தம்மாள் முதலில் பயந்தும் பிறகு வீட்டுக்கு இவரோடு வந்தாள். இப்போது முன் போல் வீட்டில் சண்டை எல்லாம் ஒழிந்து எல்லாம் சமாதானமாக வும் சந்தோஷமாகவும் இருப்பதைக் கண்டாள். முன்னும் பார்த் தவர்களும் இப்போது பார்ப்பவர்களுமாகிய ஊரார் இக்குடும்ப மாறுதலைக் கண்டு அதிசயமடைந்து: இந்த அந்நிய பிசாசுக்களின் மருந்து சாப்பிட்டால் சண்டைகூட வராதுபோலிருக்கிறது. நல்ல மருந்துபோலத்தான் இருக்கிறது என்று சொல்லிக்கொண் டார்கள்.

ஷி என்பவர் தம் வீட்டில் குடும்ப ஜெபமும் நடத்திவந்தார். இதற்கு ஊரிலுள்ள அநேக ஜனங்களும் வந்து கூடுவார்கள். அப் போது இவர் அவர்களுக்கு இரட்சகரைப்பற்றிப் போதிப்பார். நல்ல காரியங்களெல்லாம் நடைபெறும்போது ஒரு பெரிய துன்பம் இக் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டது. அதென்னவெனில், இவரது மனைவிக்குப் பேய் பிடித்துக்கொண்டது. அநேக கேவலமான பேச்சுகளைப் பேசி பேய்க்கோரணிகளைக் காட்டினாள். அறையில் அடைத்துவைத்தாலும் வெளியேறி ஜெபக்கூட்ட வேளையிலும் நடுவில் வந்து தொந்தரவுபண்ணுவாள். இது அதிக நாள் நடந்து வந்தது. அவ்வூர் ஜனங்களோ: பார்த்தீர்களா! கெடுதி ஏதாவது அவருக்கு வந்துதான் தீருமென்று பேசிக்கொண்டோமே. ஆவி களுக்குக் கோபம் வந்துவிட்டால்தான் இப்படி நடக்கிறது என்று பரிகாசம்பண்ணத் தொடங்கினார்கள்.

ஷி என்பவரோ அதைரியப்பட்டுப்போகாமல் ஜெபம்செய்தே வந்தார். அன்றியும் மூன்றுநாள் வீட்டாரெல்லாரையும் உபவாசமா யிருக்கச்செய்து தாமும் உபவாசித்து தனி அறையில் ஊக்கமாய் ஜெபம்செய்து வந்தார். பிறகு அந்தம்மாளிடம் போய்த் தலையில் கை வைத்து, இயேசுவின் வாக்குத்தத்தத்தைப் பிடித்து இயேசுவின் நாமத்தினாலே அந்த ஆவியைத் துரத்தினார். உடனே அந்த ஆவி அவளைவிட்டு ஓடிவிட்டது. அதற்குப்பின் நல்ல சுகமாயிருந்தாள். இதைக் கண்ட ஊரார் அதிக அதிசயப்பட்டு இந்த இயேசுகிறிஸ்து என்பவர் யார் என்று கேட்டு அதிகமதிகமாய் சேர ஆரம்பித் தார்கள்.

ஒரு குருவாவது வேறு ஒரு தேவ ஊழியனாவது வேத புஸ்தகத்தை விவரித்துக்காட்டக் கிடையாதேபோயும், அதை அதிகமதிகமாக வாசிப்பதினால் வெகு காரியங்களில் தெளி வடைந்து வந்தார். அந்த ஊரிலநேகர் இவருடைய வேதவாசிப் பில் பங்கடைந்துவந்தார்கள். அவர்களுக்கு ஏசுபெருமானைக்

குறித்து விவரமாய்ச் சொல்லுவார். பிறகு பக்கத்துக் கிராமங்களுக்குப்போய் அங்கேயும் இயேசுவைப் பிரசங்கித்தார். அங்கேயும் பலர் அவர் சொல்லுவதை விசுவாசித்தார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவர் தமது வீட்டில் வைக்கும் ஜெபக்கூட்டத்திற்கு வெகுவாய் வருவார்கள். சிலர் தூரத்திலிருந்து வருவது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்ததென்று கண்டு, தமது வீட்டில் ஆராதனை வைத்தபின் கிராமங்களுக்குப் போய் அங்கேயும் சிறு கூட்டங்களை வைத்துவந்தார்.

இவர் குணப்பட்டு பல வருஷக்காலமாயிற்று. இவரது வீட்டின் ஒரு அறையில் மந்திரிகக்காரரால் எழுதப்பட்ட ஓர் படம் தொங்கிற்று. இது இவர் முந்தின மனைவியின் பெயர் எழுதிய ஒரு படம். இது ஒரு தேவதையாகவும் ஆவியாகவும் முந்தி பூசிக்கப்பட்டு வந்தது. சீனர்கள் இவ்விதமாக இறந்துபோனவர்களுக்கு மூன்று ஆவிகள் உண்டென்றும், ஒன்று மேலோகத்திலும் இன்னொன்று கல்லறையிலும் மற்றொன்று வீட்டிலுள்ள இம்மாதிரிப் படத்திலும் இருப்பதாக எண்ணி, அதைப் பூசிப்பது வழக்கம். இவர் கிறிஸ்தவரானபின் அதைப் பார்க்கவுமில்லை, நினைக்கவுமில்லை, வணங்கவுமில்லை. அதை எடுத்துவிட வேண்டுமென்று ஒருவரும் இவருக்கு விளக்குவதற்கும் இல்லை. ஒருநாள் காலையில் அவ்வறைக்குப் போனார். அப்படம் சுவரிலுள்ள காரையோடு பேர்த்துக் கொண்டு கீழே விழுந்துகிடந்தது. அப்படத்தை இவர் எடுத்து மறுபடியும் இன்னொரு இடத்தில் தொங்கவைத்தார். ஒரு வாரம் பொறுத்து இன்னொரு நாள் அப்படம் மறுபடியும் கீழே விழுந்து கிடந்தது. உடனே அவருக்கு ஒருவிதமான பயம் பிடித்தது. தமது வழக்கம்போல் தனி அறையில் போய் ஊக்கமாய் ஜெபம் பண்ணி வேதத்தை வாசித்தார். உடனே அவருக்குத் தெளிவுண்டாகி: ஆ! இது என்னுடைய முந்தின அஞ்ஞான வழக்கமல்லவா? தேவன் தமது உண்மையை எனக்கு வெளிப்படுத்துவதற்காக இப்படிப் படத்தை விழச்செய்திருக்கிறார் என்று அந்நேரமே போய் அப்படத்தைச் சுட்டெரித்துப்போட்டார்.

இது நடந்த ஒரு வருஷத்திற்குப்பின் ஒரு காரியம் நடந்தது. என்னவெனில் அவ்வூரார் அத்தேச வழக்கத்தின்படியே தாங்களாய் ஒரு பெரிய மனுஷனை ஊர் அதிகாரியாய்த் தெரிந்துகொண்டு அவரது கட்டளையின்படியும் யோசனையின்படியும் நடந்து வந்திருந்தார்கள். இப்போதும் ஒருவரைத் தெரிந்துகொள்ள வேண்டிய காலம் வந்தபோது அநேகர் ஷி என்பவரைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். அவர் அதிகப்படிப்பாளியாகவும் விவே

கமுள்ளவராயும் இருப்பதோடு அந்நிய ஊரார் மருந்து சாப்பிட்ட தற்குப் பிறகு அவர் தொட்டதெல்லாம் துலங்குகிறது, நினைத்த தெல்லாம் கைகூடிவருகிறது என்றார்கள். சிலரோ, ஆ! அந்நிய பிசாசுக்களின் மார்க்கத்தார் வைக்கிறது? வேண்டாம் என்றார் கள். அநேகரோ: அவரைவிட யார் நம்மைப் புத்தியோடு நடத் தக்கூடிய மனுஷனாய் இந்த ஊரிலிருக்கிறார்? எப்படி இருந் தால் நமக்கென்ன, நம்மை நடத்தக்கூடியவர் அவர்தான் என்றார் கள். பிறகு எல்லாரும் ஒருமித்து ஷி என்பவரிடம் வந்து தங் களது கோரிக்கையை வெளியிட்டார்கள். ஷி என்பவர் தாம் எல்லாராலும் கேவலமாக எண்ணப்பட்டதாய் நினைத்திருந்தார். இப்போது இவர்களது வார்த்தையைக் கேட்டு ஆச்சரியப்பட்டது மல்லாமல் அவர்கள் இரண்டு காரியம் செய்தால்தான் ஊரதிகாரியா யிருக்கக்கூடும், அல்லாவிட்டால் முடியாது என்று சொல்லிப் போட்டார். அவர்களோ அவை என்ன என்று கேட்க, இவர் சொல்லுகிறார்: நான் உங்கள் விக்கிரகங்களை வணங்கமாட்டேன். அவைகளுடைய திருவிழாக்களுக்கு உங்களோடு வரவும்மாட்டேன், இது ஒன்று. மற்றொன்று நீங்கள் உங்கள் விக்கிரகக் கோவிலை இரண்டு வருஷத்திற்குப் பூட்டிப்போடவேண்டும் என்பதாம்.

இதற்கு ஊரார்: முந்தினதை ஒப்புக்கொள்ளுவோம், பிந்தின தற்கு என்ன செய்கிறது என்று யோசித்து சொல்லுவோம் என்று, கடைசியாக இரண்டு வருஷம்தானே, பிறகு நாம் திறந்துகொள்ள லாம்; இல்லாவிட்டால் அவர் மாட்டேன் என்பாரே என்று சொல்லி இரண்டு காரியத்திற்குமே சம்மதித்துக்கொண்டார்கள். இவரும் தமது உத்தியோகத்தை ஒழுங்காய் நடத்திவந்தார். ஆனால் மார்க்க விஷயமாக ஒருவரையும் இவர் கட்டாயம் பண்ணவில்லை. இரண்டு வருஷம் முடிந்தவுடன் ஜனங்களெல்லோரும் சந்தோஷத் தோடும் எக்களிப்போடும் விக்கிரகக் கோவிலைத் திறக்கப்போனார் கள். துருப்பிடித்திருந்ததினால் திறக்கக்கூடவில்லை. ஷி என் பவரோ அவர்களைப் பார்த்து: உங்கள் சாமியை இரண்டு வருஷ மாய்ப் பட்டினிபோட்டுவிட்டீர்களே அது செத்துப்போய்விட்டது என்று சொல்லிக் கேலிபண்ணிப் போய்விட்டார். அவர்களும்: ஐயோ! நாம் செத்த சாமியையா கும்பிடுகிறது என்று சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

நாள் ஆக ஆக, அநேகர் இவ்வுத்தமர் சாட்சியினாலும் போதகத் தினாலும் குணப்பட்டு ஆண்டவருக்குப் பிள்ளைகளானார்கள். அவர் களில் மிச்சமான பேர்கள் அதிகத் தரித்திரரும் துன்பப்படுகிறவர் களுமாயிருந்தார்கள். அவர்களுக்கு ஏதாவது வேலைகொடுத்து

அவர்களைப் போஷிப்பதும் காப்பதும் இவருக்குப் பெரிய கவலையாயிருந்தது. தம்முடைய பணத்தை எல்லாம் செலவிட்டும் முடியவில்லை. ஆராதனைக்காக அநேகக் கிராமங்களிலுமிருந்து ஜனங்கள் இவர் வீட்டுக்குக் கூடிவருவார்கள். அவர்கள் தூரத்திலிருந்து வருபவர்களாதலால், அவர்களுக்கு ஞானப்போஜனத்தோடு சரீர போஜனமும் கொடுத்துவந்தார். வீட்டை வாடகைக்கு அமர்த்தி அதற்கு வேண்டிய ஆசனங்களை வாங்கி வந்தார். விளக்குகளுக்கு எண்ணெயும் கூடிவருபவர்களுக்குத் தேத்தண்ணீரும் கொடுத்தார். செலவு அதிகமாயிற்று. சீனர் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போகும்போதெல்லாம் தேயிலைத்தண்ணீர் கொடுப்பார்கள்.

கிராமத்தில் வேலைசெய்ததுமாத்திரம் போதாது. பக்கத்திலுள்ள ஹோஷல் என்ற பட்டணத்தில் சுவிசேஷவேலை ஆரம்பிக்கவேண்டும். ஆனால் அதற்குப் பணத்திற்கு என்னசெய்கிறது என்று புருஷனும் பெண்சாதியுமாய் யோசித்துக் கடைசியாய்: நாம் ஆண்டவரைத்தான் கேட்கவேண்டும் என்று ஊக்கமாய் ஜெபம்செய்து வந்தார்கள். ஒருநாள் ஷி என்பவர் ஜெபம்செய்து முடித்து எழுந்தபோது, மேசையின்பேரில் ஒரு சிறு மூட்டை இருந்தது. அதைத் திறந்து பார்க்கும்போது அதில் ஒரு மோதிரமும், இரண்டு காதணியும், வெள்ளிக் கொண்டை ஊசிகளும் இருந்தன. இது தன் மனைவியுடையது என்று கண்டுகொண்டு அந்தம்மாளைப் பார்த்து: இவை கலியாணம் செய்துகொண்டவர்கள் அவசியம் தரித்துக்கொள்ளவேண்டிய நகையாயிற்றே. நீ இந்த நகைகளில்லாமல் எப்படி இருக்கமுடியும் என்க, அந்தம்மாள்: நான் இந்த நகைகளில்லாமல் இருக்கமுடியும். ஆனால் ஹோஷல் பட்டணம் சுவிசேஷமில்லாமல் இருக்கமுடியாது என்றாள். இதை இவர் கேட்டுத் தான் கலியாணத்திற்கென்று அந்தம்மாளுக்குப் போட்ட நகையைத் தானும் கழற்றிச் சுவிசேஷவேலைக்காகக் கொடுத்ததைக் கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் பட்டவராய் அந்நகைகளை விற்கப் புறப்பட்டார். அப்போது இன்னும் தன்னுடைய பட்டாடைகளில் சிலதைச் சேர்த்து விற்க அம்மாள் கொடுத்தாள். இவர் அவைகளை எல்லாம் மூட்டையாய்க் கட்டி ஒரு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு சந்தோஷமாய்ப் பாட்டுப் பாடிக்கொண்டு பட்டணத்திற்குப் போனார். போகும்வழியில் மழை பெய்தது. அப்போது அவர் துக்கத்துடன் பாட்டை நிறுத்தி, ஐயோ! எல்லாம் நனைந்துபோனால் நல்ல விலைக்கு எப்படி விற்கமுடியும் என்று அங்கலாய்க்கும்போது, இது பிசாசின் தடையாயிருக்கலாமென்று மறுபடியும் சந்தோஷத்

துடன் மழையிலேயே பாட்டு பாடிக்கொண்டு நகருக்குள் போய் தனது சாமான்களைக் கூடியவரையில் நல்ல விலைக்கு விற்றுப் பணத்தை வீட்டுக்குக் கொண்டுவந்து மனைவியிடம் காட்டிச் சந்தோஷப்பட்டார்.

இந்த விதத்தில் அந்த ஊருக்குச் சுவிசேஷம் போய் எட்டுவது ஆண்டவருக்குச் சித்தமாயிருந்தது. அங்கே அநேகரும் குணப்பட்டார்கள். அபின் குடிக்கும் வழக்கத்தை அநேகர் விட்டு விட்டபோதிலும், விடமுடியாத அநேகர் அவரிடம் வந்து எங்களால் விடமுடியவில்லையே, என்னசெய்வோம் என்று புலம்பினார்கள்.

இவர் அதற்காக அதிக விசனப்பட்டு ஆண்டவரிடம் ஜெபம் செய்துவந்தார். வடபாகத்தில் வேலைசெய்துவந்த ஒரு மிஷனெரி அவ்வூர் வந்தபோது, அவர் அபின் குடிப்பவர்களுக்கு மாற்றாக கொடுக்கிற 300 மாத்திரைகளைத் தந்து, இன்னும் வேண்டுமானால் தமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளச் சொல்லிப் போய்விட்டார். ஷி என்பவர் அம்மருந்தை அவரிடம் வாங்கி அபின் குடிக்கிறவர்களுக்குக் கொடுத்துப் போதனையும் அத்தோடு செய்துவந்தார். நாளடைவில் அநேக இடங்களிலிருந்து ஜனங்கள் வந்ததினால் மருந்தும் ஆகிவிட்டது. மருந்து வாங்கப் பணமும் இல்லை. அப்போது இவர் வழக்கத்தின்படியே உபவாசம் செய்து தேவனை நோக்கி: ஆண்டவரே! இம்மருந்து வரவழைக்கப் பணம் அதிகம், தூரமும் அதிகம். அம்மருந்து என்ன சரக்குகளால், என்ன முறையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்கு உபதேசியும், அப்போது நானே செய்து அநேகருக்குப் பிரயோசனப்படுத்துவேனே என்று ஜெபித்தார். ஒருநாள் இவருக்கு இம்மருந்தின் முறை ஆண்டவரால் வெளிப்படுத்தப்பட்டது. அதுமுதல் வேண்டிய மருந்தையெல்லாம் தாமே செய்துகொள்வார். மருந்துக்கு வருபவர்கள் கிரயம்கொடுத்து அதை வாங்கிச் சாப்பிடுவார்கள். சுகம் வேண்டியவர்கள் அதற்காக ஏற்படுத்தப்பட்ட அடைக்கல ஆஸ்பத்திரியிலேயே மருந்து சாப்பிட்டு அங்கே பிரசங்கிக்கப்பட்ட தேவ வசனத்தையும் கேட்கவேண்டும். இதுதான் இவர் ஏற்படுத்திய நிபந்தனை. இவ்விதமாகச் சுவிசேஷத்தைப் போதித்து வந்தார்.

இம்மருந்து கிரயத்தைக்கொண்டே அவ்வைத்தியசாலையை நடத்திவந்தார். இவ்வேலை பெருகவே அநேக இடங்களில் அடைக்கல வைத்தியக் கூடங்களை ஏற்படுத்தி ஒவ்வொன்றிற்கும் உண்மையுள்ள இரண்டுபேரை ஏற்படுத்தினார். இவ்வூழியத்திற்குத் திருச்

சபையிலே குணசாலிகளும், சுவிசேஷப்பிரியரும், சமாதான நாட்டமுள்ளவர்களுமாய் இருந்தவர்களைப் பொறுக்கி எடுத்தார். இப்படி இவர் எடுத்தும், அதிகத் தொல்லைகள் நேரிட்டது. இவருடைய கடைசி நாட்களில் ஏற்பட்டிருந்த அபின் மாற்றுக் கூடங்கள் 45.

ஒருசமயம் இவர் ஒரு கல்விச்சங்கத்தாரின் விளம்பரப்படி நேர்த்தியான கிறிஸ்தவ கவி கட்டினதற்காக முதல் பரிசுபெற்றார். இதனால் வந்த பணத்தைத் தமது நெருக்கடியான வேளையில் தமது வேலைக்கென்று செலவிட்டுக்கொண்டார். இதுமுதல் இவர் கிறிஸ்தவக் கவிகளைப் பாடித் திருச்சபைக்கு ஊன்றக் கட்டுதல் உண்டாக்கிவந்தார். ஒரு குருவின் தூண்டுதலுக்கிணங்கிக் குரு பட்டமும் பெற்றுக்கொண்டார்.

இவர் தமது ஊழியக்காலத்தில் அதிகத் துன்பங்களைச் சகிக்க வேண்டியவரானார். ஒரு கிழவி 30 வயது வாலிபனை தன் மகனைக் குருவிடம் அழைத்துவந்து, ஐயா! நீர்தான் இவனை நல்வழிப்படுத்தவேண்டும் என்றாள். அவ்வாலிபன் முன்னே மகா தூர்த்தனும், சூதாட்டத்தால் அதிக கேடடைந்தவனுமாயிருந்தான். குரு, என்னால் எப்படி முடியும் என்றார். பிறகு வாலிபனும் தன்னைச் சீர்ப்படுத்தும்படிக்குக் குருவைக் கேட்டுக்கொண்டதின்பேரில், இவர் சம்மதித்துத் தமது வீட்டிலேயே மூன்று வருஷக்காலம் வைத்து நல்ல வழியில் பயிற்றிவந்ததின்பேரில் அவன் குணப்பட்டுப் பழைய துர்வழக்கங்களை எல்லாம் விட்டிருந்தான். இதினால் அவனிடம் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து அவனை நம்பி ஒரு ஊரில் சுவிசேஷ வேலை செய்யும்படி அனுப்பினார். ஆனால் அவன் அங்கே போனதும் கையிலிருந்த பணத்தையெல்லாம் பழையபடி சூதாட்டத்தில் போக்கடித்துவிட்டு அதிகப் போக்கிரியாய்ப் போய்விட்டான். அதுவுமன்றி அவன் ஷி இருந்த ஊருக்கு வந்து அநேகப் போக்கிரிகளையும் சேர்த்துக்கொண்டான். ஒருநாள் இவர் வீட்டிற்கு முன்னால் கூட்டத்துடனே வந்து இவரைக் கண்டபடி தூஷணமாய்ப் பேசி: நீர் என்னுடைய ஊழியத்தை மூன்று வருஷமாக வாங்கிக்கொண்டீர், ஒன்றும் கொடுக்கவில்லை. இப்போது கொடுக்காவிட்டால் கச்சேரியில் உமதுபேரில் பிரியாதுபண்ணி அவமானப்படுத்தி வாங்கிப்போடுவேன் என்று நன்றிக்கேடனாய்ப் பேசினான். ஷி என்பவரோ அதிக விசனத்துடன் அறைக்குள்போய் ஜெபம்பண்ணித் திரும்பி வந்து கூட்டத்தோடு பட்சமாய்ப் பேசி: இக்காலம் புதுவருஷத்திற்குச் சமீபமல்லவா? நாம் சமாதானமாய் இருப்போம். புது வரு

ஷம் தொடங்கியபின் நான் எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்ப்பேன் என்றார். சரி சரி என்று அவனும் மற்றவர்களும் போய்விட்டார்கள். அதற்குப்பின் இவ்வாலிபன் ஒரு ஊருக்குப் போயிருந்தான். அங்கே புதுவருஷம் தொடங்குமுன்னே அவன் திடீரென்று செத்துப்போய்விட்டான். எல்லாரும் ஆச்சரியமடைந்து இனிமேல் ஷி என்பவரை தீது ஒன்றும் சொல்லக்கூடாது, பழி வந்து சேரும் என்று பயப்பட்டார்கள். அதுமுதல் இவரைப்பற்றிய மதிப்பு அவ்வூரில் அதிகமாய் உண்டாயிற்று.

இப்படியாக இவர் அநேக வருஷக்காலம் ஆண்டவரது ஊழியத்தைச் செய்து, கடைசியாய் ஆறுமாசமாய் அதிகப் பெலவீனப்பட்டு நோய் ஒன்றும் இல்லாதிருந்தும் படுக்கையாகவே கிடந்தார். அந்த நாட்களிலும்கூடத் தமது கையின்கீழே அங்கங்கே வேலை செய்யும் தேவ ஊழியர்களை அழைத்து அவர்களுக்குப் புத்திசொல்லிவந்தார். 1896-ம் ஸு அவர் கர்த்தருக்குள் அமைதலாய் நித்திரையடைந்தார்.

---

## 4. ஜோஸேப் ஹார்டி நீஸிமா என்பவரின் ஜீவிய சரித்திரம். (1843—1890)

இவர் 1843-ம் ஆண்டு டொக்கியோ நகரத்தில் பெருமைதங்கிய சாமுராய் கோத்திரத்தில் உதயமாயினர். இவர் தந்தையார் தமது மாகாண இராஜ பிரபுவுக்கு கணக்கர் தலைவரும் உக்கிராணக்காரருமாய் வேலை பார்த்தவர். நீஸிமா தமது இளம்பிராயத்திலேயே பக்தியுள்ள பிள்ளையாண்டான். விக்கிரகங்களை வணங்கும் பொருட்டு அயலில் மூன்று மைல் தூரமான ஓர் ஆலயத்துக்கு ஒவ்வொருநாட் காலையிலும் நடந்து செல்வார். இவர் பத்து வயதுப் பையனாயிருக்கையில் பெர்ரி என்னும் அமெரிக்காக் கப்பல் சேனாபதி ஜப்பானுக்கு வந்தார். அவர் வரவால் நீஸிமாவின் இள நெஞ்சில் ஓர் ஆழியக் கிளர்ச்சி பிறந்தது. மேல் நாட்டாரின் நாகரீகத்தைப்பற்றிய செய்திகள் இவரில் தீர்க்க முடியா அறிவுத் தாகத்தை மூட்டிவிட்டதால், இவர் இரவு பகலாய்க் கோழிகூவும் பரியந்தம் கல்வி கற்றுவந்தார். சிரஞ்சீவிப் பருவமெனும் தமது பதினாறும் பிராயத்தில் தமது சிற்றரசுக்குப் பதில் கணக்கராய் வேலைபார்த்துவருகையில் சீன, டச்சு பாஷைகளைப் படிப்பதில் பொழுது போக்கினர். இவரது குறுநிலமன்னன் இவர் அந்நிய பாஷைகளைக் கற்காப்படி தடுத்ததுமன்றிப் பலமுறையும் இவரைச்

சவுக்கடி அடிப்பான். இவர் எண்ணம் தவிர்க்கப்பட்டும், நெஞ்சம் புண்ணுகியும், உடல் நசல் பிடித்தும், அந்நிய பாஷை கற்கும் நாட்டத்தில் சோர்வடைந்தாரில்லே. இக்காலத்தில் இவர் ஓர்நாள் ஓர் சிநேகிதனேப் பார்க்கப் போனபோது அவனது நூலாலயத்தில் அமெரிக்கக் குரு ஒருவர் சீனப் பாஷையில் எழுதியிருந்த சிற்றுருவத் திரு வேதாகமத்தைக் கண்டுபிடித்ததாகவும் அதை அவனிடம் இரவலாய் வாங்கி வாசித்ததாகவும் ஓர் கடிதத்தில் எழுதியிருக்கிறுர். பின்னும் வேதத்தைத் தாம் வாசித்தால் தமது அநாகரீகத் தேசச் சட்டப்படி தம்மையும் தமது குடும்பம் முழுமையையும் சிலுவையில் அறைந்துபோடுவார்கள் என அஞ்சிப் புத்தகத்தைப் போட்டுவிட்டுத் தம்மைச் சுற்றிலும் பார்த்து, தம்மைப் படைத்தவர் யார், தமது பெற்ருரா என விஞவி, அவர்கள் அல்ல தமது கடவுளே எனத் தேர்ந்து அவருக்கு நன்றி செலுத்தத் தாம் கடமைப்பட்டவரும் அவர் சமுகத்தில் நேர்மையாய் நடந்துகொள்ள வேண்டியவரும் எனக் கண்டுகொண்டதாகவும் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறுர். தமது சிருஷ்டிகரை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் தாம் பாத்தியப்பட்டவர் எனச் சுறுக்கில் தெரிந்துகொண்டதும் கடவுளேத் தேடப் புறப்பட்டார். ஞானத்தைத் தேடுபவராய் வெகு சமீபமாயுள்ள ஹாக்கோடேற்று என்னும் துறைமுகம் போக நிர்ணயித்துக்கொண்டு தமது பணம் செலவானபின் உண்பதும் உடுப்பதும் எவ்வாறெனு எண்ணுது, தம்மைத் தெய்வ பராமரிப்புக்கு ஒப்படைத்தவராய்க் கண்ணீர் ததும்பத் தமது குடும்பத்தைத் துறந்தேகினுர். அக்காலச் சட்டப்பிரகாரம் தேசத்துக்கு வெளிப்பட்டாலும் மரணமே, திரும்பி வந்தாலும் சாவுதான். எனினும் இவர் வெளிநாடு சென்று அறிவைச் சம்பாதிக்கவும், மீளவும் வந்து தமது ஜென்ம தேசத்தை மேன்மைப்படுத்தவும் இவர் மொழிந்தவாறு "அந்தகாரத்துக்குள் ஒளிகொண்டு வரவும்" ஆவல் கொண்டவராய் வெளியேறும் கப்பலில் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். 1864-ல் தமது இருபத்தோராம் பிராயத்தில், பால்யத் தேசாபிமானியானவர் வேலேக்காரக் கோலங்கொண்டு, முதுகிலே மூட்டையைத் தாக்கி, இருட்டிலே புறப்பாடாகி, அச்சமயம் யாத்திரையாயிருந்த ஒரு அமெரிக்கச் சிறு கப்பலில் நுழைந்துகொண்டார். நுழைந்துகொண்டு, தமது குலப்பெருமையை ஒழித்தவராய்த் தமது பயணச் செலவிற்கு ஈடுபண்ணக் கப்பல் தளத்தில் குற்றேவல் செய்யலாயினுர். ஹாங்காங்கு துறைமுகத்தில் தமது

உடைவாளை விற்றுச் சீனப்பாஷையில் எழுதிய புதியேற்பாடு ஒன்றை வாங்கிக்கொண்டார்.

ஐக்கிய மாகாணங்களிலுள்ள போஸ்றறன் நகருக்கு, ஒதுக்கிடம் அற்றவராய் வந்தபோது, இவர் ஏறிவந்த கப்பல் முதலாளியின் கண்களில் கர்த்தர் கிருபை கிடைக்கப்பண்ணவே, இத்தர்ம சீலன் இவரை ஆதரிக்கவும் இவருக்குக் கல்விப்பயிற்சி செய்விக்கவும் ஒப்புக்கொண்டார். நீஷிமா வெளியரங்கமாகத் தமது பாவங்களை அறிக்கையிட்டுக் கிறிஸ்தவ சபையில் சேர்ந்து கலைவல்லோராகிக் கடைசியாக 1870-ல் வேதசாஸ்திரம் படித்தார். அக்காலத்தில் ஜப்பானிய இராஜாங்கத் தூதுவர் அமெரிக்கருடைய ஸ்தாபனங்களை ஆராய்ந்தறிய அங்கு வந்திருந்தனர். அவர்களுக்கிவர் துவிபாஷியாயிருக்கத் துவக்கித் தாம் கண்டுகொண்ட ஆண்டவரைக்குறித்து அவர்களுக்கு உபதேசித்து வந்தார். அவர்கள் இவருடைய பக்தி, நேர்மை, கலைக்கியானம் என்றவற்றை முன்னிட்டு, இவரை மிக நேசித்து வந்தார்கள். ஓய்வுநாளில் ஒருக்காலும் அவர்களுடன் பயணம் செய்யார். இவர்களின் சிநேகமும் இவரது நேர்மையும் பிற்காலத்தில் இவர் தமது ஜென்மபூமியில் ஓர் கிறிஸ்தவக் கல்லூரியை ஸ்தாபிக்கவும் சுவிசேஷ வேலை நடத்தவும் உதவியாயிற்று. 1874-ல் வெளிநாட்டு மிஷன் சங்கங்களின் கூட்டம் ஒன்று அமெரிக்காவில் நடைபெற்றது. கடைசிநாள் கூட்டத்தில் இவர் பேசச் சமயம் கிடைத்தபோது, இவர் ஜப்பானில் தாம் செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ முயற்சிகளைக் குறித்துப் பிரசங்கித்து முடித்ததும், இவர் கோரியிருந்த வேலைக்காக 5,000 டாலர்கள் தர்மச் சேர்ப்பாய்க் கிடைத்தது. பேஜ் என்னும் இந்திய மாகாணதிபதி 3,000 ரூபாய் உதவினர். இவ்வாறாகப் பல உபகாரிகளால் கிடைத்த உதவி சுமார் ரூபாய் 15,000 ஆயிற்று.

நீஷிமா பத்து வருஷம் சென்று தமது தாய் தேசத்துக்கு திரும்பி வந்தார். வந்ததும் இவருக்களிக்கப்பட்ட மேலான இராஜ்ய பதவிகளை அங்கீகரியாது, தமது தாயகமான கிராமத்துக்குப் போய்த் தமது வீட்டில் காகிதத்தாலும் கட்டை, களிமண், வெண்கலங்களாலும் உருவேற்பட்டிருந்த விக்கிரகங்கள் யாவையும் அக்கினிக்கிரையாக்கித் தமது வாசலில் கூடியிருந்த திரளுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து, இப்படியாக ஜப்பானின் உள்நாட்டுத் திருச்சபை தோன்ற வழி திறக்கலானர். 1875-ல் ஏழு சாப்பாட்டுப் பிள்ளைகளையும் ஒரு வெளிப்பிள்ளையையும் வைத்துக்கொண்டு தமது டோஷீஷாக் கலாசாலையை ஸ்தாபித்தார்.

டோஷீஷா எனும் வார்த்தைக்கு, "ஒரு நோக்கக் கூட்டத்தார்" என்பது பொருளாம். பல வருஷங்களாய் இவர் தமது ஜாதியாராலும் புத்தமதக் குருக்களாலும் ஸ்தல அதிகாரிகளாலும் விளைந்த இடையூறுகளுக் கெதிரே நிற்க நேர்ந்தது. தம்மைப்பற்றி உண்டாவது நற்கீர்த்தியோ துர்க்கீர்த்தியோ, சந்தோஷ செய்தியோ துக்கச் செய்தியோ, எதற்கும், அவர் 'அதிகாரிகளும் குருக்களும் எங்களைப் பகைக்கிறார்கள், ஆனால் நாங்களோ சத்தியத்தின் கொடியை இங்கே நாட்டிவிட்டோம், ஒர்க்காலும் பின் வாங்கோம்' எனச் சொல்லுவார்.

ஒன்பது வருஷங்களாய் உண்டான விரோதங்களால் களைப் படைந்தவராய் இளைப்பாறுதலுக்காக ஐரோப்பாவுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் புறப்பட்டுப் போனார். சுவித்சர்லாந்திலுள்ள அர்ச். கோதார்டு கணவாயைக் கடக்கையில் அவருக்குத் தமரவாய்வு எனும் இரத்தாசய நோய்கண்டு வழியில் தொய்ந்து விழுந்துவிட்டார். இவர் மரணசாதனம் எழுதி, அதிலே: நான் ஜப்பான் தேசச் சுதேசி, என் பிறந்தகத்துக்குச் சுவிசேஷத் தூதுவன். இந்த எழுத்தை வாசிப்போர் எவரும் எனது அருமைத் தாய்நாடாகிய ஜப்பானுக்காக ஜெபிப்பாராக. ஜப்பானுக்காக நான் கொண்டிருக்கும் எண்ணம் தோல்வியுறலாம், எனினும் தேவன் அங்கே இன்னும் ஓர் அதிசய வேலை நடப்பிப்பார் என்பது என் உறுதி. எனதருமைப் பூமியினின்று ஆண்டவர் அநேகக் கிறிஸ்தவர்களையும் மேன்குலத் தேசாபிமானிகளையும் எழுப்புவாராக ஆமேன், எனச் சொல்லினர். அமெரிக்கா சேர்ந்தபின்னும் அவர் சுகம் மிகவும் பஞ்சையாயிருந்தது. அவருக்கு ஜப்பானில் நடந்தபடியே அநேக இரவு நித்திரையற்றிருந்தார். அப்போதவர்: நான் ஜப்பானைப்பற்றி நினைக்காதிருக்கக் கூடவில்லை. ஜப்பான் நிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன். அநேகக் கண்ணீர்கள் உதிர்க்காமல் எழுத முடியவில்லை. ஜப்பானாகிய என் அருமைத் தாயகத்தினிமித்தம் என் உள்ளமானது அக்கினிப் பர்வதம் போல் பற்றி எரிகிறது என மொழிந்தார்.

அவர் மாணக்கரிடம் அவருக்கிருந்த செல்வாக்கு வல்லமையானதாம். 'ஓர் காரியத்தை நோக்கி ஓர் மனங்கொள்' என்பது அவர் குறிச்சொல். இன்னோர் சமயம் அவர்: முழந்தாளினின்று முற்படுவோம் என்றார். பள்ளிக்கூடத்தில் அவருடைய கண்டிப்பைப் போலவே அவருக்கும் அவரது மாணக்கருக்கும் உள்ள பரஸ்பர அன்பும் கவனிக்கத்தக்கதாயிருந்தது. ஒரு மாணவனைத் தண்டிக்க அவருக்கு லேசில் மனம் வராது. ஓர்

சமயம் பெருங்குற்றங்கள் செய்யப்பட்டபோது, அதிலே உபாத்தி மார்களும் சம்பந்தமுடையவர்களாயிருந்தார்கள் என நீஸிமா பண்டிதருக்குப் பட்டது. அப்போதவர்: மாணவரைத் தண்டிப்பதை விட்டு டோஷீஷாவை ஆக்கினைக்குள்ளாக்கவேண்டியது என்றார். ஆதலால் ஓர் நாட் காலை, ஆலயத்தில் ஜெப வேளையில் அவர் ஒரு தடித்த பிரம்பைத் தமது வலக்கையில் பிடித்துத் தமது இடக்கையில் பல அடிகளைப் பலமாய்ப் போட்டார். இதைக் கண்ட மாணாக்கன் ஒவ்வொருவனும் கண்ணீர் விட்டான். மனத்தாழ்மை, கடமையில் பற்று, தமது ஜீவிய வேலைக்குத் தம்மை மனப்பூர்த்தியாய் ஒப்படைத்திருத்தல் என்பவை அவரது சிறந்த குண லக்ஷணங்களாம்.

1889-ம் ஆண்டு அவர் சுகம் விரைவில் தளர்ந்து வந்தது. அவர் மருத்துவர் அவருக்குக் கண்ட நோய் குடல்வாதம் எனக் கூறிவிட்டார். அவர் மரணப்படுக்கையில் இச்செய்தியைச் சர்வ கலாசாலைக்குத் தந்தியடிக்கவே மாணாக்கர் ஓலமிட்டழுது தேவனை நோக்கி, அவருக்குச் சித்தமானால் தங்கள் குருவுக்குப் பிராணப் பிச்சை கொடுக்கவேண்டிப் பிரார்த்தித்தனர். ஆனால் தமது பிரிவுகாலம் வந்துவிட்டதை அவர் கண்டுகொண்டார். தமது வீட்டாரையும் சிநேகிதரையும் அழைத்துத் தம்மைச் சூழ நிறுத்தித் தமது கலாசாலையையும் மிஷன் சங்கத்தையும்பற்றிய தமது கடைசி வார்த்தைகளை எழுதுவித்தார். தமது மரணந்த வேளையில் தமது பூமிப்படம் ஒன்றைக் கொணர்ந்து விரிக்கச்சொன்னார். அதில் ஐந்து மாகாணங்கள் வரைந்திருந்தன. அதில் போர் மைய மண்டலம் போன்ற ஸ்தானங்களும் ஜப்பானில் வேலைதுவக்கா ஸ்தலங்களும் வர்ணம் தீற்றியிருந்தன. இப்படத்தை விரித்தபோது அவருக்கு மிகுந்த தத்தளிப்புண்டாயிற்று. இதைத் தணிக்க அவர் நேயர் அவரை அடக்கி அமர்த்த நேரிட்டது. அவருக்கொரு மெத்தை போட்டார்கள். அவரோ அத்தனை சுகமாய் மரிக்கத் தாம் அபாத்திரர் எனச் சொல்லித் தடுத்துவிட்டார். தமக்கருமையான ஒவ்வொருவருக்கும் பிரிவுபசாரம் சொல்லிய பின்னர், தமக்கென்று ஞாபகச்சின்னம் எடுப்பிக்கலாகாதெனக் கட்டளையிட்டார். சம்பூரண நன்றி நிறைந்த மனத்துடன் இவ்வுலகை விட்டுவிடுகிறேன். எனது சுகக் குறைவால் அதில் சிறிது தான் செய்யக்கூடியவனானேன். தங்கள் தேச நன்மைக்கென்று ஜீவியம் செய்யும் மனிதரைப் பழக்கக் கிறிஸ்து மார்க்கத்தைப் பரிபாலனம் செய்வதே டோஷீஷாவின் பிற்கால நோக்கமாம். ஜப்பானியப் போதகரும் அந்நியநாட்டு உபதேசகரும் அன்பினால்

கட்டப்பட்டவர்களாய் மனவருத்தமின்றி ஒத்துழைக்கும்படி வெகு கவலைகொள்ளவேண்டும் என்றார். எபேசியர் நிருபம் 3-ம் அதிகாரம் வாசித்து முடிகையில் சமாதானம், சந்தோஷம், மோக்ஷம் எனும் வார்த்தைகளைத் தமது நுனி வாயால் உச்சரிக்கிறவராய் மறந்துபோனார்.

அவர் ஜீவித்துப்போனது 1890-ம் வருஷம் ஜனுவரிமீ 23-ம் உ. அவர் சரீரத்தைக் கியோட்டோவுக்குக் கொண்டு போனார்கள். அங்கு 700 பேர்போன்ற மாணவர் கூடி அவர் சவத்தைத் தூக்கும் சிலாக்கியத்தை வேறெவருக்கும் கொடாது தாங்களே அதைக் கலாசாலைக்கும் கல்லறைக்கும் சுமந்துபோயினார். இதர கலாநிலையங்களினின்று வந்த மாணுக்கர் திரளாயினார். ராஜ்யத்தின் சகல இடங்களிளின்றும் டோஷீஷாக் கலாசாலை வித்தியாப் பட்டதாரிகளான எழுபதின்மர் வந்து கூடினர். ஜப்பானின் எப்பக்கத்திலுமிருந்து கிறிஸ்தவர் திரள் சேர்ந்தது. அம்மாகாணத் துரையும் அதிபதிகள் உத்தியோகஸ்தரும் அடுத்த மாகாணத் துரையும் ஒசாக்காவிலிருந்து புத்தமதக் குரு பரம்பரை ஸ்தானுபதிகளும் தங்களைப் பிரிந்த ஜப்பானியத் தேசாபிமானியைத் தங்கள் வரவால் கௌரவப்படுத்தினர். பிரேத ஊர்கோலம் தெருக்களில் செல்லுகையில் $1\frac{1}{2}$ மைல் தூரம் நீண்டிருந்தது. ஊர்கோலம் உறைமழை பெய்கையில் முன்னேறி மலைச் சாரலில் வளைந்து, புத்தமதஸ்தர் கூறியவண்ணம், ஜப்பானில் கிறிஸ்துமதச் சிரோமணியும் ஆக விளங்கின புருஷனை, ஊருக்கெதிரே உள்ள ஓர் அழகிய ஸ்தலத்துக்குக் கொண்டுபோய்ச் சமாதி செய்தனர்.

---

## 5. அமெரிக்கா

அமெரிக்காக் கண்டத்தில் ஆதிமுதல் வசித்த ஜனங்கள் செவ்விந்தியர். இச்சாதிக்குள் சுவிசேஷத்தை அறிவித்த தேவதாசனவர் எலியட் என்பவர். அவர் ஜெபத்தில் வல்லவர். அவரது பிரசங்கத்தினுல் குணப்பட்ட செவ்விந்தியருக்கு ஜெபிக்கிற செவ்விந்தியர் என்பது பட்டப்பேர். எலியட் இவர்களிடம் 1646-ல் வேலைசெய்ய துவக்கி வேதபுஸ்தகத்தை மொழிபெயர்த்து 1663-ல் அச்சிட்டார். அதில் சில பிரதிகள் இன்னும் உண்டு. யுத்தக் காலங்களில் தம்முடைய ஜனத்திற்காகப் பரிந்துபேசி அநேகத் துன்பங்களைச் சகித்து 87-ம் வயதில் மரணமடைந்தார்.

அவர் தொடங்கின வேலையை மொரேவிய மிஷனைச் சேர்ந்த தேவ ஊழியர் வந்து தொடர்ந்து செய்தார்கள்.

---

## 6. பஸிபிக் சமுத்திரத் தீவுகள்

இவ்வகண்ட உலகத்தைப் பூபாகம் ஜலபாகம் எனப் பிரித்துப் பூபாகத்தை ஐந்து பெரிய கண்டங்களாகவும் ஜலபாகத்தை ஐந்து பெரிய சமுத்திரங்களாகவும் சாஸ்திரிகள் வகுத்து அவற்றிற்குப் பேரிட்டிருக்கின்றனர். விரிந்த தரைப்பங்குகளுக்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஔஸ்திரேலியா, அமெரிக்கா கண்டங்கள் என்று பேர். விசாலித்த நீர்நிலைகளைப் பசிபிக், அத்லான்டிக், இந்து, வட, தென் சமுத்திரங்கள் என அழைத்திருக்கிறார்கள். இச்சமுத்திரங்களிலெல்லாம் பெரியதும் விசாலமுமானது மேற்கே ஆசியாவையும் கிழக்கே வட தென் அமெரிக்காவையும் எல்லைகளாகக் கொண்ட பஸிபிக் மகா சமுத்திரமே. இச்சமுத்திரத்தின் மத்தியில் அநேக லக்ஷக்கணக்கான தீவுகள் சமுத்திரத்தின் அடியிலிருந்து எழும்பியிருக்கின்றன. அவற்றுள் பெரியது ஔஸ்திரேலியா. இது கண்டங்களில் ஒன்றாக எண்ணப்பட்டு இங்கிலிஷ்காரரின் ஆளுகையில் இருக்கின்றது. இத்தீவுக்குத் தூரத்திலுள்ள எண்ணிறந்த சிறு தீவுகளில் நரமாமிசபக்ஷணிகளும், நாகரீகமற்ற மிலேச்சரும் மிருகங்களைப்போல பிழைத்துவந்தார்கள். யாதாமொரு கப்பல் தப்பித் தவறி அத்தீவுகளின் கரையில் ஒதுங்கிவிட்டாலோ, அத்தீவார் அக்கப்பலில் உள்ள ஜனங்களை எல்லாம் உடனே அடித்துக் கொன்று தின்றுவிடுவார்கள். ஆகையால் கடலோடிகள் அங்கே போகத் துணியார்கள். இப்படிப்பட்ட நரமாமிசபக்ஷண மானிடப் பிராணிகளுக்குச் சுவிசேஷ ஞானத்தையும் கிறிஸ்தவ நாகரீகத்தையும் கொண்டுபோனவர்களில் பேரெடுப்பான நூறு திட்டுத் தகப்பன் எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்.

---

## ஜான் உவில்லியம்ஸ்

இவர் இங்கிலாந்து தேசத்தில் பிறந்து, பக்தியுள்ள தம் தாயாரால் வளர்க்கப்பட்டார். 14 வயதுவரைக்கும் கல்வி கற்றபிறகு, இரும்புப் பண்டகசாலையில் வேலைசெய்துவந்தார். இவர் பல கைத்



தொழில்களையும் கற்றதோடு யந்திர சாஸ்திரமும் படித்திருந்தார். இப்படியிருக்கும் ஒருநாள் இவர் கோவிலுக்குப் போனபோது லூக். 9 · 25-ம் வசனம் இவர் நெஞ்சை அம்புபோல் ஊடுருவிப்போயிற்று. அதாவது: மனுஷன் உலகம் முழுமையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமத்தை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன என்பதே. அன்று முதல் அவர் குணப்பட்டு ஆண்டவரது ஊழியத்திற்குத் தம்மை ஆயத்தப்படுத்திவந்தார். 20-ம் வயதில் தமது பண்டகசாலை வேலையை விட்டுவிட்டு சுவிசேஷப் பிரபல்ய ஊழியத்திற்கென்று பிரத்தியேகமாய்ப் படித்துக் குருப் பட்டம் பெற்று சுவிசேஷப் பிரபல்யச் சங்கத்தாரின் அனுமதியுடன் நரமாமிச பக்ஷணிகளான பஸிபிக் சமுத்திரத் தீவாரிடம் வேலைசெய்யச் சித்தப்பட்டிருந்தார். அநேகர் அவரை அதைரியப் படுத்தியும் அவரது தீர்மானத்தை மாற்ற முடியவில்லை. இவர்

1817-ல் கப்பலேற்றி அத்தீவுகளில் ஒன்ருகிய ரையத்தேயா என்னும் தீவில் கரையிறங்கினுர்.

இரத்தம் சிந்துதலிலும் மூடப்பக்தியிலும் பேர்போனவர்களாகிய இத்தீவார் இவரை அடித்துக் கொல்லாதது ஆச்சரியமே. இவர் ஒவ்வொருநாளும் தமது உயிரைக் கையில் ஏந்தினவராய்க் காலங்கழித்தார். இவர்களை நல்லொழுக்கத்துக்குக் கொண்டுவர இவர் பட்ட பிரயாசம் கொஞ்சமல்ல. அத்தீவார் ஒரே வீட்டில் 30, 40 பேர்கூட ஒன்ருய்ப் படுத்துக்கொள்வார்கள். தனிக் குடும்ப வாழ்க்கைக்கான ஒழுங்குகளைப் போதித்துப் பல வீடுகளைக் கட்டச்செய்தார். அவர்களுக்குப் பல கைத்தொழில்களையும் கற்பித்தார். அத்தீவாரின் தலைவன் ஒழுங்கினமாக ஆண்டு வந்ததால் பல நியாயச்சட்டங்களையும் ஏற்படுத்தித் தந்தார். அவர்களுக்குக் கணக்குப்படிக்க வரம் இருந்ததைக் கண்டு அப்பாடத்தையும் வாசிப்பையும் கற்றுக்கொடுக்கச் சில பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினுர். அத்தீவில் சுமார் 4,000 பேருண்டு. 1821-ல் தீவார் எல்லாரும் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டு நல்ல கிறிஸ்தவர்களாக நடந்துவந்தார்கள். அன்றியும் தாங்கள் அடைந்த இரட்சிப்பை அக்கம்பக்கத்துத் தீவாருக்கும் கொடுக்க ஆவல் கொண்டிருந்தார்கள். இத்தீவில் இவரது நோக்கம் நிறைவேறிவிட்டபடியால் மற்றத் தீவாரையும் சுவிசேஷ வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்ற பக்திவைராக்கிய அக்கினி இவர் மனதில் பற்றியெறிந்தது. மற்றத் தீவுகளில் ஒருவன் இரத்தத்தை ஒருவன் குடிக்கும்போது, நான் இங்கே உட்கார்ந்திருக்கவே மாட்டேன் என்று சொல்லிப் புறப்படப் பார்த்தார். ஆனுல் அந்தத் தீவுகள் ஒவ்வொன்றிற்கும் வித்தியாசமான பாஷைகள் இருந்தன. எனினும், பேச்சு வித்தியாசம் ஐயருக்கு ஒரு பெருந் தடையல்ல. ஒரு தீவிலிருந்து ஒரு தீவிற்குப் போகக் கப்பல் இல்லாததுதான் பெருந் தடங்கலாயிற்று. இப்படியிருக்கையில் ஓர்நாள் தூரமான ஒரு தீவிலிருந்து கப்பல் ஒன்று காற்றினுல் அலைசடிப்பட்டு, ரையத்தேயா தீவுக்கரையில் வந்து கரை தட்டி உடைந்துபோயிற்று. அதிலிருந்த 30 ஆட்கள் கரை இறங்கித் திரும்பிப்போக வேறு கப்பல் இல்லாததால் சுமார் 4 மாதம் இங்கேயே தங்க நேரிட்டது. இவர்களெல்லாரும் இத்தீவார் புதிதாக ஏற்றுக்கொண்ட கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்கள். இதுவுமன்றி மறுபடி கப்பலேறிப் போகும்போது, 2 சுவிசேஷகர்களையும் கூட்டிக் கொண்டு போனுர்கள். கொஞ்சக் காலத்துக்குப்பின் ஒரு மரக் கலம் அத்தீவிலிருந்த விக்கிரகங்களை எல்லாம் கொண்டுவந்தது.

என் இந்தச் சரக்கு? அத்தீவார் தாங்கள் ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவைக் கண்டுகொண்டபின், விக்கிரக வணக்கத்தை ஒழித்துவிட்டதை ரையத்தேயாக் கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்கும்படியாகத்தான். இதினால் ஐயருக்கும் தீவாருக்கும் உண்டான சந்தோஷத்திற் களவில்லை. இன்னுமநேகத் தீவுகளுக்குப் போய்ச் சுவிசேஷத்தை அறிவிக்க ஆசைப்பட்டுத் தமது வேலைக்கென்று ஒரு கப்பல் வேண்டுமென இங்கிலாந்துக்கு எழுதியிருந்தார். ஆனால் அது வரவேயில்லை. தமது சொந்தக் கையால் தாமே ஒரு கப்பல் கட்ட யோசித்து, அதைக் கட்டியும் முடித்தார். அத்தீவார் மர ஆயுதங்கள்தான் வைத்திருந்தார்கள். இவரோ, முந்தி ஒரு கப்பலில் வந்திருந்த இரும்பைக்கொண்டு ஆயுதங்களையும் கப்பல் தளவாடங்களையும் செய்துகொண்டார். துருத்திக்குத் தோல் அவவிடத்தில் கிடையாமையால் தமது அருமையான 4 ஆடுகளில் இரண்டை அறுத்துத் தோலைக் காயப்போட்டபோது அவற்றை இரவில் எலிகள் வந்து தின்றுவிட்டன. அதிக வருத்தத்துடன் வேறு உபாயத்தால் துருத்தி செய்து அதை உபயோகித்துக்கொண்டார். பிற்காலத்தில் வேறு தீவுக்குப் போனபோது, அங்கே பூனைகள் மிகுதியாயிருந்ததால் அவைகளை ரையத்தேயாவுக்குக் கொண்டுவந்து, எலிகளின் உபத்திரவத்தை நீக்கிக்கொண்டார். கப்பல் கட்டியானவுடன் றோராத்தோங்க தீவைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று பலரோடு புறப்பட்டார். அநேக நாளாய் அவர்கள் நாடிய கரை காணவில்லை. மாலுமி சாப்பாட்டுக் குறைவால் திரும்பவேண்டுமென யோசித்தான். இவரோ, எலியாவைப்போல் 6 தரம் ஊக்கமாய் ஜெபிக்கிறதும், மாலுமியைப் பாய்மர உச்சியில் போய்க் கரை தெரிகிறதா என்று பார்க்கச் சொல்லுகிறதுமாயிருந்தார். 6-ம் தடவைதான் அவன்: இதோ ஒரு கரை தெரிகிறது என்றான். எல்லோரும் சந்தோஷம் கொண்டு கரைக்குப் போனார்கள். சுவிசேஷகர்கள் தங்கள் குடும்பத்தோடு அங்கே வசிக்கும்படி கரையிறங்கினார்கள். தீவார் இவர்களை ஏற்றுக்கொண்டபோதிலும், பெண்கள் அங்கேயிருக்கமுடியாது என்பதைச் சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு எல்லாருமாகக் கப்பல் ஏறிப் புறப்பட இருந்தார்கள். ஆனால் பாப்பையா என்ற ஒரு விசுவாசி தைரியமாக: நீங்களெல்லாரும் போங்கள். பிறகு சில சுவிசேஷகரை அங்கிருந்து அனுப்புங்கள். நான் மாத்திரம் இங்கிருந்து வேலைசெய்கிறேன் என்று சொல்லித் தான் கட்டியிருந்த துணியோடும், ஒரு புதியேற்பாட்டு வேதாகமம், அநேக பாலபாடப் புத்தகங்களுடனும் அத்தீவிலேயே யிருந்துகொண்

டார். இவர் அங்கே சுவிசேஷவேலையும் பள்ளிக்கூடவேலையும் செய்துவந்தார். ஆனால் அச்சாதியாரின் முந்தின குணம் திரும்பி விட்டால், இவர் தப்பமுடியாத ஆபத்து இவர் தலைமேல் இருந்தது. உவில்லியம்ஸ் ரையத்தேயா போய் இன்னும் சில சுவிசேஷகரை அவ்விடத்திற்கு அனுப்பினார். ஒரு வருஷத்துக்குள் அத்தீவில் விக்கிரகாராதனை முழுவதும் அற்றேபோயிற்று. இதைக் கேள்விப் பட்ட உவில்லியம்ஸ் தமது மனைவிமக்களோடு அவ்விடம் போனார். அங்கு ஒரு தெய்வாலயம் கட்டப்பட்டது. அதின் பிரதிஷ்டை ஆராதனையை உவில்லியம்ஸ் ஐயர் நடத்தினார். ஆராதனை முடிந்த வுடன் சபையார் எல்லாரும் இவருக்குக் கைகொடுக்க ஆசைப் பட்டபடியால் 3,000 பேரான அத்தனை பேருடனும் கைகுலுக்கின படியால் அவர் கை அசந்துபோயிற்று. இக்காலத்தில் அத்தீவுக்கு ஒரு புதிய போதகர் வந்தார். இவர் பேர் ஹாரிஸ். இவர் போதகர் வேலைக்கென்று புறப்பட்டு வந்தவரல்ல. உவில்லியம்ஸ் ஐயரைப் பார்க்கலாமென்று தமது கப்பல் பிரயாணத்தில் வந்திறங்கினார். ஆனால் இந்த இடத்தில் நடந்திருந்த வேலையின் விருத்தியையும் ஜனங்களுக்குள்ளிருந்த சுவிசேஷ ஆசையையும் இவர் பார்த்துத் தாமும் தேவ ஊழியம் செய்யும்படி மனங்கொண்டு, திரும்பிப் போகாமல் இருந்துவிட்டார். இவர் இங்கிலாந்திலிருந்தபோது வியாதியாய் இருந்தமையால் வைத்தியர்கள் சமுத்திர யாத்திரை செய்து, கடல் காற்றைச் சுவாசித்துச் சுகப்பட யோசனை சொன்னபடி இந்த யாத்திரைசெய்து இவ்விடம் வந்து சேர்ந்தார். இவர் ஒரு வாலிபன்.

சில நாளைக்குப் பிற்பாடு இங்கிலாந்திலிருந்து கப்பலுக்குவேண் டிய இரும்புச்சாமான்களெல்லாம் உவில்லியம்ஸ் எழுதிக் கேட்டி ருந்தபடியே வந்து சேர்ந்தது. அவற்றைக்கொண்டு சமாதானத் தூதன் என்ற தமது கப்பலைப் புதுப்பித்துக்கொண்டார். இக் கப்பலைக்கொண்டு அவர் சிறிதும் பெரிதுமான அநேக அநேகத் தீவுகளுக்குப் போய்ச் சுவிசேஷத்தை அறிவித்து, வெகுமதிகளால் தீவாரோடு சிநேகம்பண்ணிப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவ் விடங்களை விட்டுப் புறப்படும்போது, அங்கே தொடங்கின வேலையை நடத்திவரும்படி இரண்டொரு சுவிசேஷகரை வைத்து விட்டுப் போவார்.

நரமாமிச பக்ஷணிகளின் கையிலும் தண்ணீரின் ஆபத்துக் களிலும் அவர் பிராணச்சேதமடையாமல் தப்பிக்கொண்டார். 1834-ல் இங்கிலாந்துக்குப் போய், கிறிஸ்துவின் சுவிசேஷம் இரட்சிப்புக்கான தனது வல்லமையை மிலேச்சரிடம் காண்பித்த

விதத்தை அங்குள்ள விசுவாசிகளுக்கு அறிவித்துச் சுவிசேஷ வேலைக்குப் பணம் சேர்த்து நாலு வருஷம் சென்று தமது மனைவியோடும் மூத்த மகனோடும் 16 புதுப் போதகர்மாரோடும் பஸிபிக் சமுத்திரத் தீவுகளுக்குத் திரும்பிவந்தார். வந்தவுடனே பலவிடங்களுக்கும் போய்த் தமது ஞானமக்களைச் சந்தித்துச் சாமுவா என்னும் தீவிலே சிலமாதமாய்த் தங்கினார். அங்கு 20,000 பேர் தற்சமயம் கிறிஸ்தவ போதகத்தில் உபதேசிக்கப்பட்டார்கள். இப்படியிருந்தும் உவில்லியம்ஸ் என்ற மகாத்துமா திருப்தியடையாமல்: அநேகத் தீவுகளில் மரண இருளிலும் வீண்பக்தியிலும் ஜனங்கள் இன்னும் அடைபட்டிருக்கையில் நான் இங்கே தங்க முடியாது என்று சொல்லித் தமது கடைசிச் சுவிசேஷப் பிரயாணத்துக்குப் புறப்பட்டார். புறப்பட்டு எரிமாங்கா தீவுக்குப் போக யோசித்தார். அவர் பெண்சாதியும் சபையாரும் அதிகமாய்ப் பயந்தார்கள். ஏனெனில் அத்தீவார் பயங்கரமான நரமாமிச பக்ஷணிகளும், குரூர நெஞ்சருமா யிருந்தார்கள். ஐயருடைய விடாப்பிடியால் அவர் துணைவியும் சம்மதித்தாள். பிறகு 12 சுவிசேஷகரையும் ஹாரிசையும் தம்மோடு கப்பலில் ஏற்றிக்கொண்டு, எரிமாங்காவை வந்தடைந்தார்கள். அவ்விடத்தார் கறுப்பு வர்ணத்தைத் தங்கள் முகத்திலும், சிவப்பு நிறத்தைத் தங்கள் உடம்பிலும் பூசிக்கொண்டு வெகு பயங்கரமான தோற்றமுடையவர்களாய்க் காணப்பட்டார்கள். உவில்லியம்ஸூம் ஹாரிஸூம் மாத்திரந்தான் படகேறிக் கரைக்கு வந்தார்கள். அந்த ஜனங்களோடு பேசப் பார்த்தபோது இவர்கள் பாஷை அவர்களுக்கு விளங்கவில்லை. ஆனால் தாங்கள் கொண்டுபோயிருந்த துணியையும் தூண்டில் முள்ளுக்களையும் கொடுத்தபோது அவர்களுக்கு வெகு சந்தோஷம் பிறந்தது. அவர்கள் இரண்டு தேங்காயை இவர்களுக்குக் கொடுத்தார்கள். இவர்கள் தைரியம் கொண்டதினால் ஹாரிஸ் அங்கு நின்ற சிறு பையன்களைக் கூட்டிக்கொண்டு உள்நாட்டைப் பார்க்கச் சற்றுதூரம் போனார். ஐயரோ கரையில் நின்றிருந்த ஆண்களோடு சைகைகளால் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் ஸ்திரீகள் ஒருவராகிலும் அவ்விடத்தில் காணப்படாமையால் கப்பலில் உள்ளவர்களுக்கு அரட்டியாயிருந்தது.

இப்படியிருக்க ஊரார் திடீரென்று ஒருவிதச் சத்தம் போட்டுக்கொண்டு ஆயுதங்களோடு ஓடிவந்தார்கள். ஒருவனைக் கொல்லக் கூடுவதற்கு இப்படிப்பட்ட சத்தம் போடுவார்கள். இக்கூட்டம் ஹாரிசை அடித்துக் கொன்றுபோட்டது. உவில்லியம்ஸ் கடலில் பாய்ந்து படவுக்குப் போய்விடும்படி வேகமாய் ஓடி

வந்தார். கூட்டமும் பின்தொடர்ந்தது. அப்போது தண்ணீர் ஓரமாக வருகையில், ஒரு கல்தடுக்கி உவில்லியம்ஸ் விழுந்து விடவே, அவர்கள் ஓடிவந்து அவர் தலையை உடைத்து, அவர் தேகத்தை ஈட்டியால் குத்திச் சாகடித்து பிரேதத்தை உடனே ஊருக்குள் இழுத்துப்போய்ச் சுட்டுத் தின்றுவிட்டார்கள். படகி லுள்ள மற்றவர்கள் இவருடைய பிரேதத்தையாவது எடுத்துப் போகலாமென்று பார்த்தார்கள். அதுவும் கிடைக்கவில்லை. அவர் கொல்லப்பட்ட இடத்தில் எல்லாம் இரத்தமயமாய் இருந்ததைத் தான் கண்டார்கள். இக்காட்சிகளெல்லாம் கூடவந்தவர்களுக்கு ஆற்றொண்ணுத் துயரத்தை உண்டுபண்ணிற்று. தங்கள் போத கரை யிழந்து, தனிமையாய்த் தங்கள் தீவுக்குப் போனபோது, தீவின் ஜனங்கள் எதிர்கொண்டு வந்து துக்கச்சமாசாரத்தைத் தான் கேள்விப்பட்டார்கள். கப்பலில் இருந்தவர்கள் கரையிறங் கினவுடனே: உவில்லியம்ஸ் ஐயர் எங்கே என்ற கேள்விதான் முதலில் கேட்கப்பட்டது. நடந்த சங்கதியைக் கேள்விப்படவும் அவர்கள் எல்லோரும்: ஐயோ, உவில்லியம்ஸ் தகப்பனே! தகப் பனே! அவர் தானே இரக்ஷிப்பைக் கொண்டுவந்தார். அவரை இன்னார் என்றறியாமல் கொன்றுபோட்டார்களே என்று புலம் பினார்கள். அம்மாளின் சஞ்சலத்தை யார் விவரிக்கக்கூடும்!

இந்தச் செய்தியை ஒளஸ்திரேலியாவிலுள்ள இங்கிலிஷ்காரர் கேள்விப்பட்டு ஒரு யுத்தக்கப்பலைக் கொண்டுபோய் எரிமாங்காவுக் கருகே நிறுத்திக்கொண்டு உவில்லியம்ஸுடைய உடலைக் கொடுக் கும்படி கேட்டபோது, அவர்கள் அவரைக் கொன்றவுடனே மாமி சத்தைச் சமைத்துத் தின்றுவிட்டபடியால், அவர் தலையோட்டை யும் சில எலும்புகளையும் மாத்திரம் கொடுத்தார்கள். அவற்றைக் கொண்டுபோய் அவர் தம் சொந்தக் கையால் கட்டின கோவிலுக் குச் சமீபமாய்ச் சேமித்தார்கள். இவர் மரிக்கும்போது இவருக்கு வயது 43. இவரை 100 தீவுகளின் தகப்பனென்ற சிறப்புப் பெயரால் அழைத்தார்கள்.

இவர் மரித்தபின் இவர் மகன் இவ்வேலையை எடுத்துக்கொண் டார். குணப்பட்ட தீவார் பரிசுத்த வைராக்கியங்கொண்டு: எங்கள் தகப்பனைக் கொன்றவர்களை நாங்கள் விடமாட்டோம். அவர்களை இரட்சகர்பேரில் விசுவாசிக்கச்செய்வோம் என்று சொல்லிச் சிலர் அவர்களிடம் போனார்கள். அவர்களில் புருஷ னும் பெண்சாதியுமான இருவரை ஜோடியாகக் கொன்று தின்று விட்டார்கள். கொல்லப்பட்ட குருவின் சகோதரன்: அவர்களை இயேசுவுக்குக் கொடுப்பேன், இல்லாவிட்டால் அவர்களுக்காக

என் உயிரைக் கொடுப்பேன் என்று புறப்பட்டுப் போனார். அவர் அங்கு ஒரு வருஷம்முழுவதும் உழைத்து 16 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபின், அவரையும் கொலைசெய்தார்கள். இப்படியிருந்தும் அத்தீவார் அநேகரை இரத்தசாக்ஷிகளாக்கினபின்தான் குணப்பட்டார்கள். உவில்லியம்ஸ் மரித்து 25 வருஷத்துக்குப்பின் அத்தீவில் எல்லாரும் குணப்பட்டு ஒரு பெரிய சபை ஸ்தாபகமாயிற்று. உவில்லியம்ஸைக் கொன்றவனின் இருமக்களில் ஒருவன் சுவிசேஷவேலை செய்துவந்தான். மற்றவன் தன் தகப்பன் கொன்ற உவில்லியம்ஸ் ஐயர் பேருக்கு ஒரு ஸ்தம்பம் நாட்டினான். இவ்விதமாக, இரத்தசாக்ஷிகளின் ரத்தம் திருச்சபையின் வித்து எனும் வாக்கு இங்கும் சத்தியமாய் விளங்கிற்று.

---

## 7. ஆப்பிரிக்கா

விஸ்தாரமான இக்கண்டத்தில் 18-ம் நூற்றாண்டிலே சுவிசேஷ வேலைக்கென்று எடுத்த பிரயாசைகள் வாய்க்கவில்லை. அநேக இடங்களில் உள்ள தேசச் சீதோஷ்ண வேற்றுமையினாலும், நிகிரோவர் தலைவரின் விரோதத்தினாலும், அடிமை வியாபாரிகளின் பகையை முன்னிட்டும் அவ்வேலை தடைபட்டுப் போயிற்று. ஆரம்பமான அக்காலத்தில் தேவனுடைய தாஸர் அநேகர் தங்கள் சுகத்தையும் உயிரையும் ஓர் பொருட்டாக எண்ணாமல் கிறிஸ்துவினிமித்தம் அவற்றை தத்தம்செய்தார்கள்.

உள்நாட்டுச் சுவிசேஷத் தூதுவர்களுக்கு வழி வகுத்தவர் தேவனுடைய உத்தம தாஸரான லிவிங்ஸ்டோன்தான். அவர்: நாங்கள் பாதையைச் செவ்வைப்படுத்துகிறவர்கள் மாத்திரமே. ஆனால் பூமிமுழுவதும் தேவனுடைய மகிமையினால் நிரப்பப்படும் என்று விசுவாசக் கண்களினாலே இப்போதே காண்கிறோம். ராஜாதி ராஜாவாகிய கிறிஸ்துவுக்குமுன் உலகத்தின் சகல ஜாதியாரும் வந்து முழங்காலிடுவார்கள் என எழுதியிருக்கிறார். முப்பது வருஷமாக அவர் ஆப்பிரிக்காவின் உள்நாட்டிலே உழைப்பு மிகுந்த ஜீவியம் செய்து 1873-ல் ஜெபத்தியானம் பண்ணுகையில் முழங்தாள்படியிடுகிறவராகப் பரம ராஜாவின் தரிசனமடைந்தனர்.

இக்கண்டத்தில் உழைத்த தேவ ஊழியரில் மோப்பாற்று என்பவர் ஓர் விசேஷித்தவராம். இவர் ஸ்காட்லாண்ட் தேசத்தில் பக்தியுள்ள பெற்றோரிடம் பிறந்து, வாலிபக்காலத்தில் தாய் தங்-




தையர் உத்தரவின்றி வீட்டைவிட்டுக் கப்பலோட்டியின் வேலையைச் செய்தார். கஷ்டப்படுகையில் புத்திதெளிந்து வீட்டிற்குத் திரும்பிவந்து, தோட்டவேலையை அப்பியாசிக்கத் தொடங்கினார். அத்தோடு தாவரசாஸ்திரத்தையும் படித்துக்கொண்டார்.

தினந்தோறும் வேதத்தை வாசிப்பேன் என்கிற வாக்கைத் தமது தாயாருக்குக்கொடுத்தமையால், இவர் தவருமல் வேதபுஸ்தகத்தை வாசித்துக் கோவிலுக்குப் போவார்.

ஒருநாள், பிரசங்கத்தினுல் எழுப்புதல்பெற்று, சில மாசமாய்ப் போராடிப் பாவிகளுடைய இரட்சகரின் பாதத்தை அடைந்து, மனச்சமாதானம் அனுபவித்தார். சிலகாலம் சென்றபின், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறியாத அஞ்ஞானிகளிடம் போய் உழைக்கவேண்டும் எனும் தேவ அழைப்பு இவருக்கு உண்டாயிற்று. ஆனுல் அவருடைய பெற்ரேர் பிரியப்படாமல் மகனுடைய தீர் மானத்தைத் தடுக்கப் பிரயாசப்பட்டார்கள். அஞ்ஞானிக ளுடைய கொடூரமான குணத்தைப்பற்றிப் புஸ்தகங்களில் வாசித் திருந்த அவருடைய தாய் புலம்பி, அழுது: என் அருமை மகனை நான் அவர்களுடைய கையிலே எப்படி ஒப்புக்கொடுப்பேன் என்று அங்கலாய்த்தாள். கடைசியிலோ, தடுக்காமல் இது தேவ சித்த மென்று அறிந்து மகனை ஆசீர்வதித்து அனுப்பினுர்கள். 1816-ல் லண்டன் சுவிசேஷப் பிரபல்ய சங்கத்தால் ஆப்பிரிக்காவுக்குப் போக நியமனம்பெற்ருர். தமது வீட்டாருக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில்: அக்கியான இருளிலே உட்கார்ந்திருந்தும் பரம தகப்பனுல் நேசிக்கப்பட்ட நிகிரோவருக்குச் சுவிசேஷ நற்செய் தியை அறிவிக்க ஆவலாய் இருக்கிறேன். ஆ! ஆ! எனக்கு ஆயிரம் உயிர் இருந்தால் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற வேலையில் அதை எல்லாம் செலவழிக்க ஆசிக்கிறேன். நான் வழியிலே செத்தாலும் துக்கப்படாதேயுங்கள், அவர் செய்வது எல்லாம் சரியே என்பதாம். தென் ஆப்பிரிக்காவிலுள்ள நாம ஜாதியாருக் குள் ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்டார். அவ்விடத்துக்குப் போகும்படி பிரயாணம் செய்யுங்கால், டச்சு ஜாதியைச்சேர்ந்த ஒரு போவரின் வீட்டிற்கு வந்தார். அவ்வீட்டார் இவரை உப சரித்து, ராச்சாப்பாட்டுக்குப் பிறகு குடும்ப ஜெபத்தை நடத்தும் படி இவரை வேண்டினர். ஜெபம் துவக்கும்போது, இக்குடும்பத் தார் அனைவரும் கூடியிருக்கவே, மோப்பாற்று போவரைப்பார்த்து: வேலைக்காரர் எங்கே எனக் கேட்க: ஐயரே! யாரைப்பற்றிக் கேட்கி றீர் என்று இவ்வீட்டுக்காரர் சொல்ல, ஐயர்: நான் வந்தபோது பயிர்வேலைசெய்யும் அநேக நிகிரோவரைக் கண்டேனே, அவர் களைப்பற்றித்தான் கேட்கிறேன் என்ருர். ஐயாவே, அவர்களைக் கூப்பிடுவதில் பிரயோஜனமில்லை. அதைவிட மலையிலிருக்கிற குரங்குகளை அழைக்கலாம், அல்லது வீட்டிற்கு வெளியே படுத் திருக்கும் நாய்களைக் கூப்பிடச் சொன்னுல் கூப்பிடுவேன் என்று

வீட்டுக்காரன் சொல்ல, ஐயர் பதில் ஒன்றும் உரைக்காமல் வேத புஸ்தகத்தைத் திறந்து மத்தேயு சுவிசேஷத்தின் 15-ம் அதிகாரத்தை வாசிக்க ஆரம்பித்தார். நாய்க்குட்டிகள் தங்கள் யஜமான்களின் மேஜையினின்று விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்கிற வசனத்தை வாசித்து அதை விஸ்தரித்தார். அப்போவரோ, இவரது வார்த்தைகளைக் கேட்கக் கேட்க மனச்சாக்ஷியில் காயப்பட்டவனாகப் பேசுகிறவரைத் தடுத்து: போதும், ஐயா! போதும்! இனி அவ்வாக்கியத்தைச் சொல்லாதேயும் எனக் கூறி, வெளியே ஓடித் தனது நிகிரோவ வேலையாட்களை உள்ளே அழைத்தான். ஜெபம் முடிந்தபிறகு ஐயரைப்பார்த்து: பெலமான சம்மட்டி கொண்டு என் பெலமான தலையை உடைத்தீர் என்றான்.

நாம நாட்டிலே, ஆப்பிரிக்கானர் என்ற ஒரு நிகிரோவை மோப்பாற்று சந்தித்தார். அவனும் அவனுடைய சகோதரனும் ஒரு ஐசுவரியமுள்ள போவரிடம் பண்ணை ஆட்களாய் இருந்து, ஒரு கொலைசெய்துவிட்டு வனாந்தர வெளிக்கு ஓடிப்போய் அநேகப் போக்கிரிகளைச் சேர்த்துக்கொண்டு ஊர் ஊராகப்போய், வீடுகளைக் கொளுத்திக் கொள்ளையிட்டு அவ்விடத்திய குடிகளுக்குத் திகில் உண்டாக்கி வந்தார்கள். எவன் ஆப்பிரிக்கானரைப் பிடித்துக் கொடுப்பானோ, அவனுக்கு 1,500 ரூபாய் கொடுப்போமெனக் கேப் கலனி ராஜாங்கம் விளம்பரம்பண்ணினது. ஆப்பிரிக்கானர் என்பவன் தான் இருந்த இடத்திற்கு ஏற்கனவே வந்திருந்த சுவிசேஷகரால் தேவவசனத்தைக் கேட்டறிந்து ஆச்சரியப்பட்டு இரட்சிப்பைப்பற்றிய நற்செய்தியை ஓரளவாக ஏற்றுக்கொண்டிருந்தான். கொஞ்சக்காலத்துக்குள்ளே, மிஷனெரிகளுக்கும் அவனுக்கும் மனஸ்தாபம் உண்டாகி, ஆப்பிரிக்கானர் கடுங்கோபங்கொண்டு, மிஷன் ஸ்தானத்தைச் சர்வ கொள்ளையாடி, மீதியாயிருந்ததையெல்லாம் நெருப்புக்கிரையாக்கிவிட்டான். மோப்பாற்றோ இச்சங்கதிகளெல்லாவற்றையும் அறியாதவரல்லர். இவரது சிநேகிதர்: ஐயோ, ஆப்பிரிக்கானர் இருக்கும் இடத்துக்குப் போவீரானால், அவன் உம்மைக் கொன்றுபோட்டு, உம்முடைய மண்டை ஓட்டில் தண்ணீர் குடிப்பான் எனப் புலம்புவதைக் கேட்டும் இவர் பின்வாங்கவில்லை. ஆப்பிரிக்கானரோடும் அவன் தோழரோடும் சிநேகம்பண்ணி, குரூர நெஞ்சுள்ள அந்த நிகிரோவைக்கூடப் புதுச் சிருஷ்டியாக்கச் சுவிசேஷமானது வல்லமைசெய்யும் எனக் கண்டுகொண்டார். அவன் வாசிக்கக் கற்று, தான் வேதபுஸ்தகத்தைப் படிப்பதாலும், ஐயர் பிரசங்கத்தைக் கேட்பதாலும் நல்லறிவு அடைந்தான். வெகுநேரம் படித்தபின்: போதும் போதும், என்

தலை சின்னது, இப்பெரிய காரியங்களை அதிகமாய் யோசித்தால் அது வீங்கிப்போகும்போல் இருக்கிறது என்று சொல்லுவான். மெய்க்குணப்படுதல் அடைந்து, சூழ்ந்துள்ள மிலேச்ச ஜாதியாரை விரோதத்துக்கும் சண்டைக்கும் மூட்டிவிட்ட அவன், இப்பொழுது சமாதானம்பண்ணிவைக்கிற தேவபுத்திரனாக விளங்கினான். மோப்பாற்று ஐயர் வியாதிப்பட்டபோது, ஆப்பிரிக்கானர் அவரைத் தாயடைவான அன்போடு பேணிவந்தான். கிறிஸ்தியான் என்கிற தன் புதுநாமத்துக்குப் பாத்திரமுள்ளவனாகச் சில வருஷ காலம் ஜீவித்தபின், பரமகதியடைந்தான்.

1819-ல் ஸ்காட்லாண்டிலிருந்து வந்த மேரியம்மாளைக் கேப் ஊரிலே மோப்பாற்று மணங்கொண்டார். பக்தியும், கரிசனமும், அழகும்வாய்ந்த இவ்வுத்தமி தன் பெற்றோருக்கு ஏகபுத்திரியாயிருந்தாள். அவள் இன்னாள் என்றறிந்த மாத்திரத்தில் நேசிக்கலாகும். உள் ஆப்பிரிக்காவின் காடுகளில் வசிக்கிற மிலேச்சர் நடுவில் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் மோப்பாற்றிடம் தங்கள் மகளை அனுப்ப இவளுடைய தாய்தந்தையர் மனமற்றவர்களாய் இருந்தமையால், இவர் மூன்று வருஷக்காலமாய்த் தம் அருமை மணவாட்டிக்காகக் காத்திருக்கவேண்டியதாயிற்று. கடைசியில் பெற்றோரின் ஆசீர்வாதத்தை அடைந்து, நீண்ட பிரயாணம் பண்ணி அந்தகாரம் நிறைந்த ஆப்பிரிக்கா கண்டத்தில் 50 வருஷக் காலம் தன் கணவரோடு உழைத்தாள்.

கலியாணம் செய்த உடனே, பெச்சுவான ஜாதியாருக்குள்ளே வேலை துவக்கும்படி புறப்பட்டார்கள். இரண்டு மாதமாய் மாட்டு வண்டியிலே பிரயாணம் செய்து, காடு, மலை, நதி, வனாந்தரங்கள் கடந்து குருமான் என்னுமிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். நாகரீகமான எந்த இடத்தினின்றும் சுமார் 1,000 மைல் தூரமான இவ்விடத்தில் தங்களுக்கு ஒரு சிறு வீட்டைக் கட்டினார்கள். கட்டி முடித்தபின் பெச்சுவானப்பாஷையைப் படிக்கவும், அங்குள்ள ஜனங்களோடு பழக்கம்பண்ணவும் ஆரம்பித்தனர். பெச்சுவானர் சிறிதும் நாகரீகம் அற்றவர். தரித்திரத்தினாலும் அசமந்தக்குணத்தினாலும் தாழ்ந்த நிலைமைக்கு வந்திருந்தார்கள். திருட்டிலேமட்டும் அவர்கள் கெட்டிக்காரர். சண்டை, குடி, பில்லிசூனியம், இரத்தம் சிந்துதல், விக்கிரக ஆராதனையோடு சேர்ந்த ஆடல்பாடல்கள் முதலியவைகள் இவ்விடத்தில் தினசரிச் சம்பவங்களாம். மோப்பாற்றையரும் இவரோடு வந்த இன்னொரு குருவும் மிகுந்த பிரயாசத்தினால் பண்படாத நிலத்தில் பயிரிட்ட தானியத்திலும் மரக்கறியிலும் அந்நாட்டார் வந்து திருடிக்கொண்டு போய்விட்டார்கள்.

அல்லும் பகலும் இச்சனங்கள் ஐயர் வீட்டை மொய்த்துக்கொண்டு, களைவந்தக்கால் சற்றுப் படுத்து உறங்கி, பசிக்கையில் அங்குள்ள போஜனபதார்த்தங்களில் வேண்டியதைக் கொள்ளையாடி, பசி தீர்ந்துவிட்டார்கள். ஜெபத்துக்குக் கூடும்போது, அடுப்பில் வேகும் சாதத்தைக்கூட தூக்கிக்கொண்டு போவதும் உண்டு. இஷ்டமானதை எடுக்கும்போது வீட்டார் தடுக்கப்பார்த்தால், பயமுறுத்தவும் அடிக்கவும் ஆரம்பிப்பார்கள். அந்நாட்டுத்தலைவன் சுவிசேஷத் தூதுவர்களுக்குச் சிலவேளை தயவுபாராட்டி, அவர்களால் கிடைக்கக்கூடிய சகல நன்மைகளையும் நாடினான். ஆனால் குடிகளுடைய திருட்டுத்தனத்தைப்பற்றி ஒருநாள் ஐயர்மார் முறையிடும்போது, தலைவன் நகைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்து: உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால், நீங்கள் ஏன் உங்கள் சொந்தத் தேசத்துக்குத் திரும்புகிறதில்லை? அது தரித்திரமான தேசமாயிருக்கிறபடியால் அல்லவா அதைவிட்டு இங்கே வந்தீர்கள். அல்லது, ஏதாவது குற்றம் செய்ததால் அங்கிருக்க முடியாதுபோலிருக்கிறது. நான் என்னத்தைக் கண்டேன்! என்றான். சகலத்தையும் சகித்து, தாங்கி, நம்பும் தெய்வ அன்பு அவர்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்ததை அவன் கண்டானில்லை. மந்திரக்காரர் தாங்களே மழையளிக்கிறவர்கள் எனச் சொல்லி, மழைபெய்யாத ஒரு சமயத்தில் ஐயர்மேல் கோபங்கொண்டு, ஜனத்தைக் கூட்டி: வெள்ளை மனுஷர் தங்கள் ஜெபங்களினாலேதான் மழையைத் தடுத்து, கோவில் மணிச்சத்தத்தினால் மேகங்களைக் கலைத்துவிடுகிறார்கள். அவர்களைத் துரத்திவிடுவோம் வாருங்கள் என்று கூப்பிட்டார்கள். இப்பேச்சின் பயனாக, ஒரு பெரிய கூட்டம் ஐயர் வீட்டிற்குள் புகுந்தது. தலைவன் ஈட்டியும் கையுமாய் நின்று, ஐயரை நோக்கி: நீங்கள் இக்ஷணமே எங்கள் தேசத்தைவிட்டுப் புறப்படாதேபோனால், உங்களுக்கு என்னசெய்வோம் பாருங்கள் எனப் பயமுறுத்தினான். ஐயரோ: புறப்படமாட்டோம் என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கிறோமே; இப்போதும் அப்படியே சொல்லுகிறோம். நீங்கள் எங்களுக்கு என்னசெய்தாலும் சரி, நாங்கள் இங்கேயே தங்குவோம்; ஏனென்றால், எங்கள் உள்ளம் உங்களிடம் இருக்கிறது, என்று பயமின்றி அன்போடும் சாந்தத்தோடும் சொன்னார். இவ்வார்த்தையைக் கேட்ட அத்தலைவன்: இந்த மனுஷருக்கு 1,000 உயிர் இருக்கிறாப்போல் இருக்கிறது. அதனால்தான் அவர்கள் மரணத்திற்குப் பயப்படுகிறதில்லை என்று சொல்லி வெட்கப்பட்டுக் கூட்டத்தோடு ஐயர் வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.

பெச்சுவானர் தேசத்தில் ஒரு பயங்கரமான வழக்கம் நடமாடி வந்தது. அதாவது: வயதுசென்ற பெற்ருேரை வேண்டாம் எனும் பிள்ளைகளும், பிள்ளைகளை வெறுக்கும் பெற்ருேரும் அவாந்தர வெளிகளில் அவர்களைக் கொண்டுபோய் விட்டுவிடு கிறது, அல்லது அவர்களை மண்ணிலே உயிரோடு புதைத்துவிடு கிறதுதான் அவ்வழக்கமாம். செத்துப்போன ஒரு தாயோடுகூட அவளுடைய இரண்டு குழந்தைகளையும் புதைத்துக்கொண்டிருந்த ஒரு மனுஷனை ஐயர் கண்டு அந்த குழந்தைகளை இரக்ஷித்து வளர்த் தார். இன்னெரு சமயத்தில் குரூர நெஞ்சுள்ள ஒரு தாய் தான் பெற்ற பிள்ளையை ஐயரின்தோட்டத்தில் உயிரோடு புதைத்திருந் தாள். மேரியம்மாள் அப்பிள்ளையைக் காப்பாற்றிப் பாலூட்டிப் பிழைப்பூட்டி வந்தாள்.

ஐயர்மார் தாங்கள் வசித்த அவ்விடத்தில் மாத்திரமல்ல, மோசம் நிறைந்த பிரயாணங்களைச் செய்து, சுற்றுப்புறங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார்கள். துஷ்டமிருகங்களின் அபாயங்களினின்றும், விஷப்பாம்புகளின் ஆபத்துக்களிலிருந்தும் அடிக்கடி ஆச்சரியமான விதமாய் இரக்ஷிக்கப்பட்டார்கள்.

ஒரு தருணம் ஒரு பயங்கரமான புலியைக் கண்டு, உயிர் தப்பும் படி அந்த மிருகத்தின் கண்களை வெறிக்கப் பார்த்துக்கொண்டே, பின்ஞக அடிவைத்துக்கொண்டு போகையில், மோபாற்றையர் ஒரு நல்ல பாம்பை மிதித்துவிட்டார். அந்தச் சர்ப்பம் அவருடைய காலைச் சுற்றிக்கொண்டது. ஐயரோ அதை உதறிவிட்டுப் படம் எடுத்த அந்தப் பாம்பைக் கொன்றுபோட்டார்.

ஆறு வருஷமாக ஒரு ஆத்துமாவாவது குணப்படுவதைப் பார்க் காதிருந்தும், தம்முடைய வேலையினல் உண்டான யாதொரு நற் பலனைக்கூடக் காணுதிருந்தும், அவ்வேலையைத் தொடர்ந்து செய் தார். பாவத்தைக் கண்டித்தால் பெச்சுவானர் சிரிப்பார்கள். குணப்படுதலையும் மோக்ஷத்தையும்பற்றிப் பேசினல்: அதெல்லாம் பைத்தியமான காரியம், எங்களுக்கு அதெல்லாம் வேண்டாம். ஒருக்காலும் ஒரு பெச்சுவானனும் உன் இயேசு சுவாமியைக் கும் பிடமாட்டான் என்பார்கள். ஆறு வருஷம் 2,000 நாட்களுக்கு மேற் கொண்டது அல்லவா? இப்பொழுது மோப்பாற்றுடைய விசு வாசம் கலங்கத் துவக்கிற்று; உதவிக் குருவும் விசுவாசத்தில் தளர்ந்தார். இங்கிலாந்திலுள்ள சங்கத்தார்கூட அதைரியப்பட்டுப் போய்த் தங்களுடைய ஸ்தானுபதிகள் வேறுபக்கம் போய் வேலை செய்தால் தாவிளை என்று எண்ணினர்கள். அப்படியிருந்தும், மோப்பாற்றின் மனைவியாகிய மேரியம்மாள் சற்றென்கிலும் சந்

தேகப்படாமல், சூரியன் உதயமாவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் நீதியின் சூரியனுன இயேசுகிறிஸ்து இந்தப் பெச்சுவானருக்கு உதயமாவார் என்று அந்தப் பக்தி மாது சொல்வது வழக்கம். இங்கிலாந்துக்குக் கடிதமனுப்பி, பரி. இராப் போஜனம் பரிமாறும்படி திருப்பாத்திரங்களை எங்களுக்கனுப்புங்கள், கொஞ்சக்காலத்துக்குள் அவை எங்களுக்குத் தேவையாகக் கூடும் என்றெழுதினுள்.

அக்காலத்தில் பெச்சுவானருடைய தேசத்தைப் பிடிக்கும்படி தன் தேசத்திலிருந்து துரத்தப்பட்ட ஒரு ஜாதி மகா பெரிய கூட்டமாக வந்தது. மோசமான அச்சமயத்தில் மோப்பாற்றையர் தம்முடைய விவேகத்தினுலும் தைரியத்தினுலும் பெச்சுவானரைக் காப்பாற்றினுர். இது 1827-ல் நடந்தது. இதற்குமேலே இன்னும் இரண்டு வருஷமாய் ஒரு மாறுதலையும் காணுதிருந்தும், கர்த்தருக்கென்று உழைத்துவந்தார்கள். பாவம், அக்கிரமம், குரூரம் முதலிய பயங்கரங்களினுல் சூழப்பட்டும் அதரிசியமானவரைத் தரிசிக்கிறவர்கள்போல் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். 1829-ல் எதிர்பார்த்த சூரியோதயம் உண்டாயிற்று, ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஆராதனைக்கு வந்து, கண்ணீரோடு சுவிசேஷ வசனத்தைக் கேட்டு, மாரடிப்போடு தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பு பெற்றபின்னர், கெம்பீரமாய்க் களிகூர்ந்தார்கள். சில மாதங்களுக்குள் அவ்விடத்திய காக்ஷி மாறிவிட்டது. விக்கிரகாராதனையோடு சேர்ந்த ஆடல்பாடல்கள் நின்றுபோய், சீயோனின் கீதங்கள் குடிசைகளில் ஆனந்தக்களிப்போடு தொனித்தன. திருட்டைவிட்டுப்போட்டு, ஆண்களும்பெண்களும் சுறுசுறுப்பாய் வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். வீடுகளைச் சுத்தமாய் வைக்கவும், பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கனுப்பவும், தோட்டங்களில் பயிரிடவும் ஆவல்கொண்டார்கள்.

பேர்போன மந்திரவாதி ஒருத்தி ஒருநாள் கோவிலைத் தாண்டிப்போகையில் ஒரு வேதவாக்கியத்தைத் தன் காதில் வாங்கிக்கொண்டு திகிலடைந்து ஓடிப்போனுள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை திரும்பிவந்து ஒழுங்காய் உட்கார்ந்து, பிரசங்கத்தை கவனித்துக் கேட்டாள். சில நாட்கழித்து அவள் மோப்பாற்றையரிடம் வந்து, தனது பயங்கரமான பாவங்களை அறிக்கையிட்டும் மனச்சமாதானம் பெறவில்லை. பகலில் மாத்திரமல்ல, நடுராத்திரியிலும்கூட ஐயர் வீட்டிற்கு வந்து: என் ஆத்துமாவை இரட்சிக்கும்படி நான் என்ன செய்வேன் எனக் கூவுவதுண்டு. ஒருநாள்: நான் உயிரோடிருக்க முடியவில்லை, சாகவும் முடிய

வில்லை. ஐயோ, நான் என்ன செய்வேன்! என்று அங்கலாய்த்திருக்கும்போது, ஐயர் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியானவரைப்பற்றிக் கூற, அவ்விஸ்திரீ: கிறிஸ்துவின் ரத்தம் பாவங்களறச் சுத்திகரிக்கும் என்று சொல்லுகிறீரா? என் பாவங்களின் தொகை உமக்குத் தெரியுமா? விடியற்காலையின் பனித்துளிகளை எண்ணினாலும் என் அக்கிரமங்களைக் கணக்கிட முடியவே முடியாது என்றாள். ஆனால் சில வாரமாகப் போராடினபின், இவ்வாத்துமாகூட கிறிஸ்துவின் சமாதானத்தை ருசித்துவந்தது. தேவவசனத்தால் எழுப்புதலடைந்தோர் கூட்டத்தில் ஆறு பேர் தெரிந்துகொள்ளப்பட்டு ஞானஸ்நானத்தினால் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர். ஆனந்தமான இந்நாளுக்கு முந்தினநாள், இங்கிலாந்திலிருந்து ஒரு சிறு பெட்டி வந்திருந்தது. அது மேரியம்மாள் மந்தாரக்காலத்தில் எழுதிக் கேட்ட இராப்போஜனப் பாத்திரங்கள்தான்.

ஒன்பது வருஷங்களாகக் கண்ணீர் ஜெபங்களோடு விதைத்த விதை முளைத்துக் கனிகொடுத்து வரும்போது, மோப்பாற்று இவ்விடத்திலே தங்காமல், மாற்றபீலா நாட்டுத் தலைவனால் அழைக்கப்பட்டு, அவனுடைய தேசத்துக்குப் புறப்பட்டுப்போனார். இரத்தப்பிரியனும் பயங்கர கிரியைகளில் பேர்போனவனுமான இத்தலைவன் மோப்பாற்றைச் சிநேகித்துக்கொண்டு ஆனந்தத்தோடு அவரை உபசரித்து, அவருடைய தோள்மேல் தனது இரு கைகளையும் வைத்து: ராமேரியே, உன்னைப் பார்க்கும்போது என் இருதயம் பால்போல் வெண்மையாய் இருக்கிறது என்றும், ஐயர் புறப்படும்போது: ராமேரியே, நீ என் ராஜ்யத்தில் தங்கின நாள் எல்லாம் ஓர் கனவுகாலம் போலிருந்தது. என் உள்ளம் உன்னோடுகூட வரும். க்ஷேமமாய்ப் போய் வா. கொஞ்சக்காலத்திற்குள் மாமேரியை அழைத்து இங்கே திரும்பி வா என்றும் சொன்னான். தங்கள் நண்பனான மோப்பாற்றுக்கு நிகிரோவர் அநேகப் பெயரை இட்டுவந்தார்கள். இவைகளில் ஒன்று, மேரியின் தகப்பன் என்று அர்த்தங்கொள்ளும் ராமேரி என்பது. (ஐயரின் மூத்த மகள் பெயர் மேரி.)

மாற்றபீலா நாட்டுத் தலைவன் மோப்பாற்றையர் கொண்டு வந்த அநேக சாமான்களை, விசேஷமாய் அவர் பிரயாணம் செய்கிற வண்டியைப் பிரமிப்போடு உற்றுப்பார்த்தான். உலகத்தின் பெரிய ராஜ்யங்களைப்பற்றியும் அக்கரையிலுள்ள மகா ராஜாவைப் பற்றியும் சம்பாஷித்தார்கள். ஆனால் தாம் வந்த நோக்கத்தை

மறைக்காமல், மோப்பாற்று உலக சிருஷ்டிகரையும் தம்மை ஆட் கொண்ட இயேசுகிறிஸ்துவையும் குறித்து அறிவித்தார்.

உலர்ந்த மனுஷ எலும்புகளால் மூடப்பட்ட உன் தேசத்தை நான் காணும்போது எனக்கு மகா பெரிய துக்கம் உண்டாகும். அவைகள் வானத்தை நோக்கிக் கூப்பிடுகின்றன. உன் தேசம் துக்கமும் திகிலும் நிறைந்தது என்று ஐயர் அத்தலைவனைப் பார்த் துச் சொன்னார். இனி யுத்தங்களைத் துவக்குவதில்லை என தலை வன் வாக்களித்தும் அதைக் கைக்கொள்ள அவனால் முடியவில்லை. ஆனால் அவன் அந்நியனான மோப்பாற்றின்மேல் வைத்த அன்பும் நம்பிக்கையும் ஒருபோதும் மாறவில்லை.

குருமான் என்கிற இடத்தில் மோப்பாற்று ஒரு பெரிய கோவி லைக் கட்டும்போது, அந்தக் கட்டிடத்திற்குத் தேவையான மரங் களைத் தந்து அவற்றை அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அத்தலைவன் அதிகப் பிரயாசைப்பட்டான்.

ஐந்து வருஷம் கழிந்தபின், இங்கிலாந்திலிருந்து வந்த சில பிரயாணிகளுக்கு வழிகாட்டும்படி மோப்பாற்றையர் மறுபடியும் மோசேலிக்கட்சு எனும் பெயர்கொண்ட இத்தலைவனிடம் வந்தார். அதைப்பற்றி மோப்பாற்று எழுதியிருப்பது: நான் வந்த பொழுது மோசேலிக்கட்சு ஆற்றில் ஸ்நானம் பண்ணிக்கொண் டிருந்தான். அவன் உடனே தண்ணீரிலிருந்து ஏறி, பாட்டுப்பாடு கிற வாலிபர் தன்னைச் சூழ்ந்துவர என்னிடம் வந்தான். ஒரு கையினால் என் கையைப் பிடித்துக்கொண்டு மறு கையால் என் நீண்ட தாடியைத் தடவி மும்முறை என் பெயரைச் சொல்லி: நான் உன்னைப் பார்க்கையில் என் இருதயம் பால்போல் வெண்மை யாயிருக்கிறதென்றான் என்பதாம்.

இத்தருணத்தில் இரண்டு மாதமாய் அவ்விடத்தில் தங்கி மெய்த்தேவனைக் குறித்தும் பிரசங்கித்து, சில சுவிசேஷத் தூதுவர் மாற்றபீலா நாட்டுக்கும் வந்து வசிக்கும்படி, தலைவனிடம் உத் தரவுபெற்றுப் போய்விட்டார்.

இன்னொரு முறை அதாவது 20 வருஷம் சென்றபின் மோப் பாற்றும் மோசேலிக்கட்சும் ஒருவரையொருவர் சந்தித்தார்கள்.

பெலசாலியும் யுத்தவீரனுமாயிருந்த தலைவன் இப்பொழுது முடவனாகவிருந்து, ஒரு மிருகத்தோலில் உட்கார்ந்திருந்தான். மோப்பாற்றைப் பார்த்தவுடன் தனது இரண்டுகைகளையும் அவருக்கு நேரே நீட்டி: ராமேரியே, ராமேரியே, என்று சொல்லித் தன் போர்வையினால் தன் முகத்தை மூடி, ஓர் குழந்தையைப்போல்

தேம்பித் தேம்பி அழுதான். இந்த இரண்டு சிநேகிதரும் சந்தித்த கடைசிமுறை இதுதான்.

தமக்கருமையான பெச்சுவானருக்கு முழு வேதபுஸ்தகத்தையும் அவர்கள் சொந்தப்பாஷையில் கொடுக்கும்படி மோப்பாற்றையர் பட்ட பிரயாசையை யார் எடுத்துரைக்கக்கூடும்?

சில மாதமாக வீட்டைவிட்டு, அந்நாட்டாருடைய குடிசைகளில் வசித்து அவர்கள் பேச்சை அவர்கள் வாயால் கேட்டுப் படித்து அவர்கள் சாப்பாட்டைச் சாப்பிட்டு, பெச்சுவானருக்குப் பெச்சுவானனுனார். 450 மைல் தூரமான கேப் பட்டணத்துக்குக் குதிரை சவாரி பண்ணி, அச்சடிக்கிற வேலையைப் படித்துக்கொண்டு வேதத்தின் சில பகுதிகளைப் பதித்து வீட்டிற்குத் திரும்பிவந்தார். கொஞ்சக் காலத்துக்குப்பிறகு மிஷனுக்கு ஒரு அச்சியந்திரம் கிடைத்தபோது, அதைக்கொண்டு வேதாகமங்களில் இன்னும் சிலவற்றை அச்சடித்து முடித்தார். ஓர்நாள் கிறிஸ்தவப் பெச்சுவானன் ஒருவன் மோப்பாற்றிடம் வந்து: தகப்பனே, ஒன்று கேட்க எனக்கு ஆசையுண்டென, ஐயர்: சொல்லு என்றுரைக்க, அம்மனிதன்: சத்தியவேதத்தை எழுதிய அப்போஸ்தலர்மார் பெச்சுவானராகிய எங்களை அறிந்திருந்தார்களா? இதைப்பற்றி எங்களுக்குள் தர்க்கம் உண்டு என்றான். மோப்பாற்றோ, இதை ஏன் கேட்கிறாய் என்று வினவ, அவன்: அப்போஸ்தலர் எங்களை ஏற்கனவே அறிந்தவர்கள் என்பது என் அபிப்பிராயமாம். ஏனென்றால், ஒரு பெச்சுவானனுடைய உள்ளத்தில் உள்ள ஒவ்வொரு பாவத்தையும் அப்புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள். என் ஊரிலுள்ள அக்கியானிகள் வேதபுஸ்தகத்தை வாசிக்கக் கேட்கப் பயப்படுகிறார்கள். உள்ளதை வெளியதாய்க் காட்டும் என்பார்கள் என்று சொன்னான்.

வேறொரு சமயத்தில் ஒரு கிழவன் முகம் குறுவினவனாக ஐயரிடம் வந்தான். அவன் மனக்கிலேசத்துக்குக் காரணம் யாது என்று ஐயர் கேட்க, வயோதிபன்: ஐயோ, என் நாய் வேதபுஸ்தகத்தின் ஒரு ஏட்டைக் கிழித்து தின்றுவிட்டதெனப் புலம்பினான். மோப்பாற்றையர்: விசனப்படாதே, நான் ஒரு புது ஏட்டைக் கொடுப்பேன் என, கிழவன்: அது சரி, ஆனால் நாய்க்கு என்ன செய்கிறது? வேட்டைக்காவது, நரி துரத்திக் கடிக்கிறதற்காவது அது இனி உதவாதேபோகும். எத்தனையோ மனிதரைக் கொல்லும் நமது யுத்தவீரர் எல்லாரும் பெண்களைப்போல் சாந்தமுள்ளவர்களானார்களே. அது அப்புஸ்தகத்தை வாசிக்கிறதினால்தானே. நாயும் அப்படியே ஆகிவிடும் என்று சொல்லி முடித்தான். இவ்

வெண்ணத்தினுல் இவன் விசனப்பட்டும் ஐயர் களிகூர்ந்தார். சாந்த முள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

1838-ல் முழுப் புதியேற்பாட்டையும் மொழிபெயர்த்து ஓர் ஞாேனுபதேசம், சங்கீதப் புத்தகம், ஞானப்பாட்டுகள், மோக்ஷ பிரயாணம் என்றவற்றைப் பிரசுரிக்க, மேற்சொன்ன வருஷம் இங்கிலாந்துக்குப் புறப்படலானுர். கப்பல்பயணம் பண்ணுங் காலத்தில் மேரியம்மாள் ஓர் பெண்குழந்தையைப் பரமதகப்பன் அளித்த ஈவாகப் பெற்றுக்கொண்டதோடு, 6 வயதுள்ள தன் அருமை மகளை மரணத்தின் வழியாய் ஆண்டவருக்குத் தத்தம் செய்யவேண்டியவளானுள். மோப்பாற்றையர் தம் ஜெனனதேசத்தில் சுமார் 4 வருஷம் தங்கினுர். சத்தியவேதத்தை மொழி பெயர்க்கிறதிலும், சுவிசேஷவேலையைப்பற்றி உபந்நியாசிப்பதிலும், புஸ்தகங்களை எழுதுவதிலும் இக்காலத்தைக் கழித்தார். ஐயரும் அவர் மனைவியும் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிவருகையில் இவர்கள் மருமகனுன லிவிங்ஸ்டோன் இவர்களை அங்கே ஏற்றுக்கொண்டார். குருமான் என்ற தங்கள் சொந்த இடத்துக்கு வந்தபோது, அங்குள்ள 2,000 நிகிரோ கிறிஸ்தவர்கள் இவர்களை மிக ஆனந்தத்தோடு வாழ்த்திப் பலவிதங்களால் தங்கள் அன்பைக் காட்டினுர்கள். இதுமுதற்கொண்டு இன்னும் 35 வருஷங்களாய் ஆப்பிரிக்காவின் மக்களுக்குள் மோப்பாற்றும் அவர் சமுசாரமும் அன்பின் ஊழியத்தை நடத்திக்கொண்டே வந்தார்கள்.

நிகிரோவரின் தகப்பனுக விளங்கிய மோப்பாற்று 70 வயதில் தமது சொந்தத் தேசமாகிய இங்கிலாந்துக்குத் திரும்பி, ஆத்தும சரீரத்தத்துவங்கள் குன்றுமல் பின்னும் 13 வருஷம் ஜீவித்து, அன்பு, சந்தோஷம், சமாதானம், நன்றியறிதலும் நிறைந்து பிரகாசிக்கின்றவராய்த் தமது பரதேச சஞ்சரிப்பை முடித்துப் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

இவருடைய பிள்ளைகளில் இருவர் தங்கள் தகப்பனின் ஊழியத்தைத் தொடர்ந்து நடத்தினுர்கள்.

---

## 8. கிரீன்லாந்து

தேசம். கிரீன்லாந்து என்னப்பட்ட இத்தேசமானது இப்பூமியின் வடதுருவத்துக்கருகாமையிலுள்ள ஒரு தீவு. அநேகக் காலமாக இத்தேசம் இருப்பதே ஒருவருக்கும் தெரியாது. ஆனுல்

நார்வேயிலுள்ள ஒரு கப்பலோட்டி இத்தீவைக் கண்டுபிடித்து, இதன் இயற்கைக்கு மாருகக் கிரீன்லாந்து எனப் பெயர் வைத்து இப்பெயரை முன்னிட்டு அநேகரை அங்கே குடியேற்ற எண்ணி ஞன். பச்சைப் பூமி என்று சொல்லப்பட்டதால் அதிகச் செழிப் பாயிருக்குமென்று எண்ணி அநேக நார்வேயர் அத்தீவில் குடியிருக் கப்போனூர்கள். அத்தேசமோ முழுவதும் பனிக்கட்டிகளால் மூடப்பட்டதும், செடி கொடிகள் அற்றதுமாயிருந்தது. கடற் கரையோரத்தில் சில இடம் மாத்திரம் சற்றுப் பயிரிடக்கூடிய தரையுள்ளது. சூரிய உஷ்ணமே கிடையாது. வருஷத்திற்கோர் காலத்தில்தான் சூரியப்பிரகாசம் உண்டு. மற்ற நாட்களில் ஒரு விதமான அரரோபோரியாலிஸ் என்ற வடவெளிச்சம் பிர காசிக்கும். கடலோரங்களும் அதிக அபாயகரமானவைதான். ஏனெனில் உள்நாட்டிலுண்டாகும் பனிக்கட்டிகள் மெது மெது வாய் நகர்ந்து ஒன்ருகக்கூடி ஒரு மலைபோலாகிச் சமுத்திரம் சேர்ந்து அதில் ஓடும் கப்பல்களை உடைத்துவிடும். அத்தேசத் தில் ஆடு மாடு குதிரை முதலிய செந்துக்கள் பிழைக்கா. ஆனல் அவ்விடத்தில் நாயும் ஓர்வகைக் கலைமானும்தான் வீட்டு மிருகங் கள். திமிங்கிலமும் ஸீல் என்ற நீர்ப்பிராணியும் கடல் வாழ்வன வாம். இவைகளே இத்தீவாரின் ஆகாரத்துக்குதவுவன. இவை களின் எலும்புகளால் அம்பு, ஈட்டி முதலிய சாமான்கள் செய்து கொள்ளுவார்கள்.

**ஜனம்.** இத்தேசத்தவர்கள் மிகவும் குள்ளர். ஐரோப்பியர் இவர்களை எஸ்கிமோ ஜாதியார் என்பார்கள். பனிக்கட்டியால் வீடுகட்டி அவைகளின் வாசலை எலி வளைபோல் வீட்டுக்குச் சற்று தூரம் நீட்டி வளைத்துவிடுவார்கள். வீட்டுக்குள் போகவேண்டுமா ஞலும் அதினின்று வெளியே வரவேண்டுமானுலும் மார்பால் நகரவேண்டும். மிருகங்களின் தோல்தான் அவர்களுக்கு உடுப்பு. அம்மிருகங்களின் மாம்சங்களே அவர்களின் ஆகாரம்.

**மார்க்கம்.** இவர்கள் கடலின் ஆழத்தில் ஒரு தெய்வம் இருக் கிறதாக எண்ணி அதற்குப் பயந்து வந்தார்கள். அங்கிக்கோக்கர் என்ற அவர்களது மந்திரவாதிகள்தான் பெரியவர்களென அவர் களை மிதமிஞ்சி மதிப்பார்கள். அவர்கள் மோட்சம் என்பது எப்போதும் வெயிலடித்துப் பிரயாசப்படாமலே மாமிசம் சாப்பிடும் ஒரு வெறும் இடம் என்று எண்ணினூர்கள். மெய்த்தேவனைப் பற்றிய அறிவு அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் பேச்சுக்கு எழுத்திருந்ததில்லை. தின்பதும் கூத்தாடுவதுமே அவர்கள் இன் பம். அங்குக் குடியேறின நார்வேயர் சில காலத்திற்குள் கொள்ளை

நோயால் அடியோடு மாண்டுபோனார்கள். போனவர்களைப்பற்றித் தாய்நாட்டாரும் மறந்துபோனார்கள்.

**எகிதே போதகர்.** இத்தேசத்தைப்பற்றியும் போனவர்களைப் பற்றியும் அநேககாலம் மறந்துபோன நார்வேயரில் ஒருவரான எகிதே என்ற போதகர் சில புஸ்தகங்களை வாசித்து வந்தார். அதில் கிரீன்லாந்தைப்பற்றியும் அங்கே வலசை வாங்கின நார்வேயரைக் குறித்தும் சொல்லி இருந்தது. அப்போது அவர் கிரீன் லாந்துக்கு எப்படியாவது தாம் போய் சுவிசேஷவேலை செய்ய வேண்டுமென்று எண்ணித் தம் மனைவியிடமும் சபையாரிடமும் சொன்னார். அவர்களெல்லாரும் இது பைத்தியமென்று சொல்லி நகைத்தார்கள். அவர் மனைவி: என்மேலும் என் பிள்ளைகள் மேலும் அன்பு இல்லாததால் இப்படிப் போகிறார் என்றாள். இவரோ விடாப்பிடியாய் அத்தியக்ஷரிடத்திலும் பத்திரிகை வாயிலாலும் தமது எண்ணத்தை நிறைவேற்ற வகைதேடினார். காரியம் சித்திக்கவில்லை. ஒருதடவை கிரீன்லாந்துக்குப் போகும் வியாபாரக் கப்பல்காரரிடம் நயமாய்ப் பேசியும் அவர்கள் தம்மை ஏற்றுக் கொள்ளாததைக் கண்டு விசனத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டார். இவருடைய சபையாரும் இன்னுமநேகரும் இவரைப் பரிகாசம் பண்ணவும் பகைக்கவும்கூடத் தலைப்பட்டுவிட்டார்கள். இருக்க இருக்க இவர் மனைவிக்கு இவரைப்போலவே கிரீன்லாந்துக்குப் போவதிலே மனம் பதிந்துவிட்டது. ஆனால் வேறு அனுகூலங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இப்படியாக ஐந்து வருஷம் கழிந்தது. இவர் கொண்ட எண்ணம் நிறைவேறக் கர்த்தர் ஒரு வழியை உண்டுபண்ணினார்.

அக்காலத்தில் டென்மார்க்கு இராஜாவான 4-ம் பிரதரிக் என்பவர் நார்வேயையும் ஆண்டுவந்தார். அவர் சுவிசேஷவேலை நடப்பிக்கப் பிரியப்பட்டவராய்த் தமது ஆளுகைக்குட்பட்ட இந்தியாவிலுள்ள தரங்கம்பாடிக்கும் இன்னும் பல குடியேற்ற நாடுகளுக்கும் சுவிசேஷகரை அனுப்பினார். அப்போது எகிதே என்பவரின் மனுவும் அவ்வரசருக்குக் கிடைத்தது. தெய்வசகாயமாய் ராஜரும் சம்மதித்துத் தாம் எகிதேக்கு உதவிசெய்வதாயும் இவரோடு சில வியாபாரக் கப்பல்களை அனுப்பிவைப்பதாயும் வாக்களித்தார். பிரயாணிகளுக்கு இரண்டு கப்பல்களும வீடுகட்டும் தளவாடங்கள் ஆகாரம் முதலியவற்றை ஏற்றிப்போக இரண்டு மரக்கலங்களும் ஆக நாலு கப்பல்கள் புறப்பட்டன. அவற்றுடன் எகிதே போதகர் தமது மனைவி மக்கள் சகிதமாய்ச் சந்தோஷமாக 1721-ம் ஆு கிரீன்லாந்துக்குப் பிரயாணமாயினார். இவர் ஏறிப்

போன கப்பலின் பேர் நம்பிக்கை. கப்பல்கள் கிரீன்லாந்துக்கு வந்து சேர்வதற்குள் பட்டபாடு கொஞ்சமல்ல. கப்பல் தங்கும் துறைமுகம் சரியாயில்லாததாலும் அபாயமான கழிமுகங்களா யிருந்ததை முன்னிட்டும் கப்பற்காரர் எகிதேயைக் கோபித்துத் திரும்பிவிட யோசனைபண்ணினார்கள். பிறகு கடவுள் செயலால் நல்ல இடத்தில் கப்பலை நிறுத்திக் கரை இறங்கித் தேசத்தைப் பார்த்தபோது மனம் தளர்ந்து போய்விட்டார்கள். அவ்வியாபாரி களுக்கு எகிதே என்பவர் சொன்ன போதனையால், அவர்கள் கொஞ்சக்காலம் தங்கித் தாங்கள் கொண்டுவந்திருந்த சாமான் களினால் வீடுகளைக் கட்டினார்கள். பழைய ஐரோப்பியரில் ஒரு வரையும் இப்போது அவர்கள் காணவில்லை, அவர்கள் குடியிருந்த இடங்களைக்கூடக் காணோம். அத்தீவு வியாபாரத்திற்கும் சரியான இடம் அல்ல என்று வியாபாரிகள் கண்டு, திரும்பிப் போய்விட யோசனைபண்ணினார்கள். இதற்குள்ளாக எகிதே என்பவர் எஸ்கிமோவரிடம் அடிக்கடி போய்ப் பழக்கம்பண்ணி வந்தார். அவர்களுடைய பாஷைக்கு எழுத்தில்லாதிருந்ததால் அதைப் படிக்க இவருக்குக் கஷ்டமாயிருந்தது. கீனு அதாவது இது என்ன என்று பொருள்களைக் காட்டிக் காட்டிக் கேட்டு அவர்கள் சொல்லும் பதிலை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து அவற்றை எழுதி அவர்கள் பாஷையைப் படிப்பார். இப்படி இருக்கும்போது வியாபாரிகள் ஏகோபித்துப் புறப்பட்டார்கள். இவர் அதிகக் கிலேசமுற்று மனைவியிடம் போய்: நானும் உங்கள் நிமித்தமாகப் புறப்படப்போகிறேன் என்றார். அதற்கவள்: அப்படியல்ல, நானும் உம்மோடு இங்கேயே இருப்பேன். தொடங்கின வேலையை விட்டுப் போகமாட்டேன் என உறுதியாய்ச் சொன்னாள். இதுவே அவருக்குப் பெரிய சந்தோஷமாயிருந்தது. பிறகு வியாபாரிகள் இவரைக் கோபித்துத் தங்களுடன் வரும்படி ஏவி இவருடைய வீடுவாசல்களையும்கூடப் பிடுங்கி எறியப் பார்த்தார்கள். என்றா லும் இவர்கள் அங்கேயே இருக்கத் தீர்மானம்பண்ணினார்கள். வியாபாரிகளோ போய்விட்டார்கள். இன்னம் கொஞ்சக்காலத் துக்குத்தான் ஆகாரம் இருந்தது. எகிதே தமது மகனால் எழுதப் பட்ட படங்களைக் காட்டிப் பிரசங்கம் செய்வார். எஸ்கிமோவரது தாழ்ந்த அசுத்தக் குடிசைகளுக்குட் புகுந்து அவர்களோடு சம்பா ஷிப்பார். அவர்களும் தங்கள் பட்சத்தைக் காட்ட இறைச்சியை நக்கிவிட்டு அவருக்குக் கொடுப்பார்கள். தடை செய்தால் கோபம் வரும். ஆனால் அங்கிக்கோக்கர் இவருடைய பிரசங்கத்தை ஜனங் கள் கேட்காதபடி தடைசெய்து வந்தனர். இவர் மோட்சத்

தைப்பற்றிச் சொல்லும்போது அந்த மந்திரவாதிகள்: ஓஹோ, நாங்கள் அந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம், இவர் சொல்லுகிற அப்படிப்பட்ட தொன்றுமில்லை என்று சொல்லுவார்கள். எகிதே இரண்டு எஸ்கிமோப் பிள்ளைகளை வளர்த்து, பாஷைக்கு எழுத்துக்களைத் தாமே உண்டாக்கி அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். முதலில் அவர்களும் ஜனங்களும் இவர் புஸ்தகத்தை வாசிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு: அது இவரோடு பேசுகிறதே, நமக்குத் தெரியவில்லையே, இவர் பெரிய அங்கிக்கோக்கர் என நினைத்துப் பயந்து அவரை மதித்தார்கள். பையன்களில் ஒருவன் இறந்துபோனான். இன்னும் அநேகம் பிள்ளைகளையும் படிக்கவைத்தார். திருச்சரித்திரங்களை அப் பாஷையில் எழுதினார்.

4-ம் பிரதிரிக் இராஜா இறந்தபின் அவருக்குப் பின் வந்த இராஜா கிரீன்லாந்து வியாபாரத்தை நிறுத்திவிடவேண்டும் என்றும்,எகிதேக்கு ஒரு வருஷத்திற்குத்தான் சவரட்சணையளிப்போம், பிறகு அவர் வந்துவிடவேண்டும் என்றும் கட்டளை கொடுத்தார். அப்போதுதான் எகிதேக்கு அதிக கஷ்டம் உண்டாயிற்று. அவர் மனைவியோ: கர்த்தர் தமது வேலைக்குத் துணைபுரிவார் என உறுதிசொன்னாள். அதற்கேற்றுப்போல் அடுத்த வருஷம் இன்னும் சில வருஷங்களுக்கும் வியாபாரம்பண்ண அரசன் உத்தரவு கொடுத்தார். புதிதாய் வந்திருந்த இன்னொரு வேத தூதுவரோடு (மிஷனெரி) தேசத்தைச் சுற்றிப்பார்க்க எகிதே புறப்பட்டார். புறப்பட்டுக் கொஞ்சநாளைக்குப்பின் துவக்கத்தில் அங்கு வந்த நார்வேயர் குடியிருந்த செழிப்பான இடமும் கோவிலும் கல்லறைத் தோட்டமும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தில் எல்லோரும் வந்து குடியேறி இன்னும் அதிக ஊக்கமாய் எஸ்கிமோவரிடத்தில் வேலைசெய்து வந்தார்கள். தமது பிள்ளைகளைக் கல்விகற்கும்படி டென்மார்க்குக்கு அனுப்பி இருந்தார். அவர்களில் மூத்தவனை பவுல் எகிதே குருப்பட்டம் பெற்றுக் கிரீன்லாந்துக்குத் திரும்பி வந்து தமது தகப்பனுக்குச் சுவிசேஷ வேலையில் அதிக உதவியாயிருந்தார். எஸ்கிமோ பாஷையை நன்றாய்ப் படித்துக்கொண்டார். பெரிய எகிதே அதிக வயது சென்றவரானபிறகு இவர் தமது தகப்பனுடைய பெலவீனத்தினிமித்தம் எப்பொழுதும் அவரோடு இருந்துகொண்டே வேலைசெய்தார். அத்தோடு பரிசுத்த வேதாகமத்தை எஸ்கிமோ பாஷையில் மொழி பெயர்த்தார். இப்படி இருக்கையில் எகிதேயும் அவர் மனைவியும் சுயதேசம் வந்துவிடும்படி உத்தரவாயிற்று. இவர்களுக்குச் சற்

றுச் சுகமும் பெலனும் வரவேண்டும் என்பது இக்கட்டளையின் கருத்து. திடீரென்று எகிதே ஐயர் சமுசாரத்துக்கு அத்தேசத்தில் அச்சமயம் பரவியிருந்த வைசூரி வியாதிகண்டு, சில நாட்களுக்குள் அங்கே மரித்துவிட்டாள். இது இவருக்குத் தாங்கவொண்ணுத் துயரமாயிருந்தது. ஒரு இருள் என்னை மூடினது என்று பிற்காலத்தில் இச்சம்பவத்தைப்பற்றிப் பேசும்போது சொல்லுவார். பிறகு அவர் டென்மார்க்குக்குத் தமது பெண்மக்களோடு 1736-ல் வந்தார். அப்போது இராஜாவாலும் ஜனங்களாலும் அதிக மதிப்பு பெற்றவராயிருந்தார். டென்மார்க்கிலுள்ள மிஷன் கலாசாலைக்கு இவரே முதலாளியாக வைக்கப்பட்டார். கிரீன்லாந்துக்கு அனுப்பப்படும் மிஷனெரிகளுக்கு இவர் பாஷையும் வேதசாஸ்திரமும் போதித்துவந்தார். இப்படி அநேக வருஷம் உழைத்த பின் இவர் தமது முதிர்வயதினிமித்தமும் பெலவீனத்தை முன்னிட்டும் வேலைசெய்ய சக்தியற்றுத் தமது மகள்வீட்டுக்குப் போய் அங்கே 1758-ல் கர்த்தருக்குள் அமைதலாய் நித்திரை அடைந்தார். இவருக்குப்பின் இவருடைய மூத்தமகனும் கிரீன்லாந்தில் குருவேலைபார்த்தவருமான பவுல் எகிதே தமது தகப்பனுடைய வேலையைப் பார்க்கும்படி அரசனால் நியமிக்கப்பட்டார். இன்னொரு மகன் குருவாயிராதிருந்தாலும் கிரீன்லாந்தோடு வியாபாரம் செய்பவர்களில் ஒருவராயிருந்து தேவ ஊழியத்தைச் செய்துவந்து கிரீன்லாந்தர் நடுவில் ஆண்டவரது உத்தம பிள்ளையாய் விளங்கினர்.

இப்படியாக இவர் தொடங்கின வேலையால் கிரீன்லாந்தில் தற்சமயம் அநேகக் கிறிஸ்தவக் கோவில்களும் அன்னமிடும் பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டுக் கிறிஸ்தவ வளர்ப்பினல் அநேகர் ஆண்டவரின் அடியாராகி வந்திருக்கிறார்கள். எகிதேயுடைய முதல் வளர்ப்புப் பிள்ளையும்கூட, டென்மார்க்குக்குப் போய்க் கல்விகற்று குருவாக அபிஷேகம்பெற்றுத் தமது சுயநாட்டில் தேவனுக்குத் திருத்தொண்டு செய்தார். இன்னுமநேகச் சுதேசத் தேவ ஊழியர் இப்போது அத்தேசத்தில் உண்டு.

கிரீன்லாந்தருக்காகக் கவலைப்பட்டவர்கள் டென்மார்க், நார்வே முதலிய தேசத்தவர் மட்டுமல்ல, ஜெர்மனியிலுள்ள மொரேவியச் சபையாரும் கரிசனம் கொண்டு தங்கள் சுவிசேஷகரையும் இத் தேசத்தவர்களுக்காக அனுப்பினர்கள். அவர்களில் யோவான் பெக் என்பவர் ஒருவர். அவர் இத்தேசத்திற்கு வந்து சுவிசேஷ வேலை செய்யுங்கால், இவருடைய உடன்தோழர் ஒருநாள் வெளியே போயிருக்கும்போது இவர் தனியாய் உட்கார்ந்து சுவி

சேஷங்களை மொழிபெயர்த்துக்கொண்டு வந்தார். அச்சமயம் அநேகக் கிரீன்லாந்தர்கள் தூரத்திலிருந்து கூடிவந்து: ஐயா, நீர் என்ன செய்கிறீர் என்று கேட்டார்கள். அப்போது அவர் தாம் எழுதுவது என்னவென்பதைச் சொல்ல ஆரம்பித்தார். இதற்குப் பின், இவர் அவர்களை நோக்கி: இந்த வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் யார் என்க, அவர்கள்: அது யாரோ, எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு அவரைப்பற்றி ஒருவரும் சொன்னதில்லை. ஆனால் ஒரு வல்லமைசாலிதான் அதை எல்லாம் உண்டாக்கி இருக்க வேண்டும் என்றார்கள். அப்போது அவர் அந்த வல்லமைசாலியான கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து, அது பாவத்தில் விழுந்தபோது, அதற்கிரங்கி ஒரு இரட்சகரை அனுப்பினதையும், இரட்சகரது ஜீவிய விருத்தாந்தத்தையும் தெளிவாகச் சொல்லி, அவருடைய பாடுகளைப் பற்றிப் பேசினபோது புஸ்தகத்தைத் திறந்து கெத்செமனே பாடுகளை அவர்கள் கேட்கும்படி படித்தார். இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஒரு மனிதன் அவரண்டை நெருங்கி வந்து: ஐயா, தாங்கள் வாசித்ததை மறுபடியும் தயவுசெய்து ஒருமுறை படியுங்கள், நானும் இரட்சிப்படையவேண்டும் என்றான். ஐயரும் அப்படியே வாசித்தார். அவனது ஏங்கலும், பெருமூச்சும், ஐயர் சொல்லும்போது அவன் வாய்க்குள்ளேயே முணுமுணுவென்று செய்த ஜெபமும் அவனுடைய மனமாறுதலை ஐயருக்கு வெளிப்படுத்திற்று. அன்று முதல் அவன் அடிக்கடி குருவினிடம் வந்து போதனை பெற்றுக்கொள்வான். தான் தூரத்திலிருந்ததால் ஊருக்குப் போய்த் தன் கூடாரத்தைப் பெயர்த்து வந்து ஐயர்மாருக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டான். எல்லாக் கிரீன்லாந்தரும் ஆடுகிற மான், மீன் வேட்டைகளுக்கு அவன் இவ்வருஷம் போகவில்லை. ஏனெனில் தான் அங்கே போனால் சத்தியத்தைக்கேட்க முடியாமலும், கேட்டதை மறந்துவிடவும் போகுமே எனப் பயந்து இங்கேயே தங்கிவிட்டான். அதினால் இவனுக்குத் தரித்திரமும், கஷ்டமும் வந்தது. என்றாலும் மனம்தளர்ந்து போகவில்லை. இப்படியாக இவன் இருந்து, பிறகு தன் மனைவி மக்களோடு 1739-ம் வருஷம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். இவனது முந்தினபேர் காஜானக். ஞானஸ்நானப் பேர் சாமுவேல். மனைவி பேர் அன்னாள். அவன் ஓர் உத்தம கிறிஸ்தவனாக விளங்கினான். தன் இன ஜனத்தாரோடு புழங்கினாலும் கிறிஸ்தவ மாதிரியாகவே ஜெபம் முதலிய நடப்பிப்பான்.

இப்படியிருக்க இவனுடைய மைத்துனன் ஒரு அங்கிக்கோக்கனது மகளை மந்திரம்பண்ணிக் கொன்றுவிட்டான் என வர்மம்

வைத்துக்கொண்டிருந்து, வெகுகாலமாய்த் தூரத்திலே இருந்து வந்த அந்த அங்கிக்கோக்கன், ஒரு கூட்டத்தோடு திடீரெனப் புது எர்னூத்துக்கு வந்து, இவனது மைத்துனனை வேட்டைக்கு வாவென நயத்தால் இழுத்துப்போய் எறிவல்லயத்தை அவன்மேல் எறிந்து அவனைக் கொன்றுபோட்டு அவனைப் பழிவாங்கினுன். இதுமாத்திரம் போதாதெதன காஜானக்கையும் அவன் குடும்ப முழுமையையும் பழிவாங்க எண்ணிச் சுற்றிக்கொண்டு திரிந்தார் கள். இச்சம்பவத்தால் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் படியாக காஜானக்கும் தன் குடும்பத்தோடு தூரமான வட கிரீன் லாந்துக்குப் போகும்படி நேர்ந்தது. இது ஐயர்மாருக்கு அதிக வருத்தம். போன காஜானக்கைப்பற்றி ஒரு செய்தியும் தெரிய வில்லை. அநேக வருஷங்களுக்குப்பின் ஒரு ஐயரின் கலியாணத் தினத்தன்று அவன் மறுபடியும் வந்து சேர்ந்தான். பிறகு இங் கேயே தங்கி நல்ல ஊழியனுய் விளங்கினுன். ஒருதடவை இவன் வேட்டைக்குப் போகும் சமயத்தில் நெஞ்செரிவுகண்டு சில தினங் களுக்குள் இறந்துபோனுன். அவன் மரணப்படுக்கையில் அநேக ஞானப்பாட்டுகளைத் தான் பாடினதுமன்றி எல்லாரையும் பாடச் சொல்லிக் களிப்பாய்க் கேட்டுக்கொண்டிருந்தான். பக்கத்தி லுள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சிகொடுத்து: ஆட் டுக்குட்டியானவரின் சிங்காசனத்தண்டை எல்லாரையும் சந்திப் பேன் எனவும் இன்னம் அநேக ஜீவவசனங்களையும் புத்திமதி யாகக் கூறினுன். இப்பக்தனின் மரணம் கிறிஸ்தோர் எல்லாருக் கும் மிகுந்த சஞ்சலத்தை யுண்டாக்கினுலும் அநேகக் கிரீன்லாந் தரின் ஆத்தும நிலைமை தேர்ச்சியடைய இது ஏதுவாயிற்று.

இவனைத்தவிர சாராள் என்ற பேரால் ஞானஸ்நானம் பெற் றுக்கொண்ட ஒரு பெண்ணும் உண்மையுள்ள கிறிஸ்தவளாக விளங்கினுள். கூட்டமாக உபதேசம் கேட்கவந்த கிரீன்லாந்தருள் இவள் ஒருத்தி. பிரசங்கம் கேட்டுக்கொண்டிருக்கும்போதே இவள் அழுதாள். பிறகு தன் இருப்பிடத்திற்குப் போனபின் இவள் கேட்ட சத்திய வசனம் இவளை நல்ல ஜீவியத்துக்கு வழி நடத்திற்று. இவள் தன் ஜாதி வழக்கத்துக்கு மாருக நடந்து வந்ததினுல் எல்லாச் சொந்தக்காரரும் இவளை வெறுத்தார்கள். இவள் ஒருநாள் ஓர் மலைக்குகை பக்கம் போய் முழங்கால்படி யிட்டு ஜெபித்துக்கொண்டிருந்தாள். இவள் செய்த ஜெபமாவது: கர்த்தராகிய இயேசுவே! என் துர்க்குணங்களை என்னைவிட்டு நீக்கும். அவை என்னில் ஒட்டிக்கொண்டேயிருக்கின்றன. உமது வசனத்தைப்பற்றிய கொஞ்ச அறிவுமாத்திரம் எனக்குண்டு, உமது

ஆவியானவரைக்கொண்டு என்னைப் போதித்தருளும் என்பதாம். இப்படி ஜெபம்பண்ணி எழுந்தபோது ஒரு குருவானவர் இவள் அங்கேபோய் முழங்காலிலிருந்ததைத் தூரத்திலிருந்து பார்த்திருந்ததால், கிட்ட வந்து: என்ன செய்தாய் என்க: ஜெபம் பண்ணினேன் என்றாள். அவர் ஆச்சரியப்பட்டுச் சில புத்தி மதிகளைச் சொல்லித் தேவனுக்குத் தோத்திரம் செலுத்திவிட்டுப் போனார். சிலகாலமாக இவள் பந்துக்கள் இவளை அதிகத் துன்பப்படுத்தினதினால்தான் இவள் புது ஏர்னூத்துக்கு ஓடிவந்து அங்கே சாராள் என்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். இவள் உத்தம கிறிஸ்தவளாயும் அநேகம்பேரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தும் கருவியாயும் விளங்கி நீண்டகாலம் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்து அவருக்குள் அமைதலாய் நித்திரையடைந்தாள்.

கைனிக். இவன் தென்கிரீன்லாந்தில் ஒரு பிரபுவைப்போல் மதிக்கப்பட்டவன். ஏனெனில் இவனுக்குத் தலைமுறை தத்துவமாய் அநேகப் படகுகளும் ஆயுதங்களும் வேலைக்காரரும் உண்டு. இவன் மீன்வேட்டை முதலியவைகளில் பெக் ஐயரிடம் வந்தவர்களில் இவனும் ஒரு வீரனாகக் காணுகிறது. அப்போது அவரால் சொல்லப்பட்ட சத்தியங்கள் அவன் அவ்விடத்தைவிட்டு எங்கே போனாலும் அவன் மனதைவிட்டு நீங்கவே இல்லை. ஆனால் அவன் தன் மனச்சாட்சியை அமர்த்திப்போட எண்ணினாலும் அது அவனுக்கு முடியவே இல்லை. என்றாலும் அவன் தன் கொடும் பாதகங்களை எல்லாம் நடப்பித்துக்கொண்டே வந்தான். ஒருதடவை ஒரு பெண்ணைப் பலவந்தமாய்த் தூக்கிக்கொண்டுபோக முயன்றபோது அவள் ஐயர்மாரிடம் அடைக்கலம் புகுந்தாள். அப்போதும் அவன் ஐயர்மார் வீட்டைக் கொளுத்திப்போடுவதாகச் சொன்னான். பிறகு எந்தவிதத்திலேயோ அப்பெண்ணைக் கொண்டுபோய் விட்டான். அவள் அவனுக்குப் பெண்சாதியானாள். கைனிக் 14 வருஷம் தன் மனச்சாட்சியை அமைதிப்படுத்தப் பார்த்தும் முடியவில்லை. இப்படியிருக்கத் திடீரென்று ஒருநாள் தான் வர முற்றிலும் விரும்பாத புது ஏர்னூத்துக்கு இம்மனுஷன் வந்து முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்டவனாகக் காணப்பட்டான். காரணம் என்னவெனில், வேட்டைக்குப் போயிருந்தபோது புயல் காற்றடித்துக் கன்மழை பெய்து படவுகளை உடைத்து ஆட்களையும் அலங்கோலப்படுத்திவிட்டது. இவன் இவ்விடத்திற்கு வந்தது எல்லாருக்கும் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணிற்று. அன்றே, கைனிக் கர்த்தருக்குத் தன்னை

முழுவதும் ஒப்புக்கொடுத்து ஐயர்மாரிடமே தங்கிக் கர்த்தரை நன்றாய் அறிந்துகொண்டு தன் மனைவியோடு ஞானஸ்நானம் பெற்று உத்தம கிறிஸ்தவனாய் முன்னிருந்ததற்கு முற்றும் வித்தியாசமாக நடந்துவந்தான். இவன் குணப்பட்டதினால் பின்னும் அநேகக் கிரீன்லாந்தரும் எழுப்புதலடைந்து மார்க்க ஆராய்ச்சி செய்து சபையில் சேர்ந்தார்கள். இவன் தன் ஜீவ ஓட்டத்தை முடித்துக் கர்த்தருக்குள் பாக்கியமான மரணமடைந்து பேரின்ப லோகம் சேர்ந்தான்.

இப்படியாக அநேக ஆத்துமாக்கள் சபையில் சேர்ந்தார்கள். புதுக்குருமாரும் மொரேவிய தாய்ச்சபையிலிருந்து வந்தார்கள். அநேகப் பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டு அங்கே ஜர்மன் பாஷையும் கிரீன்லாந்து பாஷையும் கற்பிக்கப்பட்டு வந்தன. சங்கீத வகுப்புவைத்து ராகக்கியானத்தையும் ஐயர்மார் விர்த்திபண்ணினார்கள். கிரீன்லாந்தில் மீன்பிடித்தல், வேட்டையாடல் முதலிய தொழில் தெரியாதவர்களைக் கேவலமாய்ப் பேசுவது வழக்கமாயிருந்ததினால், குருமார் கிறிஸ்தவப் பிள்ளைகளுக்குக் கேவலப்பேர் வாராதபடி மேற்கண்டவற்றோடு இத்தொழில்களிலும் பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் பயிற்றிவந்தார்கள்.

இன்னும் சிலர் வந்து சேரச் சேர, புது எர்னூத்தில் சபையார் ஜாஸ்தியாகிவிட்டதால் பின்னும் சில புது மிஷன் ஸ்தானங்களை ஏற்படுத்தினார்கள். இவ்விதமாக அநேக மிஷன் ஸ்தானங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அங்கங்கேயுள்ள எல்லாக் கிரீன்லாந்தரையும் சபையில் சேர்த்தார்கள். இப்படியாக அத்தேசத்தார் பரம காரியங்களிலும் உலக நாகரீகத்திலும் ஆச்சரியமான விதமாய்த் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். கிரீன்லாந்திலுள்ள எல்லாச் சபைகளும் 1900-ம் ஆண்டு டேனிஷ் லுத்தரன் திருச்சபைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டன.

C. L. S. PRESS, MADRAS—1926

சென்னபட்டணத்துச்

## சன்மார்க்கச் சிறு புத்தக சங்கத்தார்

## விற்பனைசெய்யும் புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| என் பாட்டனார் ... ... ... ... ... | 0 | 3 | 0 |
| என் தங்கை (புதிய பதிப்பு) ... ... | 0 | 4 | 6 |
| மாதர் ஜோதி ... ... ... ... ... | 0 | 1 | 6 |
| கமலா ... ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| அன்பு வெற்றி அடைந்த கதை ... ... ... | 0 | 4 | 0 |
| இந்தியாவும் மிஷனும் ... ... ... ... | 0 | 6 | 0 |
| ஏலியும் சாமுவேலும் சவுலும் ... ... ... | 0 | 3 | 0 |
| ஆயனும் ஆடும் ... ... ... ... ... | 0 | 10 | 0 |
| புருஷனும் மனைவியும் ... ... ... ... | 0 | 0 | 6 |
| கிறிஸ்துநாதர் அனுசாரம் முதல் இரண்டு புஸ்தகங்கள் | 0 | 4 | 6 |
| கிறிஸ்துநாதர் அனுசாரம் மூன்ரும் புஸ்தகம் ... | 0 | 6 | 0 |
| நித்திய குமாரக்கடவுள் ... ... ... ... | 0 | 3 | 0 |
| ஆத்தும ஆதாய தேசிகரும் ஆட்களை ஆதாயப்படுத்த அவர் அனுசரித்த முறைகளும் ... ... | 0 | 4 | 0 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவியசரித்திரம் ... ... | 0 | 3 | 0 |
| பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் பொருள் அடக்கமும் சரித்திரச் சுருக்கமும் ... ... ... | 0 | 8 | 0 |
| புஷ்பக்கூடை அல்லது உண்மைநெறிப்பலன் ... | 0 | 5 | 0 |
| சாது சுந்தர்சிங் ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| எஸ்தர் அரசாணிமாலை ... ... ... ... | 0 | 0 | 9 |
| நித்தியாநந்தக்காதல் ... ... ... ... | 0 | 1 | 0 |
| புதிய ஏற்பாடும் அதின் ஆசிரியர்களும் ... ... | 0 | 5 | 0 |
| இயேசுவின் சிந்தை ... ... ... ... | 0 | 2 | 6 |
| ஹரிதாசி அல்லது மதுபானத்தால் நாசமடைந்ததோர் குடும்பம் ... ... ... ... ... | 0 | 4 | 6 |
| மரண ஜெபம் ... ... ... ... ... | 0 | 1 | 0 |
| மதுவிலக்கப் போதனு கீர்த்தனங்கள் ... ... | 0 | 0 | 9 |
| பாலர் கீர்த்தனங்கள் ... ... ... ... | 0 | 3 | 0 |
| பரதேசியின் மோட்சபிரயாணம் ... ... ... | 1 | 6 | 0 |
| நன்னெறிக் குறிப்பு ... ... ... ... | 0 | 1 | 0 |
| திருவடி உபதேசம் ... ... ... ... | 0 | 6 | 0 |
| தின தீபிகை ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| ஞானரசவாதம் ... ... ... ... ... | 0 | 2 | 0 |

1 E. 2 M.